அகல்யாவின் வாயிலாக உங்களையெல்லாம் 'எம்மேல நெலா பொழியுதடி!' நாவலுடன் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி.

2003 முதல் தமிழகத்தின் அனைத்து பிரபல மாத, வார இதழ்களிலும் எழுதி வரும் நான், இதுவரையில் 43 சிறுகதைகள்... 21 நாவல்கள் மற்றும் கவிதைகளுடன் இரண்டு



தொடர் கதைகளையும் எழுதியுள்ளேன். தற்போது 'காற்றாய் வருவேன்...' என்ற ஆவிகள் பற்றிய உண்மைக்கதை ஒன்று பிரபல பத்திரிகையில் தொடராக வெளிவந்து கொண்டிருக்கிறது.

மேலும் 25 திருக்குறளை மையமாகக் கொண்டு நடைமுறையில் நடக்கும் விஷயங்களை வைத்து 25 சிறுகதைகளையும் எழுதியுள்ளேன். இவைகளுடன் காகிதப்பூக்கள் எனும் தலைப்பில் அரவாணிகள் பற்றிய நாவல் ஒன்றை எழுதி சென்னை பிரஸ் கிளப்பில் சமீபத்தில் எஸ்.பி. முத்துராமன் தலைமையில் வெளியிட, காவல்துறை உதவி ஆணையாளர் மாடசாமி பெற்றுக் கொண்டார். இவ்விழாவில் திரைப்பட இயக்குநர் தருண்கோபி, பொதிகை டி.வி. நிர்வாகி பாலரமணி, அறிவாலயம் கயல் தினகரன், நக்கீரன் சப் எடிட்டர் லெனின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதுவரையிலான எனது எழுத்து பயணத்திற்காக சமீபத்தில் மயிலாப்பூர் அகில இந்திய கல்சுரல் அகாடமி சார்பில் சிறந்த எழுத்தாளருக்கான கல்பனா சாவ்லா விருதினை வழங்கியதை பெருமையாக கருதுகிறேன்.

இனிய வாசகரே -

ஆதவன் - ஆதவனைப்போல் தூய்மையானவன். அவன் வாழ்வில் முழுநிலவினைப் போல் குடி வருகிறாள் அகல்யா. தீபத்தின் தூய்மை அவளுள். அவளை அணைக்க துடிக்கும் தீப்பந்தமாய் நந்து. உதய், நிதிலா, அர்ஜுன், நிலா... என்று இவர்களைச் சுற்றி பின்னப்பட்டு இருக்கும் பாசவலைகள்... இவர்களால் நடக்கும் நிகழ்வுகள்... இறுதியில் அகல்யாவும், ஆதவனும் இணைந்தார்களா என்பதே "எம்மேல நெலா பொழியுதடி..!" படியுங்கள். ரசிப்பீர்கள் என்று எண்ணுகிறேன். தங்களின் மேலான கருத்துகளுக்காக காத்திருக்கும்,

அன்பு சகோதரி...

SUPPLEMENT ISSUE OF Tamilaga Vellithirai Cheythigal R.Dis. No. 1483/2003





# எம்மேல நெலா பொழியுதடி..!

• லதாசரவணன் •




# அகல்யா

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக்கொளுத்துவோம்!

முழுமையான மகளிர் குடும்ப நாவல்

மீரா: 1 அகல்யா: 7

ஆசிரியர்
**எம்.ஆர். ராவ்**

இணை ஆசிரியர்
**பாலன்**

நிர்வாக ஆசிரியர்
**குமார்**

இதழ் வடிவமைப்பு
**சிவா டிசைன்ஸ்**

- நிர்வாக அலுவலகம் -
ஸ்ரீ விக்னேஷ் பப்ளிகேஷன்ஸ்,
24, முத்துரங்கன் சாலை,
அருள்மிகு விநாயகர் கோவில் அருகில்,
தி.நகர், சென்னை - 600 017.
செல்: 9941153300
Email: agalyarao@gmail.com

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும்
பெயர்களும் கற்பனையே! இதழில்
வெளியாகும் விளம்பரங்களின்
நம்பகத் தன்மைக்கு
அகல்யா நிர்வாகம் பொறுப்பல்ல!

தேர்வாகாத படைப்புகளைத்
திருப்பி அனுப்ப இயலாது. எனவே,
படைப்புகள் அனுப்புவோர் தங்கள்
வசம் ஒரு பிரதி வைத்துக் கொள்ளவும்.


## 1

எங்கும் பனி மூட்டம் உனை
நினைக்கும் போது மட்டும் ஏன்?
பருவங்களில் உடனடி மாற்றம்,
நீல போர்வை போர்த்தப்பட்ட
ஆகாயத்தின் கீழ் வெள்ளைப் பனியாய்
உன் நினைவுகள் பஞ்சென அழுத்தும்
அந்த மடிச் சுகத்தினை
எண்ணி நெஞ்சு வேகிறது.
குளிர்விக்க மழையாய் நீ வர
என் தரிசு நிலம் ஏங்குகிறது.

ஆதவன் வெகு வேகமாய் கணினியைத் தட்டிக்கொண்டு இருந்தான்.

உதய்.........

எஸ் ஸார்... ஆதவனின் முன் பவ்யமாய் அமர்ந்து இருந்த இளைஞன் பேசினான்.

இந்த முறை டிஸைன்ஸ் எல்லாம் ரொம்ப நல்லா வந்திருக்கு! இதை உடனே பேக்ஸில் அனுப்பி அப்புறம் நம்ம மில்லில் இருந்து ஆர்டர் எடுக்கச் சிலர் விரும்புறாங்களாம். அவங்க ஆர்டர்ஸ் எடுத்ததும் அதுக்கான கொட்டேஷன்ஸ் எல்லாம் ரெடி பண்ணனும். அதனால் நான் ஊருக்குப்போக வேண்டி வரும் ஆபீஸைப் பார்த்துக்கோங்க. நந்து எது சொன்னாலும் சீரியஸா எடுத்துக்க வேண்டாம்.

எஸ் ஸார்..

நாதன் ஸாரீஸ், ஆராதா டெக்ஸில் இருந்து பேமெண்ட் வந்திருக்கு ஸார். அசோக்கை அனுப்பி பேங்கில் கட்டிடச் சொல்லட்டுமா?!

செய்யுங்க... இயர் எண்டிங்ஸ் ஆடிட்டிங் சமயம் வேற. ஆடிட்டர் போன் பண்ணா கணக்கெல்லாம் ரெடி பண்ணிடச் சொல்லுங்க! புதுசா ஒரு லேடி டிஸைனர் இன்னைக்கு வர்றதா, அந்த பிரைவேட் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸில் இருந்து சொன்னாங்க இல்லையா.?

ஆமா ஸார். நேத்து ஈவ்னிங் போன் வந்தது.

எத்தனை மணிக்கு போன் பண்றதா? ஐ மீன் அனுப்புவதா சொன்னாங்க.

பத்து மணிக்கு ஸார்.

சரி உதய்! நீங்க போய் வேலையைப் பாருங்க.அந்த லேடி வந்தா ரூமிற்கு அனுப்புங்க.

எஸ் ஸார்...

உதய்

வெளியேறவும், ஆதவன் தன் மொபைல் போனில் எண்களை ஒத்தியெடுத்து நந்து, நான் ஆதவன்.

...........!

நாளை நான் மில்லுக்குப் போகிறேன் நீயும் கூட வர்றியா?

...........!

சரி கிளம்பியாச்சா?

...........!

எப்போ வர்றே?

...........!

அப்புறம் புதுசா ஒரு ஸ்டாப் ஜாயின் பண்றாங்க?!

..........

லேடி...தான பெய்ர் சொல்லலை, வந்ததும் சொல்றேன். அப்போ வைச்சிடவா, காலையிலே தயாரா இரு! நானே வந்து கூட்டிட்டுப் போறேன். பை...! பேசிய ஆதவன் நல்ல சந்தன நிறம், அழுத்திப் பிடித்தால் சிவந்து விடும். கருகருவென்று சுருளாய் முடி, அடர்த்தியான மீசை இழுத்துப் பார்க்கத் தோன்றும். இளம் ப்ரவுன் நிறத்தில் எக்ஸ்ரே கண்களும், ரோஜா நிற உதடுகளும் அவனின் ப்ளஸ்கள். சராசரிக்கும் கூடுதல் உயரம். அதற்கேற்ற உடற்கட்டும் உடைய கம்பீரமான ஆண்மகன். ஆதவனும், நந்தகுமாரும் இளவயது



நண்பர்கள், தந்தையர்களின் உறவுபோல் இவர்களுள்ளும் தொடர்ந்து வருகிறது. இருவரும் ஒன்றாகவே படித்தார்கள். தொழிலும் துவங்கினார்கள். திருமணம் மட்டும் நந்துவிற்கு முதலிலேயே நடந்துவிட்டது. கல்லூரியில் படிக்கும்போதே வீணாவை காதலித்து மணந்து கொண்டான். வீணாவும் நல்ல அழகும், குணமும் உள்ளவள். நந்துவின் மலருக்கு மலர் தாவும் குணம் அவளுக்கு தெரிய வரும் நேரம்... ?! இருவருக்குமே பிரச்சனைகள் வெடிக்க ஆரம்பித்தது? ஆதவனும் கூட நண்பனை எத்தனையோ முறைக் கண்டித்திருக்கிறான்.

நந்து யாருக்கும் அடங்குவது இல்லை, கடவுளே இத்தனை தீயவனிடம் வீணா வாழ்வது பிடிக்காமல் ஒரு விபத்தில் எடுத்துக் கொண்டார். அதன் பின்னர் தனிக்காட்டு ராஜாவாகிப் போனான் நந்து. ஆதவன் எத்தனையோ முறை சொல்லிப் பார்த்துவிட்டு, சில காலம் போனால் தன்னாலே திருந்தி விடுவான் என்று விட்டு விட்டான். ஆனால், அவன் திருந்தியபாடில்லை, நண்பனை அப்படியே விடவும் மனமின்றி துணை நிற்கிறான் ஆதவன். அழகான வண்ண டிஸைன்களை கணினியில் வரைந்து அதை தங்கள் மில்லில் புடவைகளாக உருவாக்கி ஜவுளிக் கடைகளுக்கு மொத்தமாய் விற்பனை செய்வதுதான் இவர்களின் தொழில். சிரத்தையாய் ஆதவன் ஏற்று நடத்தும் விதத்தில் தான் உயரங்களை எட்டிப் பிடித்திருக்கிறான். ஆதவன் அறையில் ஏஸி சன்னமாய் கசிந்தது. தன் பெட்டியில் சில முக்கியமான பொருட்களை அடுக்கிக் கொண்டு இருந்தான்.

உதய் அறைக்குள் வந்து, "ஸார் அந்த லேடி வந்திருக்காங்க.."

வரச் சொல்லுங்க உதய்..

அடுத்த பத்து நொடிகளுக்குள், கொலுசு சப்திக்க வந்தாள் அவள், அழகான வெள்ளை நிற காட்டன் புடவை ஒடிசலான உடலைச் சுற்றி இருந்தது. நீண்ட கூந்தலை இறுகப் பின்னியிருந்தாள். கண்களில் ஒரு தனி தேஜஸ் தெரிந்தது. சற்றே முன்புறமாய் விழுந்த கேசமும், நெற்றியின் ஓரம் முளைத்திருந்த வியர்வையும் கூட கூடுதல் அழகைத் தந்தது. அன்னம் போல் நடந்து வந்தவளை அமரும்படி சைகை காட்டினான் ஆதவன். ஏனோ அந்தப் பெண்ணிடம் இருந்து பார்வையை அகற்றவே முடியவில்லை, நாகரீகம் கருதி.. மிஸ்....!

அகல்யா...

குரல் ஐஸ் கிரீமாய் இனித்தது.

அகல்யா மே ஐ நோ யுவர் குவாலிபிகேஷன்?

ஆதவனின் கேள்விக்கு தன்னிடம் உறவாடிய பைலை ஆதவனிடம் நீட்டினாள். கண்களைத் தாழ்த்தி பைலைப் புரட்டினான். அகல்யா அறையைச் சுற்றிலும் கண்களால் அளந்தாள். சில புகைப்படங்கள், தனியாய் சிறிய பூஜையறை, அதனுள் ஒளிர்ந்த விளக்கு, விசிட்டர்ஸ் அமர குஷன் சோபாக்கள், சின்னதாய் டீப்பாய், அதன் மேல் நாளிதழ்கள் சில! பிளவர் வாஷ், வாட்டர் கூலர், வட்டமானதும் இன்றி, சதுரமாகவும் இன்றி ஒரு மேசை, அதில் இரண்டு வண்ணத் தொலைபேசி, பென் பேட், பெயர் பலகை கணினி என்று அலுவலக இத்யாதிகள் அங்கு இடம் பிடித்து இருந்தன.

மிஸ் . அகல்யா உங்களுக்கு நல்ல நாலேஜ் இருக்கு, ஆனா அனுபவம் இல்லையே?

என் திறமையே எனக்கு அனுபவத்தைத் தரும். ஸார் எதற்கும் ஆரம்பம் என்று ஒன்று உண்டல்லவா, என் வேலையை திறம்பட செய்ய நீங்கள் ஒரு வாய்ப்பு கொடுத்தால்...! என்னால் முடியுமென்று நம்புகிறேன்.

உங்க தன்னம்பிக்கைக்கு வாழ்த்துக்கள், அகல்யா, நம்ம அலுவலக வேலை என்னன்னா, பட்டுப் புடவைகள், காட்டன், சில்க்ஸ், பனாரஸ் என்று நம் மில்லில் உள்ள புடவைகளுக்கு டிஸைன்ஸ் வரையத்தான் நீங்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறீர்கள். இந்த வேலைக்கு நல்ல ரசனையும் கிரியேட்டிவ் மைண்டும் வேண்டும்.அதனால் முதல் பத்து நாட்கள் நீங்க போடும் டிஸைனைப் பார்த்து உங்க வேலை கன்பார்ம் ஆகும் சம்மதமா?

நன்றி ஸார்.. சிபாரிஸிலோ, பணமோ, இல்லாமல் என் திறமைக்காக வேலை கிடைப்பது எத்தனை பெரிய மரியாதை, இப்போதே வேலையைத் துவங்க நான் தயார்.

நல்லது... சம்பளம் மற்ற விஷயங்களை என் பார்ட்னரிடம் பேசிவிட்டு நான் சொல்கிறேன்... வாழ்த்துக்கள்... என்றவன் இண்டர்காமில் உதய்யை அழைத்தான்.

எஸ் ஸார்.

இவர் மிஸ்டர்! உதய்... உங்க சீனியர் ஸ்டாப்; உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டா இவர்கிட்டே கேட்டுக்கலாம்... உதய், அகல்யாவிற்கு அவங்க அறையைக் காட்டுங்க, ஆதவன் அவளிடம் பைலைத் தந்துவிட்டு விடை கொடுக்க, உதய்யின் பின்நகர்ந்தாள்,



கதவைத் தாண்டும் முன் தன்னையும் மீறி ஆதவனின் புறம் திரும்பினாள் அகல்யா.

அதே நேரம் ஆதவனும் இவளையே பார்த்து இருந்ததால் மெல்லப் புன்னகை செய்ய விழிகளை இருமுறை மூடித் திறந்து விட்டு அவசரமாய் வெளியேறினாள். அகல்யா அந்த அறையை விட்டு வெளியேறினாலும், மனதில் அந்த முகம் குடியேறி விட்டது போல் இருந்தது. முதல் பார்வையிலேயே இத்தனை ஈர்ப்பா, சில நிமிடங்களிலேயே யுகம் யுகமாய் பழகிய உணர்வு எதனால்? யாரிவள்? இத்தனை நாளாக எங்கே போனாள். விழிகள் இரண்டும் என்னை கட்டிப் போட்டு விட்டதே?! மேற்கொண்டு யோசிக்க விடாமல் தொலைபேசி அழைப்பில் கலைந்தான்.

உதய் முன்னே நடக்க பின்னே சென்றவளின் மனம் மட்டும் அந்த அறையிலேயே தங்கிவிட்டது. எத்தனை அழகான முகம். ஆண்மையும், கம்பீரமும் கலந்த உருவம், வசீகரமான சிரிப்பு, உயிரை ஊடுருவும் காந்த விழிகள்.

## உங்களுக்கு தெரியுமா?

★ வாரத்தில் ஒருமுறையோ இரண்டு முறையோ முருங்கைக்காயை உணவாக உபயோகித்து வந்தால், ரத்தமும் சிறுநீரும் சுத்திகரிக்கப்படும்.

★ முருங்கை இலையில் இரும்பு, தாமிரம், சுண்ணாம்புச் சத்துகள் இருக்கின்றன. இந்த இலைகளை நெய்யில் வதக்கி சாப்பிட்டால் ரத்தசோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல ரத்தம் ஊறும். அதோடு, பல் கெட்டிப்படும். தோல் நோய்கள் நீங்கும்.

★ முருங்கை விதையைக் கூட்டு செய்து சாப்பிடலாம். இது மூளைக்கு நல்ல பலத்தை தரும். மேலும், தாது விருத்தியும் உண்டாகும்.

★ முருங்கை இலைச்சாறுடன் பால் கலந்து குழந்தைகளுக்கு தந்தால் ரத்தம் சுத்தமாகும். எலும்புகள் வலுவாகும். கர்ப்பிணிப் பெண்களும் இதை உட்கொண்டு வரலாம்.

★ முருங்கை இலை காம்புகளை நறுக்கி, மிளகு ரசம் வைத்து, சாப்பாட்டுடன் சேர்த்து உட்கொண்டு வந்தால் கை, கால் உடம்பின் வலிகள் நீங்கும். அதேவேளையில், அது சிறுநீரைப் பெருக்கும்.

அகல்யா பயின்றது ஆண், பெண் இரு பாலரும் படிக்கும் கல்லூரியில்தான். யாரிடமும் தோன்றாத ஒருவித ஈர்ப்பு இவனைக் கண்ட தினமே அந்த நிமிடமே மனம் பூரித்ததே. விழிகளை அவன் முன்னிருந்து அகற்றவே முடியவில்லையே?! இனம் புரியாத இன்ப அவஸ்தை ஒன்று மனதிற்குள் பூத்தது.

வெல்கம் மிஸ் அகல்யா. இதுதான் உங்க அறை உட்காருங்கள்.

நன்றி சொல்லிவிட்டு குஷன் நாற்காலியில் பொதிந்தாள்.

அவள் முன் ஒரு கருப்பு நிற காம்பேக் கம்ப்யூட்டர் சிரித்தது. ஸ்கிரீனில் அழகான பூக்கள் கண்களைப் பறித்தது.

போட்டோ ஷாப் போங்க அகல்யா.. நாம முன்னாடி போட்ட டிஸைன்ஸோட லே அவுட் இருக்கும் பாருங்க... அப்புறம் உங்க ஐடியாவிலே ஏதாவது கிரியேட் பண்ணுங்க... கங்கிராட்ஸ்.

தேங்க்ஸ் ஸார்.

ஸார் வேண்டாமே... உதய்ன்னு பெயர் சொல்லியே கூப்பிடலாம். எனக்கென்னவோ உங்களைப் பார்த்தா என் பெரியம்மா மகள் போலவே இருக்கு.

அப்போ அண்ணான்னு கூப்பிடவா?

நோ.. நோ...அப்புறம் எல்லாரும் என்னை வயசானவன்னு நினைப்பாங்க. சோ கால் மீ உதய். அவள் புன்னகையுடன் தலையசைத்தாள்.

நீங்க எந்த ஊர்.

காஞ்சிபுரம்.

ஆஹா.. அருமையான ஊருங்க. அதுக்கு கோயில் நகரம்ன்னு கூட பேர் உண்டு.

நீங்க காஞ்சிபுரம் வந்து இருக்கீங்களா?

ஓரிரு தடவை.

கூடப்பிறந்தவங்க யாரும்..

யாருமில்லை... நான் ஒரே பெண்... அப்பா சமீபத்தில் தான் இறந்தார்... அம்மா காஞ்சிபுரத்தில் இருக்காங்க...

என்னைப் பற்றி சொல்லிடறேன்... உஷா என் மனைவி... நாங்க லவ் மேரேஜ் பண்ணிக்கிட்டோம்.... சந்தோஷமான வாழ்வு... நிலான்னு ஒரு குட்டி தேவதை.

நல்லா என்ஜாய் பண்றேன்னு சொல்லுங்க.

ம்... ?!



வாழ்ந்த வாழ்வின் நினைவுச் சுவடுகளைப் படித்துக் கொண்டிருக்கிறேன்.

உதய்.. நீங்க..

நான் ஒரு விடோயர்...

ஸாரி...

பரவாயில்லை. உஷாவுக்கு ஏதோ பெயர் தெரியாத வியாதியைப் பற்றிச் சொன்னாங்க. அதுவே அவளை கொண்டும் போயிடுச்சு.

அவன் முகத்தில் முதலில் இருந்த புன்னகை மறைந்தது. அவளிடமும் அதே சோகம் ஒட்டிக் கொண்டது.

திடுமென சரி அதை விடுங்க... கவலைகளை மறந்தாத்தான் காற்று போல சுதந்திரமாக சுவாசிக்க முடியும்... நீங்க வேலையைத் தொடங்குங்க... ஆதவன் ஸார் ரொம்பவும் நல்லவர்... ஆனால் வேலை விஷயத்தில் கண்டிப்பு. வீண் அரட்டை பிடிக்காது. நான் என் அறைக்குப் போகிறேன். ஏதாவது சந்தேகம்ன்னா என்னை கூப்பிடுங்க... என்று திரும்பி நடந்தான்.

அகல்யா மௌஸை இயக்கினாள். கண் முன்னே லே அவுட்டில் டிசைன்ஸ் விரிந்தது. அதில் ஆதவனின் முகம் தோன்றியது. விடைகாண முடியாத கேள்வியாய் குழம்பினாள் அகல்யா.

## 2

எனக்குள் பரவிய உன்
நினைவுகளை நிரப்ப முடியாமல்
நிரம்பி வழிகிறது இதயம்
என்னுள் ஒரு கனவு அழிகிறது
உன் நினைவு சுடுகிறது.
எங்கே என் கனவுகள்
முற்றுப் பெறாமல் தொலைந்து விடுமோ...
என்று காதலின் துடிப்புகள் கேட்கிறதா...

மாலை நான்கு மணி அளவில் ஆதவன் அகல்யாவின் அறைக்கு வந்தான். சில லே அவுட்களை ஸ்டென்ஸில் வரைந்து

கொண்டிருந்தவள், தன் அறையில் ஆதவனைக் கண்டதும் திகைத்து எழுந்தாள்.

நத்திங், அகல்யா.. உங்களுக்கு எல்லாம் சரியாக இருக்கிறதா? நாம் பிறக்கும் நாளில் இருந்தே நம்மிடம் முதலில் பார்க்கும், செய்யும் விஷயங்களில் ஆர்வம் அதிகரிக்கும்... அந்த முதல் நிகழ்வு மாறாது... அதேபோல் இன்று அலுவலகத்தில் முதல் நாள் எப்படி உள்ளது... உங்களுக்கு?

குட்... ஸார். ஏற்கனவே தயாரான டிஸைன்களைப் பார்த்தேன்... நானும் சிலவற்றிற்கு அவுட் லைன் போட்டு இருக்கிறேன்.

குட், இங்கே உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இருக்காது அகல்யா. யூ பீல் ஹோம்லி, எங்கே தங்கியிருக்கிறீர்கள்?

அடையாறில் .. நானும் என் தோழியும்...

ஏன்.? உங்கள் பெற்றோர்கள்.

காஞ்சிபுரத்தில் அம்மா இருக்காங்க. அப்பா வாழ்ந்த இடம், அதை விட்டு வர அவங்களுக்கு மனமில்லை, அதனால் நான் மட்டும் தோழியின் வீட்டில் தங்கி வேலைக்கு வருகிறேன்.

யூ ஆர் லக்கி அகல்யா, உங்களுக்கு அம்மா இருக்கிறார்கள். ஆனால் எனக்குன்னு யாரும் இல்லை, பணம் பதவி இருந்து என்ன புண்ணியம், அன்பு காட்ட ஆள் இல்லையே.

உங்க பேரண்ட்ஸ்..

அம்மா சின்ன வயசிலேயே தவறிட்டாங்க. அப்பா சமீபத்தில்தான்..

அவனின் நிலைக்காக பேதை இவள் மருகினாள்.

அப்புறம் நான் ஒரு முக்கியமான விஷயமா வந்தேன். இந்த கம்பெனிக்கு இன்னொரு உரிமையாளரும் உண்டு. பெயர் நந்தகுமார். என் நண்பனும் கூட, அவனை உங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும், போவோமா?

கையிலிருந்த பென்சிலை ஸ்டாண்டில் போட்டு விட்டு ஸ்டென்ஸில் பறக்காமல் இருக்க பேப்பர் வெயிட்டை வைத்து அவனுடன் நடந்தாள். சொற்ப தூரமே என்றாலும் அவனருகில் நடப்பது பரவசத்தை ஏற்படுத்தியது. ஆனால், போகுமிடம் அந்த உணர்வை முற்றிலும் மறக்க வைக்கப் போகிறது என்பதை உணராமல்!



ஆதவனுடன் அந்த அறைக்குள் நுழைந்தவுடன் ஏதோ புகை மூட்டத்தின் நடுவில் சிக்கிக் கொண்டது போல் அங்கு மதுவாசனையும், சிகரெட் புகையும் போட்டிப் போட்டுக் கொண்டிருந்தது.

இவர்தான் மிஸ்டர். நந்தகுமார்... என்று அறிமுகப்படுத்தியவன். நந்து என்னடா இது ஆபீஸிலேயே? என்று அவன் கையில் இருந்த கிண்ணத்தை பிடுங்கினான் நண்பனைக் கடிந்தபடியே?!

அவனுக்கும் ஆதவனின் வயதுதான் இருக்கும். ஆனால், அவனின் கெட்ட பழக்க வழக்கங்கள் சற்றே மூப்பாய் காட்டியது. வயிறு சரிந்து உடல் பெருத்து, தலை சுற்று வழுக்கை வாங்கி முதற் பார்வையிலேயே அவனை அகல்யாவிற்குப் பிடிக்கவில்லை, மரியாதை நிமித்தம் அவனை நோக்கி இரு கைகளைக் கூப்பினாள். அந்த நந்தகுமார் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தான். கைகளில் சிகரெட் புகைந்து கொண்டு இருந்தது.

இவங்க பேர் அகல்யா, நம்ம ஆபீஸில் டிஸைனரா ஜாயின் பண்ணி இருக்காங்க...

வாவ்..! எவ்வளவு சம்பளம் நிர்ணயம் செய்திருக்க ஆதவா? கேள்விதான் நண்பனிடம் சென்றதே தவிர பார்வை இவள் மேல் ஊர்ந்தது.

அகல்யா நெளிந்தாள்.

இன்னும் முடிவு பண்ணலை, பத்து நாள் டிசைன் பண்ணிட்டு பிறகு?!

ஏன்? இவ அழகிற்கு எத்தனை தந்தாலும் தகும். இவன் ரொம்ப கஞ்சம் அகல்யா! உனக்கு என்ன தேவையாய் இருந்தாலும் என்னிடம் கேள். பேச்சு குழறலாய் இருந்தது. அகல்யாவின் அருகில் நெருங்கியவனின் மீது வீசிய விஸ்கி வாசனை அவளை முகம் சுழிக்க வைத்தது. அகல்யா என்னுடைய தேவைகளை ஐ மீன் ஆபீஸ் சம்பந்தப்பட்டவைகளை நான் உன்னிடமே பெற்றுக் கொள்கிறேன், என்று பல்லை இளித்தான். அந்தப் பற்களில் படிந்திருந்த நிகோடின் கறை வெறுப்பை உண்டாக்க அவஸ்தையாய் ஆதவனிடம் பார்வையைத் திருப்பினாள்.

நந்தகுமார் அவளைப் பார்வையால் விழுங்கியதையும், அகல்யா தலை குனிந்து இருப்பதையும், ஆதவன் கவனிக்கத் தவறவில்லை, அவன் நிதானமாகத்தான் இருக்கிறான் என்று முட்டாள் தனமாய் உணர்ந்து கொண்டான். அது எவ்வளவு

தவறு என்பதையும் சில நிமிடங்களிலேயே புரிந்து கொண்டான். அகல்யாவின் அருகில் நின்ற நந்தகுமார் நான் சொல்வது சரிதானே என்று அவள் தோளில் கை வைக்க முயல அதை ஊகித்தவள் போல விலுக்கென்று பின்னோக்கி நகர்ந்தாள். குடி போதையின் அரவணைப்பில் இருந்ததால் அகல்யாவின் தோள்களைப் பற்ற நினைத்தவன் நிலை குலைந்து தரையில் விழுந்து விட்டான்.

நந்து! கூக்குரலோடு நண்பனை தூக்கி அவனுடைய இருக்கையில் அமர வைத்த பிறகுதான் ஆதவனின் கண்கள் அகல்யாவைத் தேடின! நந்துவோ இன்னமும் அரற்றிக் கொண்டிருந்தான். இப்போது அவனிடம் பேசி எந்தப் பயனும் இல்லை, அதை புரிந்து கொள்ளும் திறனும் இல்லையென்பதை உணர்ந்து, நேராக அகல்யாவின் அறைக்குச் சென்றான். திறந்திருந்த கதவு அவனை வரவேற்றது. தன் மேசையின் மேல் தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தாள் அகல்யா..

தயக்கத்துடன் அகல்யா... என்றான்.

மெல்லத் தலையைத் தூக்கிப் பார்த்தவளின் கண்களில் நீர் திரண்டு முத்துக்களாய் உதிர்ந்தது. உதடுகளை அழுந்த பற்களால் பற்றி உணர்வை அடக்கினாள்.

மன்னிப்பு கேட்க வேண்டியது நான்தான். வந்த முதல் நாளே இப்படியொரு தர்ம சங்கடமான நிலைமையை நான் உருவாக்கி இருக்க வேண்டாம். நந்து நல்லவன் தான், சமீபத்தில் அவன் மனதில் சில சங்கடங்கள் . அதனால்தான் இப்படி நேரம் காலம் தெரியாமல்! நானும் எத்தனையோ முறை சொல்லிப் பார்த்துவிட்டேன். அவன் குரலில் உண்மையான வருத்தம் தொனித்தது. அகல்யா ஏதும் பேசவில்லை, மௌனமாய் இருந்தாள். இவனுக்குத்தான் தர்ம சங்கடமாய்ப் போனது. எத்தனை அழகாய் வந்தாள், அன்றலர்ந்த பூவைப் போல, ஓவியனின் தூரிகையில் உயிர் பெற்ற சிலை போல, அவளைப்போய் கஷ்டப்படுத்தி விட்டேன், நான் மீண்டும் ஒருமுறை மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் அகல்யா. மீதி வேலையைக் காலையில் பார்த்துக் கொள்ளலாம் நீங்க கிளம்புங்க...

அகல்யா அவனை ஒருதரம் ஊடுருவிப் பார்த்துவிட்டு கைப்பையை தூக்கியபடி நடந்தாள்.

ஒரு நிமிடம், இப்போது நடந்த கசப்பான நிகழ்வுகளை தயவு செய்து மறந்து விட்டு, நாளை காலையில் புன்னகை முகமாய்



உங்களை எதிர்பார்ப்பேன். மௌனமாய் சிறு தலையசைப்புடன் நகர, வைத்த கண் வாங்காமல் அகல்யாவையே பார்த்தான் ஆதவன். நண்பனின் முறையற்ற செயலை எண்ணி ரொம்பவும் வருந்தினான். ஆனாலும், அவன் முகம் பார்த்து பேச விரும்பாதது போல் தோன்றியது.

கேட்டைக் கடந்து செல்லும் அகல்யாவின் முதுகினையே அந்தக் கட்டிடத்தின் இன்னும் ஒரு மூலையில் இருந்தும் வேறு இரு கண்களும் வெறித்தன. அந்த கண்களுக்கு சொந்தமான நந்தகுமாரின் உதடுகள் அகல்யா! உன்னை அடையாமல் விடமாட்டேன் என்று முணுமுணுத்தன.

காற்றைப் போலவே காலமும் நேரமும் யாருக்காகவும் காத்திருப்பது இல்லை, காதல் என்பது மூன்றெழுத்து மூடு மந்திரம். நீ யாசிக்கத் துவங்கினாய் உன் விழிகளால், நான் யோசிக்கத் துவங்கினேன் மனதினால்! நேரம் கரைகிறது. நம் நேசம் மட்டும் ஆலமர விழுதாய் வளர்ந்து ஊஞ்சலாய் அசைகிறது. அதில் கிளிகளாய் நாம் இருவரும் கொஞ்சி மகிழும் நேரம் எப்பொழுது வரும்? கண்கள் காதற் திருவடிகளைத் தொழுகிறது. இதயத்தினால்

## இருதய நோயாளிகளுக்கு ஆறுதல் தரும் செய்தி!

உலகில் தற்போது இருதய நோயால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதற்கு உடலில் கொழுப்பு சத்து அதிகரிப்பது தான் முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. எனவே கொழுப்பு சத்து உணவை தவிர்க்கும்படியும், நடைபயிற்சி போன்ற உடல் உழைப்பை செய்யும்படியும் டாக்டர்கள் ஆலோசனை கூறுகிறார்கள்.

இருதய நோயாளிகளுக்கு ஆறுதல் தரும் செய்தி ஒன்றை லண்டனில் நடைபெற்ற கருத்தரங்கில் விஞ்ஞானிகள் வெளியிட்டார்கள். இருதய நோய் ஏற்படுவதை தடுக்கும் ஊசி மருந்து இன்னும் 5 ஆண்டுகளில் வெளிவரும் என்பதே அந்த செய்தியாகும். இருதய நோய் உருவாக காரணமான கொழுப்பு சேருவதை இந்த ஊசி மருந்து தடுத்து இருதய உறுப்புகளை பாதுகாக்கும் என்று தெரிவித்துள்ளனர்.

விளக்கேற்றி, இரத்தத்தினை எண்ணெய் ஆக்கி மனமென்னும் திரி போட்டு, உனக்கு தீபம் ஏற்றுகிறேன்.புன்னகைப் பூக்களால் தினமும் அர்ச்சிக்கிறேன். ஏக்கம் தணிக்கும் பார்வையை என் புறம் திருப்புவாயா? அன்பே, ஆயிரம் தற்காப்புக் கலைகளை நான் ஏற்கொண்டாலும் உன் ஒற்றை விழிப் பார்வையால் அதையெல்லாம் உடைத்து விடுகிறாயே?!

அகல்யா வேலைக்கு சேர்ந்து முழுக்க ஒரு மாதம் ஓடிவிட்டது. முதல் மாத சம்பளத்தில் மூவாயிரத்தினை மட்டும் எடுத்துக் கொண்டு மீதி பனிரெண்டாயிரத்தினை ஊருக்கு அனுப்பி வைத்தாள். கூடவே தன் பணி பற்றியும் உடன் பணிபுரிபவர்கள் பற்றியும் எழுதினாள். ஆனால், நந்துவைப் பற்றி மட்டும் எழுதவில்லை, அம்மா பயந்து விடக்கூடாதே! ஏற்கனவே சென்னையில் பணிபுரிய வைக்க விசாலத்திற்கு அத்தனை இஷ்டமில்லை. அளவான அழகான குடும்பம் அவளுடையது. தந்தை கதிர்வேல் இருந்தவரையில் சீராகபோனது குடும்பம். தகப்பன் செல்லம் அவள் அகல்யாவை தரையில் நடக்க விடாமல் தாங்கிய தோள்கள் அவை, நண்பராய், ஆசானாய், தந்தையாய் வாழ்ந்த அந்த நல்ல மனிதரின் இழப்பில் இருந்து மீள முடியாமல் தவித்துதான் போனாள். யாரோ ஒரு நண்பருக்காக கையெழுத்திட்டு பணம் வாங்கினாராம்! ஜாமீன் போட்டதால் வந்த வினை அவன் ஓடிட!

பாரம் இவரின் மேல். இழப்பு நடந்த வீடு என்று கூட எண்ணாமல், அக்கிரமமாய் கடன் பற்றி கேட்டிட, அவர்களை அடக்க வழியின்றி, வீட்டுப் பத்திரத்தை வைத்து பணத்தை தந்து விட்டாள். கணவரின் உழைப்பில் சிறுகச் சிறுக குருவியாய் சேமித்து கட்டிய வீடு, அதை அடமானம் வைக்கும்போது, மனம் பதை பதைத்தது. படிப்பு முடிந்த நிலையில் தோழி அபிநயாவின் உதவியுடன் சென்னையில் வேலையும் கிடைக்கக் கூடும் என்று தாயிடம் சொல்ல, அவளுக்கு புன்னகையே மறைந்து போனது. அவருக்குப் பிறகு, உன் முகம் பார்த்து மட்டும்தான் சற்று ஆறுதல் அடைகிறேன் அதுவும் இல்லையெனில்?!

அம்மா.. கொஞ்சம் யோசியுங்கள்.

அப்பாவுடைய சொந்த உழைப்பில் வாங்கிய வீட்டை அடமானம் வைத்து விட்டோம். அதை மீட்க வேண்டாமா? அது என் கடமை இல்லையா? அதற்காகவாவது என்னை அனுமதிக்கக் கூடாதா?



என்னமோடா கூடுமானவரையில் ஜாக்கிரதையம்மா?!

கவலைப்படாதேம்மா?! என்று தாய்க்கு ஆறுதல் கூறிவிட்டு கிளம்பினாள். தோழியின் வீட்டில் வாசம். அபிநயா ஒரு அற்புதமான பெண். ஸ்டாப் நர்ஸாக ப்ரியா நர்ஸிங் ஹோமில் பணிபுரிபவள். கனிவும், கருணையும் ததும்பி வழியும் கண்கள். அன்பானவள். அவளிடம் கூட ஆபீஸ் விஷயம் பற்றி மேலோட்டமாய் பேசுவாளே தவிர, ஆதவனைப் பற்றிப் பேசவே மாட்டாள் அன்று நடந்ததைப் போல மற்ற நாளில் எந்த அசம்பாவிதமும் நடக்கவே இல்லை, ஆதவன் அந்த சங்கடத்தை தரவே இல்லை, உதய்யும் நல்ல நண்பனாகி விட்டபடியால் அவளால் இயல்பாய் இருக்க முடிந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அவள் மனம் கவர் ஆதவன் அங்கே இருக்கிறானே. அதைவிட வேறென்ன வேண்டும். அவளறியாமல் அவனும் தன்னை கவனிப்பதை உணர்ந்தே தான் இருந்தாள். அன்றும் அப்படித்தான் கணினியில் ஏதோ முக்கியமான வேலையில் ஈடுபட்டு இருந்தாள். ஆனால் மனம் முழுக்க ஆதவனையே நினைத்திருக்க எதிலோ லயித்தவள் கண்களை ஒரு விநாடி மூடினாள்.

என்ன ஸார் ஆபீஸிலே தூங்கறதுக்கு எல்லாம் சம்பளம் தர்றீங்களா? உதய்யின் குரல் கேட்டு கண் திறக்க எதிரே உதய்யும், ஆதவனும்.

என்ன மேடம் பகல் கனவா?

இல்லை ஒரு சின்ன சிந்தனை, என்ன திடீர்னு?

அப்படி வந்ததால்தானே உங்க தூக்கத்தை கண்டு பிடிச்சோம்.

சும்மாயிருங்க உதய், அகல்யா உங்க டிசைன்ஸ் எல்லாம் சூப்பர்ப். நமக்கு நிறைய ஆர்டர்ஸ் கிடைச்சிருக்கு. உங்ககிட்டே கொடுத்திருந்த வேலையைக் கச்சிதமாய் முடித்து விட்டீர்கள், ஆனால்

ஒன்றுதான் புரியவில்லை,

எது?

நான் உங்களை அதிகமாய் வேலை வாங்கிவிட்டேன் போல, ரெஸ்ட் எடுக்கவே டைமில்லை இல்லையா? குறும்பான சிரிப்பில் அவன் கூறியதைக் கேட்டவள்.

ஸார் நீங்களும் கிண்டல் செய்யறீங்களே?

சும்மா விளையாட்டுக்கு! உண்மையிலேயே ரொம்ப அற்புதமா இருந்தது டிஸைன்ஸ்.

நன்றி ஸார் ஒரு உழைப்பாளிக்குத் தான் செய்யும் பணி பிறரால் பாராட்டப்படும் போது அவன் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்காது. அதைப் போல நானும்...!

போதும் ஸார். நீங்க விழுந்து விழுந்து பாராட்டுவதும், அவங்க தன்னடக்கத்தோடு பேசறதும் தாங்க முடியலை ஸார். இத்தனை நாள்லே என்னை ஒரே ஒரு தடவையாவது பாராட்டிப் பேசி இருக்கீங்களா? நான் கிளம்பறேன், உதய் கோபமாய் கிளம்ப,

அய்யோ பாவம் அவரையும் பாராட்டி இரண்டு வார்த்தைப் பேசி இருக்கலாமே நீங்கள்.

உதய் அடுத்த தடவை உங்களுக்கு பாராட்டு விழாவே நடத்திடலாம் ஆதவன் சொல்ல,

இதுதான் இந்த மாதத்தில் முதல் பொய்யா சார். உதய்யும் எடக்காய் கேட்க, மூவரும் புன்னகைத்தனர்.

என்ன ஒரே சிரிப்பா இருக்கு. கேள்வி எழுப்பியபடியே வந்தான் நந்தகுமார். இத்தனை நேரம் ஆதவனின் பாராட்டு மழையில் நனைந்தவளுக்கு நந்துவைப் பார்த்ததும் சட்டென சிரிப்பு நின்றது. ஆதவனின் முகத்திலும் இறுக்கம் கூடியிருந்தது. உன்னைப் பார்க்க அறைக்குப் போனேன் அங்கே நீ இல்லை, இங்கே குரல் கேட்டது, அதான் வந்தேன்.இவளைப் பார்த்த பிறகு உடனே போக மனமே வரவில்லை இல்லையா?

நந்து அவங்க நம்ம ஸ்டாப், மரியாதையா பேசு! நீ வா என் ரூமில் போய் பேசலாம். நண்பனின் தோளில் கைவைத்து தள்ளிப் போனான் ஆதவன்.

அகல்யா நிம்மதியாய் மூச்சு ஒன்றை வெளியிட்டாள்.

அவள் முகம் கண்ட உதய் ஆறுதலாய் கேட்டான் என்னம்மா? நந்து ஸார் ஏதாவது...?

அவள் முதல் நாள் நடந்த சம்பவத்தைப் பற்றிக் கூறினாள்.

நந்து கொஞ்சம் ஏடாகூடமான ஆள்தான். ஆதவன் ஸார் அளவிற்கு ப்ரீனஸ் இல்லை, கொஞ்சம் திமிருன்னு கூட சொல்லலாம். கூடுமானவரையில் தனியா மாட்டிக்காதீங்க? ஏதாவது பிரச்சனைன்னா எனக்கு சொல்லுங்க? டோண்ட் வொரி? லேசான புன்னகையுடன் கிளம்பினான் உதய்.

இந்த உதய்தான் எத்தனை நல்லவன். இவனின் கனிவான அன்பூறும் பார்வைக்கும், நந்துவின் இரையை வேட்டையாடத் துடிக்கும் மிருகப் பார்வைக்கும்தான் எத்தனை வேறுபாடு. இவையெல்லாத்தையும் விட ஆதவனின் காதற் பார்வை, கண்களாலேயே இதயத்தைக் கொள்ளையடிக்கும், மனதை மயக்கி மீண்டும் அதற்கு ஏங்கிட வைக்கும் பார்வை.!



# 3

சிக்குண்ட மேகமென
சிதைந்து போகிறேன்
உன் கண்கள் எனும்
நீல வானத்தில் !
உன் பார்வை படாமல்
என் வாழ்வு நீ கசக்கி
எறிந்த குப்பைக் காகிதமாய்!

அர்ச்சனைத் தட்டை கையில் வாங்கியபடியே கையிலிருந்த விபூதியை அருகில் இருந்த அர்ஜீனின் நெற்றியில் இட்டு தானும் இட்டுக் கொண்டாள் நிதிலா!


என்ன நிதிலா, நானே கூப்பிட்டாலும் சரி, பிறந்த நாளுக்குக் கூட கோயிலுக்கு வரமாட்டே இன்னைக்கு என்ன திடீர்னு?

நம்ம இரண்டு பேரோட லவ் மேட்டர் நந்து அண்ணாவுக்குத் தெரிஞ்சுடுச்சு. கூப்பிட்டு ஒரே திட்டு. ஒத்துக்கவே மாட்டேன்னு ஒரே கத்து.

ஏய்... எந்த மச்சான் தான் காதலை ஒத்துக்கிட்டு இருக்கான். இப்படியெல்லாம் இல்லைன்னா காதல்ல ஒரு ஈர்ப்பு இருக்காதும்மா. அப்படியும் இல்லையா? கவலையை விடு, நான் கை நிறைய சம்பாதிக்கிறேன். பேசாம என் கூட வந்திடு. நான் உன்னை ராணி மாதிரி வைச்சுப் பார்த்துக்கறேன்.

அது மட்டும் வேண்டாம்.

எனக்குப் புரியுது நிதிலா, நீ பணக்கார வீட்டுப் பொண்ணு. நான் சொல்றா மாதிரி ஓடி வந்து ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டா இப்போ வாழுற வசதியான வாழ்க்கையை என்னால உனக்குத் தர முடியாதுன்னு யோசிக்கிறியா?



# அரிசிமாவும் கோலமும்

கோலமிடுவதன் முக்கிய நோக்கம் உயிரினங்களுக்கு உதவ வேண்டும் என்பதே. அதனால் முற்காலத்தில் அரிசியை ஊறவைத்து அதனை இடித்துச் சலித்து வைத்துக் கொண்டு கோலமிட்டனர். ஆனால் தற்போது நாகரீக வளர்ச்சி காரணமாகக் கோலமிடுவது குறையத் தொடங்கிவிட்ட காரணத்தாலும், மக்கள் தொகை பெருகி விட்டதால், பொருளாதார இட நெருக்கடி காரணமாகவும் அரிசி மாவால் கோலமிடுவது குறைந்து விட்டது. மரபுநிலை மறவாத மிகச்சிலரே அரிசிமாவுப் பொடியால் கோலமிடுகின்றனர். மிகவும் ஏழைகளாகயிருந்து மரபுகளை மறவாது கடைபிடிப்போர் சிறு அரிசிமாவுப் பொடியோடு கற்பொடியைக் கலந்து கோலமிடுகின்றனர்.

அரிசிப் பொடியை உண்ட எறும்புகள் "இவர்களுக்கு கண்கள் நன்கு தெரிய வேண்டும்" என்று இறைவனிடம் வேண்டிக் கொள்வதாக ஐதீகம். அத்தோடு அவர்களுடைய கஷ்டநஷ்டங்களை எடுத்துக் கூறும் தூதுவர்களாக இறைவனிடம் சென்று வேண்டுகின்றன என்பதும் நம்பிக்கை.

அறம் செய்தவன் அடிப்படையில் எழுந்த இந்தப் பழக்கம் நாளடைவில் (மரபுகளைப் பலர் மறந்தாலும்) பலவகைகளில் விரிந்து வளர்ச்சியடைந்துள்ளது. அரசியல் கூட்டங்கள் நடக்கும் இடங்களிலும் (கிறிஸ்துவப் பள்ளி, கல்லூரி விழாக்களிலும் கூட கோலத்தை விரும்பிப் போடுகின்றனர்) "வாசலிலே இரட்டை இலைக்கோலம் போடுங்கள்" என்று ஒலிப்பெருக்கிகளில் முழங்கும் பாடலே இதற்குச் சான்றாகும்.



எப்படி இவ்வளவு கரெக்டா சொல்றே அர்ஜீன். நீ சொல்றமாதிரி கல்யாணம் பண்ணிக்கிட்டு கஷ்டப்பட முடியுமா? ஐம் பார்ன் இன் கோல்ட் ஸ்பூன் தெரியுமோ?என்று அவனைச் சீண்டும் தொனியில் பேசி அவன் முகம் கருத்துப் போனதைக் கண்டு கலகலவெனச் சிரித்தாள். அப்பா அப்படியே கண்ணால எரிச்சிடுவே போலயிருக்கே? முட்டாள் காதலா... என்னைப் பற்றி நீ புரிந்து கொண்டது இவ்வளவுதானா?

பின்னே என் கூட வரமாட்டேன்னு சொல்றதுக்கு காரணம் தான் என்ன?

எங்க அப்பா... சின்ன வயசிலேயே எங்களுக்கு அம்மா இல்லை, அப்பா என்னையும், அண்ணாவையும் எப்படி வளர்த்தார் தெரியுமா? நந்து அண்ணா இப்போதான் லவ் பண்றேன்னு கல்யாணமும் பண்ணி மனைவியையும் வாரிக் கொடுத்திட்டு தேவையில்லாத கெட்ட பழக்கத்தினால தினம் தினம் கெட்டு அழியறான். அதை நினைச்சியே அப்பா தினமும் துடிச்சிப் போறார். இதுக்கு நடுவிலே நானும் வீட்டை விட்டு ஓடி வந்து கல்யாணம் பண்ணிக்கிட்டா அப்பா இன்னமும் துடிச்சுப் போவார். அதனால் தான்... இந்த விஷயத்தில் நான் இத்தனை உறுதியா இருக்கேன்.

சரி! நிதிலா உன் நிலைமை எனக்குப் புரியுது. ஆனா வீட்டிலே அம்மா பெண் பார்க்க ஆரம்பிச்சிட்டாங்க. இதுக்கு மேலேயும் என்ன காரணம் சொல்லி தள்ளிப் போட முடியும். நம்ம விஷயத்தைப் பற்றி பேசி சம்மதமும் வாங்கிட்டேன் உன் சைடுதான்!

வர்ற 6ந்தேதி என் பிறந்த நாள் வருது. சின்ன கெட் டு கெதர் நடக்கும். நீயும் அங்கே வந்திடு அர்ஜூன். நான் உன்னை ஆதவன்னாவுக்கு அறிமுகப்படுத்திடறேன். அவர்தான் நம்ம விஷயம் பற்றி அப்பா கிட்டே பேசறதுக்கு சரியான ஆள். நம்ம அன்பை கட்டாயம் அவர் புரிஞ்சுகிட்டு உதவி செய்வார். அந்த நம்பிக்கை எனக்கிருக்கு.

நான் கண்டிப்பா விழாவிற்கு வர்றேன். வேற வழியில்லை இதை விட்டாலும், அங்கங்கே பெண்கள் காதலன் பின்னாலயே... கல்யாணம் செய்துக்கச் சொல்லி அலைவாங்க... இங்கே எல்லாமே தலைகீழ். நான் கல்யாணம் எப்போன்னு உன் பின்னாடி அலைய வேண்டியிருக்கு.

பின்னே நிதிலான்னா சும்மாவா?! வா சினிமாவுக்குப் போகலாம்.

நான் எத்தனை சீரியஸா பேசறேன். நீ என்னடான்னா?!

உன் டென்ஷன் குறைக்கவே இந்த யோசனை, எல்லாம் நல்லவிதமா நடக்கும்ன்னு எனக்குள்ளே ஒரு பட்சி சொல்லுது சுமான்...!

மீண்டும் ஒருமுறை மூலஸ்தானத்தை வணங்கிவிட்டு இருவரும் கிளம்பினார்கள்.

செல்லம்! எழுந்திருடா ஸ்கூலுக்கு நேரமாச்சு அப்பாவும் வேலைக்குப் போகணுமில்லையா?

தூக்கமா வருதுப்பா. படுக்கையில் புரண்டு கொண்டிருந்த ரோஜாக் குவியலை அள்ளினான் உதய்.

நிலா வேகமாய் வந்து அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டது. டாடி ப்ளீஸ்.

இல்லைடா செல்லம். ஏற்கனவே லேட் சுமான் ஹறியப். அவள் கூந்தலை ஒதுக்கிவிட்டு பல் தேய்த்து, குளிப்பாட்டி யூனிபார்ம் போட்டு விட்டான். ஆறு வயதுக் குழந்தை நிலா, துறுதுறுவென்று கண்களும், புன்னகையும் மழலையான பேச்சும் நெஞ்சை அள்ளும் வண்ணம்.

அப்பா உனக்கு பெல்டே சரியா போடத் தெரியலை?

கத்துக் கொடுங்க குட்டிம்மா. நான் கத்துக்கறேன். பவ்யமாய் கைகளைக் கட்டினான் உதய்.

குழந்தை கன்னம் குவித்து சிரித்தது. உஷாவும் இப்படித்தான் சிரிப்பாள். தலையை உதறி நினைவுகளை அகற்றினான். தட்டில் இரண்டு இட்லியை வைத்து சாம்பாரில் நனைத்து ஊட்டினான்.

நிலா சமர்த்தாய் சாப்பிட்டாள். லஞ்ச் பேக் ரெடி செய்து ஸ்கூல் பேக்கை எடுக்கும் சமயம் ஸ்கூல் வேன் ஆர்ன் அடித்தது.

டாட்டா... என்று அவன் முரட்டுக் கன்னத்தில் பட்டு இதழைப் பதிந்து விட்டு, வேனில் ஓடி கை காட்டியது. உதய் மனைவியின் படம் அருகில் வந்து நின்றான். காய்ந்திருந்த மலர் சரத்தை அகற்றி புதிய சரத்தை அணிவித்தான். ஊதுபத்தி ஏற்றி கண் மூடி பிரார்த்தித்து விட்டு மனைவியின் முகத்தைப் பார்த்தான்.

உஷா நாம எத்தனை அன்பாய் வாழ்ந்தோம். என்னை விட்டுப் போக உனக்கு எப்படி மனம் வந்தது. ஏன்? இந்த பிரிவு?



ஒவ்வொரு தினமும் உன் நினைவு ஒருபுறம் என்னை வாட்டுகிறது . இதில் கூடவே நிலா வேறு, உன்னைத் தேடுவதும். அப்பிஞ்சு, நெஞ்சின் வேதனையைப் போக்கவாவது நீ வந்துவிடக்கூடாதா? உஷா..

சரியாய் இரண்டே வருடங்கள். இந்த வாழ்வு மட்டும் போதுமென்று மொத்தமாய் என் நிம்மதியையே வாரிச் சுருட்டிக் கொண்டு போய் விட்டாயே இது நியாயமா? அவன் கண்கள் கண்ணீரைச் சிந்தின,

எத்தனை இன்பமான நாட்கள் அவை. விடியற்காலையின் வெள்ளிப் பூவாய் கால் கடுக்க அவளின் தரிசனத்திற்கென நின்ற நாட்கள் எத்தனை? காதலைச் சொல்லத் தயங்கி, பார்வையினால் மட்டும் தரிசித்து, விழிகளை வாசலாக்கி அவளின் உருவத்தை பொதித்து பூட்டிக் கொள்ளத் துடித்தும் மறக்குமா?

உதய் முதன் முதலாய் உஷாவை ஒரு புடவைக் கடையின் வாசலில்தான் சந்தித்தான். பிரபல கடைகளுக்கு சில டிசைன்களை கொண்டு செல்லும் போதுதான் அவளைச் சந்தித்தான்.

தோழியின் திருமணத்திற்காய் புடவை எடுக்க வந்தவள் பட்டுப் புடவைகளை விரித்து விரித்து தோள் மேல் போட்டபடி இருக்க, வியாபார நிமித்தம் அருகே அமர்ந்திருந்த உதய்யின் குளிர்பான கப்பை தட்டிவிட திட்டு திட்டாய் புடவையில் சிதறின அத்தனையும்!

அச்சச்சோ என்னம்மா நீங்க? பத்தாயிரம் ரூபாய் புடவை, கொஞ்சமும் பொறுப்பில்லாம இப்படி பாழ் பண்ணிட்டீங்களே?

இல்லே ஸார் தெரியாம?

என்னம்மா தெரியாம உங்க கண் என்ன பிடரியிலேயா இருக்கு?

ஸார்...

என்ன ஸார்? புடவையோட விலை பத்தாயிரம் ரூபாய். எண்ணி வைச்சிட்டு புடவையை எடுத்துக்கிட்டு கிளம்பும்மா.

அய்யோ... நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க, என் தோழியோட திருமணத்திற்கு புடவை எடுக்க வந்தோம். வந்த இடத்தில், என்கிட்டே அவ்வளவு காசும் இல்ல, அந்தப் பெண் கைகளைப் பிசைந்தபடி பேசுவதைக் கண்ட உதய்க்கு மனது அசைந்தது.

ஸார்... அவங்க மேல எந்தத் தப்பும் இல்லை நான்தான் தெரியாமல் டிரிங்ஸை டேபிள்ல வைச்சிட்டேன். புடவைக்குண்டான

பணத்தை நான் தந்திடறேன். சொன்னதோடு மட்டுமின்றி பணத்தையும் தந்துவிட்டுக் கிளம்பிவிட்டான் உதய். அந்தப் பெண் விழிகளாலேயே நன்றி கூறினாள். ஏனோ கலங்கிய விழிகள் தண்ணீரில் மிதக்கும் மீனாய் ஜொலிக்க ரசித்தபடியே விலகினான். நண்பர் பட்டாளம் புடவையைப் பெற்றுக் கொண்டு கிளம்பிட, உஷாவின் கையில் ஒரு கவரைத் தந்தார் கடைக்காரர்.

இது... நீங்க கூல்டிரிங்ஸ் ஊற்றிய சேலை, அவர் பணம் தந்திட்டு புடவையை உங்ககிட்டேயே தந்திடச் சொன்னார்.

அவர் சொன்னா உடனே நீங்க தந்திடுவீங்களா? முன்னே பின்னே தெரியாத என்கிட்டே போய் தர்றீங்களே?

தரச்சொன்ன ஆள்கிட்டேயே போய் பேசிக்கோங்க... என்று கையில் ஒரு அட்டையைத் தந்தான் அவன். அட்டையில் உதய் என்ற பெயரும் அவன் முகவரியும் இருந்தது. மறுநாள் தாமதிக்காமல் நேரடியாக அவன் முன்பு போய் நின்றுவிட்டாள் உஷா.

ஏன் ஸார்? ஏதோ சமயத்திற்கு உதவி பண்ணீங்களேன்னு சந்தோஷப்பட்டா இதுதான் சான்ஸ்னு புடவையைத் தருவீங்களோ? கோபத்தில் படபடவென்று கொட்டிய இமைகளையும், காதில் குலுங்கிய ஜிமிக்கிகளையும் பார்த்தபடி நின்றான் உதய்.

ஹலோ.. பதில் சொல்லுங்க? பேய் முழி முழிச்சா என்ன அர்த்தம்.

என்னை எங்கே பேசவிட்டீங்க? வந்த நேரத்தில் இருந்து நீங்கதான் வாய் மூடாம பேசிக்கிட்டே இருக்கீங்க?

ஜோக்கா, ஒரு பொண்ணுக்கு புடவை எடுத்துத் தரணுமின்னா ஒண்ணு அப்பாவா இருக்கணும், இல்லை அண்ணனா இருக்கணும். நீங்க யாரு ஸார் எனக்குப் புடவை எடுத்துத் தர?

உதய் தீர்க்கமாய் பார்த்து, இன்னொரு ஆளும் எடுக்கலாம் உஷா கணவனா?

என்னது?

என்னமோ தெரியலை? முதல் பார்வையிலேயே உங்களை எனக்குப் பிடிச்சிட்டது.

உஷா மௌனமானாள்.

இத்தனை நேரம் பேசினீங்களே இப்போயேன் பேசனில? என்னைப் பிடிக்கலையா?

நான் கிளம்பறேன்.

பதிலே சொல்லலையே?



அவள் புடவையை எடுத்து மார்போடு அணைத்தபடி நகர உதடுகளில் வளைந்த முறுவலுடன் , உஷா ஒரு நிமிடம்.

என் முழியென்ன அத்தனை மோசமாகவா இருக்கிறது என்று கேட்க, சிரித்தபடியே ஓடினாள் உஷா.

அன்றைய தினத்தில் இருந்து, காதலை அன்பூற்றி வளர்த்தார்கள். நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் நாட்கள் நகர்ந்திட, ஒரு கட்டத்தில் விவரம் தெரிந்து, எதிர்ப்போடு உஷாவிற்கு சிறைவாசம் தொடர்ந்தது. அதன்பிறகு நண்பர்கள் துணையோடு, பதிவுத் திருமணமும் செய்து, தனிக்குடித்தனமும் செய்து.இன்பம் இன்பம் இதுவொன்று மட்டுமே அவர்கள் வாழ்வில் ஆறாய்ப் பெருகியது. அதற்கு ஆறுதலாய் நிலா வேறு! திகட்டத் திகட்ட அன்பில் திளைத்தான் உதய். யார் கண் பட்டதோ விபத்தொன்றில் உஷா அவனை விட்டுப் போனதும் சிறகு இழந்த பறவையாய் போனான். அம்மா அம்மாவென்று அழும் குழந்தையை சமாதானப்படுத்திடத் தெரியாமல், வாழ்வின் இறுதி வரையில் தொடர வேண்டிய உறவையும் இழந்து தனிமரமாய் நின்ற நேரம் வந்து சேர்ந்த சொந்தங்களையும் விலக்கிட காரணம். குழந்தையைக் காரணம் காட்டி இரண்டாவது மணம் புரிய பேசியதுதான். அவன் உஷாவை மறக்க முடியுமா? ஒரேயடியாய் மறுத்து விட்டான்.

வேலைக்கு ஒரு வயதான அம்மாவை வைத்து நிலாவை கவனித்துவிட்டு வேலைக்குப் போவான். நிலா வளர வளர அவளே ஓரளவிற்கு தன் தேவைகளை கவனித்துக் கொள்வாள். 6 வயதில் பெரிய மனுஷி மாதிரி நடக்கும் மகளை எண்ணி பூரிப்பான் உதய். சஞ்சலமில்லா வாழ்வை வாழும் மனிதர்கள் யாருமில்லை, வாழ்வின் ஒவ்வொரு கட்டங்களும் இன்பமும், துன்பமும், இரண்டுமே கலந்தது. அதை திறம்பட நடத்திச் செல்பவனே வாழ்வின் பயணத்தை சுகமாய் கடக்கிறான். சற்றே மயங்குபவன் அனைத்தையும் மறந்து முடங்கிப் போகிறான்.

## 4

**என்னுள் நெருப்பாய் பரவுகிறது**
**உன் நேசம்...**
**விரல்கள் கொண்டு அதை**

அடைக்கப் பார்க்கிறேன்.

அந்த நெருப்பு உன் பார்வையாய்

என் இதயத்தை சுட்டுச் சுவைக்கிறது?!

கடவுளின் படைப்பிலேயே சிறந்த படைப்பு மனிதன். அவனின் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் எல்லாமே ஒன்றையொன்று மிஞ்சும் அளவிற்கு உயர்ந்து இருக்கின்றன. அதில் நாம் பெருமைப் பட்டுக் கொள்ளும் அளவிற்கு உள்ளதே கணிப்பொறி. எத்தனையோ வர்த்தக வேலைக்குப் பயன்பட்டாலும், மனதில் நினைத்த வண்ணத்தை, உருவத்தை அதன் மூலம் வெளிக்காட்டும் திறன் உள்ளதே?!

அகல்யா தனி போல்டரில் மெல்ல மெல்ல ஆதவனின் ஓவியத்தை வரைந்தபடி இருந்தாள். முழு உருவமாய் வரைந்தால் யாரேனும் பார்க்கக் கூடுமேயென்று, கண்களும், உதடுகளும் என தனித்தனியாய் வரைய?!

கண்கள் இரண்டும் சிமிட்டும் நேரம் மனம் மகிழ மீண்டும் மீண்டும் அதையே வைத்தாள். கூர்மையான அந்த வசீகரக் கண்கள்...

உறக்கம் இழந்த விழிப்படலம்

இமை மூட இயலாமல் கிடக்கிறது?! உன்

உருவமதில் பொதிந்து கிடக்கிறது!

வாவ் ! யாருடைய கண்கள் இவை இத்தனை அழகாய் கண் சிமிட்டுகிறதே? காதருகில் ஆதவனின் குரல் கேட்டதும் திடுக்கிட்டுத் திமிறினாள்.

ஸார் அது வந்து ...நீங்க?

ஏன் பதட்டம் உங்க கூட பேசலாம்னு வந்தேன். நீங்க எதிலேயோ மூழ்கியது போல இருந்தீங்க?! வந்து பார்த்தா உங்களுக்கு வரைய மட்டும்தான் தெரியுமின்னு நினைச்சேன். அழகா கவிதை கூட எழுதுறீங்களே?! அடுத்த பக்கம் பார்க்கலாமா? ஒருவித தயக்கத்துடன் அகல்யா தலையசைக்க, அவன் விரல்கள் மௌஸைப் பற்றிய போது அகல்யாவின் விரல்களோடு மெலிதான ஒரு உரசல்.

விரல்களை உரசுகிறாய் ஒரு முறையெனின் பதட்டம் என்று எடுத்துக் கொள்வேன். ஆனால், பலமுறை விருப்பத்தோடு விரல்களை வருடும்போது, மௌனமாய் எனைப் பார்க்கிறாய்! உதடுகளைப் பிரிக்காமல் உன் கண்களின் மொழி!



அற்புதம் அகல்யா.. உண்மையான உதடுகளை ஒட்ட வைத்தது போல இருக்கிறது. அதில் கவிதையாய் நீங்கள் எழுதிய இரண்டு வரிகள். உன் சொற்களைக் கேட்கவே காத்து இருக்கிறேன். தயக்கம் ஏன்? இதழ்களின் பூட்டை விலக்கலாமே?!

அழகான வரிகள்...! இது யாரென்று நான் தெரிந்து கொள்ளலாமா? குறுகுறுப்பான பார்வையுடன் அவன் கேட்க,

வெறும் கற்பனைதான் ஸார்.. என்று தரை தாழ்த்தினாள் விழிகளை....

அவள் முகமும் சிவந்தது.

அகல்யா பாருங்களேன் எதையோ பேச வந்து விட்டு மறந்தே போனேன். இன்று மாலை நீங்கள் ப்ரீயா? இல்லை ஏதாவது முக்கியமான அப்பாயின்மெண்ட் இருக்கிறதா?

ஆபீஸ் நேரம் தவிர வீடுதான். வேறு எங்கும் நான் செல்வது இல்லை, ஏதாவது புத்தகங்கள் வாசித்துக் கொண்டிருப்பேன்.

## துளசி வழிபாடு

**1.** ஒவ்வொரு வீட்டிலும் துளசி செடி அவசியம் இருக்க வேண்டும்.

**2.** துளசி செடிக்கு தினமும் காலை வேளையில் தண்ணீர் ஊற்றி மாடத்தின் முன் நீர் தெளித்து சின்னதாக கோலமிட்டு விளக்கேற்றி வையுங்கள். உங்கள் வீடும் மனமும் மங்களகரமாக மிளிரும்.

**3.** துளசி சகுனம் ஒப்பற்ற சகுனம். வெளியே செல்லும் போது துளசியை வணங்கி விட்டுச் சென்றால் வேறு எந்த சகுனமும் ஒன்றும் செய்யாது.

**4.** அதே போல் வெளியில் இருந்து வீடு திரும்பியவுடன் கை கால் அலம்பி துளசியை தரிசனம் செய்து பின்னர் வீட்டுக்குள் செல்ல வேண்டும். இதனால் வெளியே நம் மீது படிந்த தீய எண்ணங்கள், பார்வைகள், தீய சக்திகள் நம்மை தொடராது.

**5.** துளசி வழிபாடு மிகவும் எளிமையான ஆனால் அற்புத பயனளிக்கும் வழிபாடு. குறிப்பாய் பெண்கள் அவசியம் செய்ய வேண்டியதாகும்.

நல்லது.. இன்று மாலை ஒரு முக்கியமான பார்ட்டி இருக்கு, உங்களையும் அழைத்துச் செல்வதாய் வாக்களித்து விட்டேன். வரமுடியுமா?

பார்ட்டிக்கா.. என்னையா? வியப்பாய் கேட்டவளைத் தொடர்ந்தான்.

நந்தகுமாரின் தங்கை நிதிலாவிற்கு பிறந்த நாள். உங்களுக்கு அழைப்பு உண்டு. அழைத்து வருவதாய் நானும் வாக்குத் தந்து விட்டேன் உங்களைக் கேட்காமலேயே?

அதுவரையில் அகல்யாவின் முகத்தில் இருந்த முறுவல் துணி கொண்டு துடைத்தாற் போல் மறைந்து போனது. ஆதவன் அவளை வெளியே அழைத்தவுடன் வானில் பறவையாய் சிறகடித்த மனது, அவன் அழைத்துப் போக விரும்பும் இடம் பற்றிச் சொன்னதும், பாதாளத்தில் விழுந்தது போல் இருந்தது. முதன் முதலில் தனிமையின் சந்தர்ப்பம். போகுமிடம் அதுவாகவா இருக்க வேண்டும்? வரவில்லை என்று தவிர்த்து விட்டாலும், தன்னுடன் வர ப்ரியப்படவில்லை என்ற தவறான எண்ணம் தொண்டு விடுவாரே என்ன சொல்வது என்ற யோசனையில் இருந்தாள்.

பரவாயில்லை அகல்யா உங்களை கட்டாயப்படுத்துவதாய் எண்ண வேண்டாம். விருப்பம் இல்லையென்றால் வரவேண்டாம்..! அவ்வார்த்தைகளை சொல்லும்போது அவன் முகத்தில் படர்ந்திருந்த ஏமாற்றத்தின் சாயலை அவள் உணர்ந்தாள்.

பின்னர், ஒரு தயக்கமும் இல்லை சார் வருகிறேன் சார்.. என்றாள்.

ஆதவன் அருகில் இருக்கும் போது நந்தகுமாரால் தன்னை ஒன்றும் செய்ய முடியாது. தவிரவும் பார்ட்டியென்றால் ஆட்களும் இருக்கத்தானே செய்வார்கள். அதனால் நந்துவிடம் தனிமையில் மாட்டிக் கொள்ளவும் நேராது. நாலு பேர் முன்னிலையில் அவனும் ஏதும் அநாகரீகமாய் நடக்க மாட்டான் என்று எண்ணினாள்.

நன்றி அகல்யா?!' எங்கே வரலைன்னு சொல்லிடுவீங்களோன்னு பயந்தேன். நானே மாலை ஆறுமணிக்கு வந்து பிக்கப் பண்ணிக்கிறேன்.

உங்களுக்கு ஏன் வீண் சிரமம்?

நானொன்றும் உங்களை சுமக்கப் போவது இல்லை கார்தான். கவலை வேண்டாம்.

புன்னகையுடன் அவன் வெளியேற, ஆறுமணி எப்போது வருமென்று காத்திருக்கத் துவங்கினாள் அகல்யா.



இலேசான சுடுநீரில் ஒரு குளியல் போட்டு விட்டு, கூந்தலை உலர்த்தினாள். அபிநயாவிற்கு நைட் டூட்டி என்பதால் அவள் சற்று முன்னதாகவே கிளம்பிவிட, ஒரு விருந்திற்கு போவதாய் சொல்லியிருந்தாள், ஆனால் ஆதவன் வந்து அவளை அழைத்துப் போவதைப் பற்றிச் சொல்லவில்லை, பட்டுப் போன்ற கூந்தலை அழகாய் பின்னலிட்டு மல்லிகை மலர் சூடினாள். மஞ்சள் நிறத்தில் நீல சரிகை வைத்த மைசூர் சில்க் புடவையை அணிந்தாள். காதில் நீலக்கல் பதித்த கல் ஜிமிக்கியும், கழுத்தில் சற்று அதிகப்படியாய் ஒரு லாங் செயினும், முத்துக்கள் கோர்த்த வளையலும் அணிந்து அவன் வருகைக்காய் காத்திருந்தாள். காதலில் காத்திருத்தல் எத்தனை சுகம், உடலில் ஒவ்வொரு அணுவும் அவனின் வரவிற்காய் ஏங்க ஆரம்பித்தது. வாசலில் ஏதோ அரவம் கேட்கும் போதெல்லாம் ஆர்வமாய் ஓடி வந்து அது ஆதவனில்லையென்று உணர்ந்த பின்பு, தவிப்பாய் அமருவாள்.

போதை கலந்து பறப்பதைப் போன்ற அந்நினைவு இனித்தது. சொன்னது போலவே சரியாக ஆறு மணிக்கு வாசலில் கார் ஹாரன் ஒலி கேட்க, துள்ளிக் குதித்து மானாய் ஓடி வந்தாள் அகல்யா...

குட் ஈவ்னிங் முறுவலுடன் கூறியவன் அவளுக்காய் கார்க் கதவைத் திறந்து வைத்தான். பதில் வணக்கம் கூறியபடி அவனருகில் அமர்ந்தவள் இணையில்லா ஆனந்தத்தில் இருந்தாள். இலக்கியங்களில் கதைகளில் எல்லாம் காதலைப் பற்றி கூறியதெல்லாம் எத்தகைய உண்மை.

மாலை வேளையில் பசித்திருந்த கண்களுக்கு விருந்தாய் வந்தாய். வாசலில் நின்று வாடிய முகம் தனில் உன் வருகையின் காரணங்கள், வந்தாய், அழைத்தாய் உன் விழிகள் என்னிடம் ஏதோ சொல்லுகிறது. விரும்பினாய் விழிப்பார்வையில்!

இவள்தான் உருகினாளே தவிர ஆதவனிடம் எந்த மாற்றமும் இல்லை, அவள் பக்கம் இரண்டொரு முறை திரும்பிப் பார்த்ததோடு சரி. ஆனால், அகல்யாவிற்கோ அது போதவில்லை. கொஞ்ச வேண்டாம், புகழ வேண்டாம் அட்லீஸ்ட் உங்களுக்கு இந்த புடவை அழகாய் இருக்கிறது என்று கூடவா சொல்லக் கூடாது. மனதிற்குள்ளேயே செல்லமாய் அவனைக் கடிந்து கொண்டாள். அந்தப் புடவை ஒரு பிறந்த நாளின் போது எடுத்தது. இதை முன்னம் ஒருமுறை கட்டி இருந்தபோது, அம்மா

சாதாரணமாய் விடவில்லை அவளுக்கு திருஷ்டி கழித்துவிட்டு தான் மறுவேலையைப் பார்த்தாள். அதற்கு மேலும் பொறுமையை நீடிக்க விட மனமில்லாமல், என்ன ஸார், ஆறுமணிக்கு மேல பேசறது இல்லைன்னு யாருக்காவது வாக்குறுதி தந்து இருக்கீங்களா?

ஏன்?

இல்லே குட் ஈவ்னிங் சொன்னதோட சரி வேற ஏதும் பேசலையே?

ஆதவன் கலகலவென நகைத்தான். அவன் தலையை பின்னுக்கு இழுத்து சிரித்த விதம் நெஞ்சை அள்ளியது.

இப்படிச் சிரித்த முகமாய் இருப்பதை விடுத்து எப்போது பார்த்தாலும் முகத்தை ஏன் உம்முன்னு வைக்க வேண்டும். தனக்குத்தானே கேள்வி எழுப்பியபடி அமைதியானாள்.

என்ன பேசறதுன்னு தெரியலை அகில்.. குழைவாய் இனிமையாய் அவன் வாயில் வெளிவந்தது அவளின் பெயர்.

எதனால்...?

உங்களைப் பார்த்தவுடன் தான்...?!

ஏன் ஸார்? நானென்ன அத்தனை அகோரமாகவா இருக்கிறேன். பார்த்தவுடன் வாயடைத்துப் போவதற்கு?!

பயம் என்று ஏனெடுக்க வேண்டும். அழகான கவிதையாய் நீங்கள் நடந்து வந்ததைக் கண்டால், பேச்சு மறப்பது இல்லை இல்லையா?

கிண்டலா? கேட்கும்போதே முகம் சிவந்தது அகல்யாவிற்கு?!

அகல்யா... அகில்ன்னு கூப்பிடலாமா?

ம்... பேர் சொல்லி அழைக்க எல்லாம் அனுமதி கேட்க வேண்டுமா?

வேறு எதற்கு அனுமதி கேட்க வேண்டும்?

அடடா ஏன் பேசவில்லை என்று கேட்டதற்கு பதிலாய் வார்த்தைக்கு வார்த்தை என்னை மடக்க வேண்டுமா ஸார்?

அகல்யா...! ஸார் வேண்டாமே?

போடா வாடான்னு அழைத்தால் நன்றாய் இருக்காதே?!

அய்யய்யோ! பார்வைக்கு அப்பாவியாய் தெரிகிறீர்கள்? ஆனால் இத்தனை வாயாடியாய் இருக்கிறீர்களே? சிரித்தபடியே ஆதவனை ஆதவ்... வதன் என்று கூட கூப்பிடலாமே?



சற்றே யோசிப்பதைப் போல பாவனைச் செய்து விட்டு, இரண்டு பெயரும் சொல்லி அழைத்தால் நல்லாயிருக்காது. ஆதவ் என்றே கூப்பிடுகிறேன்.

அடியேன் பாக்கியம்!

இருவரும் இலகுவாய்ச் சிரித்தனர். அதற்குள் இறங்க வேண்டிய இடமும் வந்துவிட, வண்டியின் டேஷ்போர்ட்டில் இருந்து இரண்டு பார்சல்களை எடுத்தான் ஆதவன்.

அகில்.. நிதிலாவிற்கு பிறந்த நாள் பரிசு வாங்கப் போயிருந்தேன். அங்கே ஒரு அழகான வெள்ளிக் கொலுசு இருந்தது. ஏனோ அதைப் பார்த்தவுடன் வாங்க வேண்டும் என்று தோன்றியது. மனதில் பட்டதை சொல்லட்டுமா?

ம்....!

இதை உங்களுக்குத் தர வேண்டும் என்று?

அகல்யா தலையைக் குனிந்தாள்.

வேண்டாமா? பிடிக்கலையா?

மௌனமாய் பெற்றுக் கொள்ள ஆதவன் புன்னகையுடன் வண்டியை பார்க் பண்ணிவிட்டு அவளுடன் நடந்தான்.

## செய்தித் துளிகள்

**மா**தவிலக்கு சமயங்களில் பெண்களின் கையிலுள்ள நடு விரலுக்கு மட்டும் உணர்ச்சி சற்று குறைந்திருக்கும்.

**பி**றந்த குழந்தை அழுதாலும் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வராது. ஏன் தெரியுமா? ஆறு முதல் எட்டு வாரம் வளர்ந்த பின்னரே குழந்தைகளின் கண்ணீர்ச் சுரப்பி வேலை செய்யும். அதன் பிறகுதான் குழந்தை கண்களிலிருந்து கண்ணீர் சுரக்கும்.

**ஆ**ண்களைவிட, பெண்களுக்கு காது கேட்கும் சக்தி அதிகம்.

**பெ**ண்களுக்கு ஆண்களைப் போல சலனப் புத்தி கிடையாது. பெண்கள் ஒரு தடவை முடிவெடுத்தால் முடிவெடுத்ததுதான்.

**ஒ**ரு பெண்ணின் கர்ப்பத்தில் ஆண் குழந்தையாக இருந்தால் தாய்க்கு ஞாபக சக்தி அதிகம் உண்டு. பெண்ணாக இருந்தால் ஞாபக சக்தி குறைவாக இருக்கும்.

## 5

மயக்கும் மாலைப் பனியில்
இலைகளின் மேல் பனித்துளி
ஈரம் படர்ந்த உன் உதடுகளை
மேலும் அழகுப்படுத்தும் உன்
எச்சில் துளிகள்....

நந்தகுமாரின் அந்த வீடு குட்டி பங்களா போல் இருந்தது. வீடு பெரியதாய் இருந்து என்ன பலன்? அதன் உரிமையாளனின் மனம் சின்னத்தனமானது அல்லவா?

இருவரும் இணைந்து நடந்தார்கள். இருவரின் தோள்களும் சிலமுறை உரசி பின் பிரிந்தன. இருவருக்குமே அது புது அனுபவமாய் இருந்தது. தோட்டத்திலேதான் விருந்து நடைபெற்றது. அலங்கார விளக்குகள் மின்னிட, மெல்லியதாய் மேற்கத்திய இசை கசிந்தது. பலதரப்பட்ட மனிதர்கள் அங்கு நிறைந்திருந்தார்கள்.

முன்பெல்லாம் விருந்து விழாவென்றால் ஆண்கள் வேட்டியுடுத்தி, பெண்கள் பட்டு அணிந்து நகைகள் பூட்டி பாரம்பரிய மணத்தோடு வருவார்கள். ஆனால், இங்குள்ளவர்கள் எல்லாம் அரைகுறை ஆடையுடனும், தலைவிரிக் கோலமாகவும் வந்து இருந்தனர். ஆண்களின் கையில் மதுக்கிண்ணம் ஒன்று முளைத்திருந்தது. பெண்கள் யாவரும் தங்கள் உடலை மறைப்பதில் அத்தனை ஆர்வம் காட்டவில்லை,

அவ்விடத்தில் புடவை அணிந்திருந்ததே அகல்யா மட்டும்தான். ஆதவனுடன் அவள் நடந்ததால் நிறைய விழிகள் இவர்களை மொய்த்தன. அவன் முதுகிற்குப் பின்னேயே ஒண்டியபடி நடந்தாள்.

ஹாய்.. ஆதவன் என்ன இத்தனை லேட்டா வர்றீங்க? ஆர்ப்பாட்டமான குரலோடு ஓடிவந்து ஆதவனின் கைகளைப் பற்றிக் கொண்டாள் அவள். அப்பெண்ணின் செய்கைக்கு ஆதவன் கோபிப்பான் என்று எண்ணி ஏமாந்து போனாள் அகல்யா.

மெனிமோர் ஹாப்பி ரிட்டன்ஸ்.. என்று வாழ்த்தியபடி பரிசை அவள் கைகளில் திணித்தான்.

நன்றி.... என்று அவள் வழிய, அகல்யாவிற்கு எரிச்சல் மண்டிக்கொண்டு வந்தது.



வெல்.. அகில் இதுதான் நிதிலா. நந்துவின் தங்கை, இன்றைய பர்த்டே பேபி. தலையிலேயே செல்லமாய் தட்டினான்.

நித்தி இவங்கதான்..

அகல்யா..

சொல்லப் போனா இவங்க ரொம்பவும் அழகு. எனக்கே ஆசையாய் இருக்கு.

அகல்யா இயந்திரத்தனமாய் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு மேற்கொண்டு பேசத் தோன்றாமல் வேறு பக்கம் பார்வையைத் திருப்பிக் கொண்டாள். ஏனோ அந்த இடமே தற்போது அந்நியமாய் பட்டது. ஆனால் இடையிடையே தன்னைப் பற்றி முன்பே அவளிடம் கூறியிருப்பதாய் சொன்னாளே என்னவாய் இருக்கும் என்று கேள்வி எழுந்தாலும் அடுத்து நடந்த நிகழ்வு அந்நினைப்பையே அழித்தது.

அகல்யா மேடம் ஒரு சின்ன வேலை இவருக்கு இருக்கிறது. அழைத்தால் உங்களை விட்டு நகரமாட்டேன் என்கிறார். கொஞ்சம் சொல்லுங்கள் என்று யாசிப்பு பாவனையில் கேட்ட நிதிலாவின் முதுகில் அடித்த.

ஆதவன் போக்கிரி என்றான். பின்னர் இவளிடம் வந்து அகில் ஒரு பத்து நிமிடம் ஒரு பர்சனல் வேலை, உடனேயே வந்துவிடுவேன் நீ கொஞ்ச நேரம்...!

போயிட்டு வாங்க பர்சனல் வேலைதான் முக்கியம் என்னையென்ன காக்காயா, தூக்கிப் போகப் போகிறது. என்று முகம் சுழித்தபடி அவள் சொன்ன பதிலை கேட்டபடியே நமுட்டுச் சிரிப்போடு நகர்ந்தனர் இருவரும்.

ஆதவண்ணா நான் அடித்துச் சொல்கிறேன். அந்தப் பெண் உன்னை லவ் பண்ணுது.

ஏய் வாலு? எதை வைச்சு சொல்றே?

அதான் லாஜிக், நான் உங்ககிட்டே நெருங்கி நின்னதும், குழைஞ்சு பேசியதும் பார்ட்டிக்கு பயங்கர கோபம், கடுப்பு இருந்திருந்து பிறந்தநாளன்று இப்படியொரு வம்பு எனக்கு வேண்டாம்.

நல்ல பிள்ளைம்மா சீக்கிரம் உன் ஆளைக்காட்டு. பாவம் அகல்யா அங்கே தனியா தவிப்பாள்.

அக்கறையா? உங்களுக்கு அகல்யா மேல் இருக்கிற அக்கறை யிலே பாதியாவது என்மேல இருந்திருந்தா இந்நேரம் வந்திருப்பான்.






திட்டாதே தெய்வமே நான் பின்னாடிதான் நிக்கிறேன். சொன்ன அர்ஜீன் ஜீன்ஸ், டீசர்ட்டில் இளமையாய் இருந்தான்.

அண்ணா நான் சொன்னேன் இல்லை, இவன்தான் அர்ஜீன், சீப் மேனேஜர், நல்ல பையன், ஆனா அண்ணனுக்கு தான் பிடிக்கலை.

அவனை விடு அப்பா என்ன சொன்னாரு?

அந்தப் பொறுப்பு, உங்களுடையது? நீங்கதான் அப்பாகிட்டே பேசி சம்மதம் வாங்கணும்.

இப்பவேவா?

ஆமாண்ணா, ப்ளீஸ் இன்னைக்கு என் பர்த்டே வேற, அப்பாவை கன்வின்ஸ் பண்ண இதைவிட ஒரு அருமையான சந்தர்ப்பம் அமையவே அமையாது. ஆதவனின் தாடையைப் பற்றி கெஞ்சினாள் நிதிலா...

ஆமா ஸார் எங்க வீட்லேயும் கல்யாணத்திற்கு ரொம்பவே அவசரப்படறாங்க... நீங்கதான் எப்படியாவது?

சரி அப்பா எங்கே?

ஹாலில்...!

சரி வாங்க, நீங்க இரண்டு பேரும் வெளியிலேயே வெயிட் பண்ணுங்க.நான் உள்ளே போய் பேசிட்டு அப்புறமா கூப்பிடறேன்.

ஆதவன் நகர்ந்தான். வீட்டினுள் நுழைந்து பெரியவரைத் தேடிப் போனான். விருந்தின் சுவடே இல்லாமல் எல்லா அமர்க்களத்தில் இருந்தும் ஒதுங்கி இருந்தது, அந்த அறை கையில் பகவத் கீதையோடு அமர்ந்திருந்தவர் ஆதவனைக் கண்டதும் புன்னகைப் பூத்தார்.

வாப்பா ஆதவா உன்னைத்தான் பார்க்கணுமின்னு நினைச்சேன். நந்துகிட்டே சொல்லி விடலாம்ன்னு இருந்தேன் நல்லவேளையா நீயே வந்திட்டே?

என்ன விஷயம் அப்பா...?

நந்துவை நீயாவது கண்டிக்கக் கூடாதா ஆதவா? இருக்க இருக்க இப்படி கெட்டுப் போறானே?! குத்துவிளக்கு மாதிரி பொண்டாட்டி வந்தா அவளைத் தூக்கிக் கொடுத்திட்டு வீடே நரகமாயிட்டுப்பா.. இனி என் பேச்சை அவன் கேட்பாங்கிற நம்பிக்கை இல்லை!

கவலைப்படாதீங்கப்பா... நந்துவை கொஞ்சம் கொஞ்சமா நான் திருத்தறேன்.

எனக்கு நம்பிக்கை இல்லை ஆதவன், நிதிலாவிற்கு நான் இருக்கும் போதே கல்யாணம் செய்திடலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கிறேன். அண்ணன் எனும் முறையில் இருந்து நீதான் தம்பி அதை நடத்தித் தரணும்.

நல்ல நேரம்ங்கிறது இதுதான் அப்பா? சொன்னா நம்ப மாட்டீங்க? நானும் நித்தியோட கல்யாண விஷயம் பேசத்தான் வந்தேன். எனக்கு தெரிஞ்ச ஒரு பையன் பெயர் அர்ஜீன். நல்ல பெரிய கம்பெனியில் சீப் மானேஜர் போஸ்ட்டில் இருக்கான். நல்ல குடும்பம், ஆனா நம்ம அளவுக்கு வசதி இல்லை,

வசதியை விடுப்பா மனசு நல்லா இருந்தாலே போதும். பையன் குடும்பத்தை ஒரு நாள் வீட்டுக்கு அழைச்சிட்டு வா, நிதிலாவையும் கேட்கலாம்.

அப்பா நித்தியும் அர்ஜீனும் ஒருவரையொருவர் விரும்புறாங்க. இதை உங்ககிட்டே எப்படிச் சொல்றதுன்னுதான் பயப்படறாங்க.

தம்பிப் பொண்ணு விஷயத்திலே நான் ரொம்பவும் தெளிவா இருக்கிறேன். நந்துவைக் காட்டிலும் நிதிலா வெளி உலகம் தெரிஞ்ச அவளுடைய தேர்வை நான் ஒப்புக்கறேன்.

ஆதவா, நீ போய் ஆக வேண்டிய வேலையைப் பாருப்பா, நல்ல விஷயம் கால தாமதம் வேண்டாம் ஒரு அண்ணனா இருந்து பொறுப்போட நீதான் எடுத்துச் செய்யணும்.

உங்களோட சம்மதத்திற்காகத்தான் காத்திருந்தோம். இனிமே, பாருங்க எப்படி ஜமாய்ச்சிடறேன்னு... அவன் பேசியபடியே, வெளியே வந்து இளசுகளிடம் விஷயத்தைச் சொல்ல இருவருக்கும் ஏகப்பட்ட கொண்டாட்டம்.

நன்றி, நன்றி... என்று வாய் வலிக்கக் கூறினார்கள்.

சரி நித்திம்மா இப்போ சந்தோஷம் தானே! அங்கே அகல்யா வெயிட் பண்ணிக்கிட்டு இருப்பா, நான் போகட்டுமா?!

சீக்கிரமா நீங்களும் கிரீன் சிக்னல் போட்டு வண்டியைக் கிளப்புங்க.

ஆதவன் சிரித்தபடியே அகல்யாவின் இருப்பிடம் நோக்கி விரைந்தான் ஆதவன்.

ஆதவன் போய் நேரம் ஓடிக்கொண்டே இருந்தது. வாவென்று அழைத்து வந்துவிட்டு இப்படி யாருமறியா இடத்தில் தனியாவிட்டு



விட்டுச் சென்ற அவனின் மேல் கோபம் பொத்துக் கொண்டு வந்தது அகல்யாவிற்கு. சில ஆண்கள் இவளைக் கை காட்டி ஏதேதோ பேசிக் கொள்வதும், தனிமையில் நிற்கும் அவளிடம் பார்வைகளை வீசுவதுமாய் இருந்தனர். பின் ஒரு முடிவிற்கு வந்தவளாய், வெறுமையாய் இங்கே நிற்பதை விடுத்து, பேசாமல் ஆதவனின் இருப்பிடம் தேடி நகர்ந்து விடலாம் என்று எண்ணி நாலெட்டு நகர்ந்தவளின் தோளில் கனமான கை ஒன்று விழுந்தது.

ஆதவனோ... என்று திரும்பியவளை சிறு அவகாசம் கூட தராமல் அவனை நோக்கி இழுத்துக் கொண்டான் நந்தகுமார்.

ஹாய் அகல்யா நீ வருவேன்னு நான் நினைக்கவே இல்லை,

சார் ப்ளீஸ், இது பொது இடம். நாலு பேர் நம்மைப் பார்க்கிறார்கள். தயவு செய்து என் கையை விடுங்கள்.

டியர், அப்போது தனிமை நோக்கி செல்லலாமா? யூ ஆர் வெரி ப்யூட்டி இன் திஸ் ஸாரி?! நீ ஏன் தள்ளியே நிக்கணும். கமான் வா ப்ரண்ட்ஸுக்கெல்லாம் உன்னை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்.

பரவாயில்லை சார், நான் கிளம்பணும் நேரமாகி விட்டது.

கிளம்புவதா! நோ நோ உனக்கு இந்த அட்மாஸ்பியர் பிடிக்கலைன்னா சொல்லு, நாம கிளம்பி கிளப்புக்கு போகலாம் நைட் ஸ்டே பண்ணிட்டு மார்னிங் நானே வீட்டில் விட்டுடறேன்.

சார் நீங்க வரம்பு மீறி பேசுறீங்க? நல்லாயில்லை நாலு பேர் இருக்காங்களேன்னு பாக்கறேன்.

கம் ஆன் டார்லிங். அவன் வெறியோடு இழுக்க அகல்யாவின் தோளில் பற்றி எரிந்தது. கூடவே டிரிங்ஸ்ஸின் வாசனை வேறு, தைரியமனைத்தையும் ஒன்று திரட்டி பலங்கொண்ட மட்டும் அவனைப் பிடித்துத் தள்ளினாள்.

இனியும் ஆதவனுக்காய் இங்கே காத்திருப்பது சரியில்லை, அவன் வரும்போது வரட்டும் என்று வீட்டுக்குப் போய் விடவே தீர்மானித்தாள். வேகமாய் நடை போட்டவளை குரலெழுப்பி நந்து அழைப்பது தெரிய, ஓட்டமும் நடையுமாய் சாலையை அடைந்து எதிர்ப்பட்ட ஆட்டோவில் ஏறி அமர்ந்து விட்டாள். விளக்கொளியில் ஒளிர்ந்த அவ்விடம் தற்போது இருட்டினாற்போல் இருந்தது.

எத்தனை கனவுகளோடு இன்பமாய் வந்தாள்.திகட்டத் திகட்ட இனிப்பைத் தந்து வாயின் அருகில் கொண்டு வந்து உண்ணும்போது, அதன் சுவை கசப்பானால் எத்தனை ஏமாற்றமாய் இருக்கும். அத்தகைய மனநிலையில் தான் அகல்யா அப்போது இருந்தாள். வீட்டிற்கு வந்த பின்னரும் மனம் ஒரு நிலையில் இல்லை, இத்தனை நேரம் தன்னைக் காணவில்லைனு ஆதவன் தேடியிருப்பானா? அல்லது அந்தப் பெண்ணிடம் பேசிக்கொண்டு இருப்பானோ?

பார்த்துப் பார்த்து செய்த அலங்காரத்தின் மேல் வெறுப்பாய் வந்தது. நந்தகுமார் விரல் பட்ட இடம் ஏதோ ஊர்வதைப் போல் நீரில் கழுவினாள். எத்தனை முயன்றும் மனம் ஆறவில்லை, கண்களை மூடியபடி கட்டிலில் சரிந்தாள். மூடிய விழிகளில் நீர் பெருகியது. பெண்கள்தான் காதலில் அதிகம் துன்புறுகிறவர்கள். மனதில் நினைத்தவனையே எண்ணி எண்ணி மருகி பசலை நோய் கொண்டு உண்ணாமல் உறங்காமல் தவிப்பார்கள். ஆண்களின் குணமே மலருக்கு மலர் தாவுவது தானே, ஏனோ அகல்யாவினால் அதற்குமேல் அங்கிருக்க இயலவில்லை, மூச்சு முட்டுவது போல் இருந்தது.

அம்மாவின் நினைவு எழ ஊருக்கு கிளம்பினால் என்ன? இப்போதிருக்கும் மனநிலையில் இருக்கவும் முடியாது, பேசாமல் ஊருக்குப் போய் விட்டால் என்ன? அம்மாவைப் பார்த்தால் மனம் சற்றே இலேசாகும் போல் இருந்தது. அந்நினைப்பு வந்த பிறகு ஆடைகளைத் திருத்தினாள். இரண்டு செட் உடைகளை சின்ன பையில் திணித்துக் கொண்டு, தோழிக்கு ஒரு கடிதம் எழுதினாள். அம்மாவைப் போய் பார்த்துவிட்டு வருகிறேன் அகல்யா என்று எழுதி மேசைமேல் வைத்துவிட்டு இரவு 10 மணி பஸ் பிடிக்க கிளம்பினாள்.

## 6

சிக்குண்ட மேகமென
சிதைந்து போகிறேன்..
உன் கண்கள் எனும்
நீல வானத்தில்...!



விசாலம்மாவிற்கு அதிகாலையிலேயே விழிப்பு வந்து விட்டது. காலை நேரம் வாசல் தெளித்து கோலமிட்டு பசும்பாலைக் காய்ச்சி காபி தயாரித்த சமயம் அம்மா எனும் குரல் கேட்க வெளியே வந்தவர் மகளைக் காணவும், வியந்தார்.

என்ன அகல்யாம்மா இப்படி திடீர்னு போன்கூட பண்ணலையே?

ஏம்மா உன்னைப் பார்க்கணுமின்னு தோணிச்சு, கிளம்பி வந்திட்டேன். போன் பண்ணிட்டு வந்தாத்தான் என்னை வீட்டுக்குள்ளே சேர்ப்பியாம்மா?

அசடு கேள்வியப் பாரு திடீர்னு காலையிலே வந்து நிக்குறீயேன்னு கேட்டேன் வாம்மா.. வாஞ்சையுடன் மகளை அழைத்து அமரச் செய்து காபியைத் தந்தாள்.

அக்கம் பக்கம் என அறிந்தவர் தெரிந்தவர்களிடம் பேசி பொழுதுப் போக்கினாள். தனிமையில் இருந்தால், மனம் தேவை யில்லா சிந்தனையை ஏற்படுத்தியது. கிராமப்புறமே சொர்க்கம் என்பார்கள் அறிந்தவர்கள். தூய்மையான காற்று, சுத்தமான நீர், பாசமிக்க மக்கள் என அனைத்தும் இந்நகரத்தில் எங்கே கிடைக்கும். தோட்டத்தில் காலார உலவிக் கொண்டு இருந்தாள் அகல்யா. இங்கு வந்து ஒன்றரை நாள் ஆகிவிட்டது. எப்படியும் இனிமேல் தாமதிக்க முடியாது. பெருமூச்சொன்று வெளிப்பட்டது.

வாழ்வின் ஒவ்வொரு வாசலும் இன்பத்தைத் தருவதில்லை, கடந்து வந்த பாதையின் கசப்பான நினைவுகளை மறக்கத்தான் முயல்கிறேன். விரக்தியும், வேதனையும் மனதைப் போட்டு வதைக்கின்றன. கண்ணீரின் சுவடுகள் கன்னப் பாதையில்! கவலையின் சுவடுகள் இதயப் பாதையில்!

நாட்கள் நகர்ந்தாலும் நினைவில் ஓரம் நெஞ்சைப் பிழிவதைப் போல்! என் மனமெங்கும் இன்பத்தினை விதைக்கத்தான் உனை நினைத்தேன்.

வெற்றுப் பக்கமாய் இருந்த மனம் ஒரு முழுநீள ஓவியமாய் உன் முகத்தை நிறைத்திருந்தது. உன் நினைவின் தாக்கம், நிலவிலும், வானிலும், மின்னும் ஒளியாய் நீ என்னுள் பிரகாசிக்கிறாய், காற்று அடித்தபோது அங்கிருந்த பூக்களின் மனம் நாசியைத் தழுவியது. மனம் தானாக ஆதவனின் நினைப்பில் ஆடியது. இப்படி சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பி வந்துவிட்டது ஆதவனுக்கு வருத்தமாயிருக்குமா?

அகல்யா இங்கே வாயேன் அத்தை வந்திருக்காங்க?

நினைவுகளை ஒதுக்கிவிட்டு கூடமான வரையில் புன்னகையுடன் சென்றாள்.

வாங்கத்தை! நலம்தானே!

நா தூக்கி வளர்த்த பொண்ணு என்னையே குசலம் விசாரிக்கிறே? ம்.. முனகலாய் பேசிய வள்ளியம்மாள் தந்தையின் தங்கை, ஒரு விஷயம் சொல்வதானால் உவமையுடன் பேசுவதே அவள் வழக்கம். தன் முன்னே உள்ள எதிராளியை நோகச் செய்வதே கடமையாய் கருதுபவள்.

ஊரிலிருந்து வந்து இருக்கியே எப்படி என்னன்னு பார்க்கலாம்ன்னு வந்தேன். எங்கே இருக்கே?

பிரண்டு கூட?

இந்த பொம்பளை பிள்ளைங்க எல்லாம் தங்குமே அங்கேயா?

இல்லை அத்தை பிரண்டோட வீட்லே நானும் அவளும்தான்.

ம்.. என்னத்தைச் சொல்ல.... நம்ப குடும்பத்திலே ஆம்பளைங் களே வெளியூர் போக தயங்குவாங்க, நீ பொட்டப்புள்ளே, காலம் கெட்டுப்போச்சு?!

ஏற்கனவே மனம் வெறுத்துப் போய் இருந்தவளுக்கு அத்தை யின் பேச்சு மேலும் எரிச்சலையே உண்டு பண்ணியது. ஆனால் தாயின் கண் அசைவில் ஏதும் பேசாமல் மௌனம் காத்தாள்.

ம்.. என்ன பண்றது? எங்கண்ணன் செத்தாலும் ஒரு நல்லது கெட்டதுன்னா இந்தக் குடும்பத்திலே எனக்கும் பங்குண்டுல்லே! மதனி போனவரை போகட்டும். எம்மகன் மாடசாமிக்கு உம் பொண்ணை முடிச்சுப் புடலாம். பொட்டைப்பிள்ளைக்கு வெளி உத்தியோகம் என்னத்துக்கு! நாளைக்கு ஏதுன்னா நாமயில்லை அடிச்சிக்கணும். இப்போ சொந்தமும் விட்டுப் போகாது பாரு.

அத்தே உங்க நல்ல மனசுக்கு நன்றி! இருந்தாலும் எனக்குன்னு சில கடமைகள் இருக்கு, அதையெல்லாம் முடித்த பிறகுதான் கல்யாணம் எல்லாம். அதனால உங்க பிள்ளைக்கு வீட்டுக்குள்ளே இருக்கிற பொண்ணா பாருங்க.

பார்த்தியா மதனி இப்பவே எத்தனை இடக்கா பேசுறா. சீக்கிரமா மசிய வைச்சு நல்ல முடிவைச் சொல்லு, நான் வர்றேன். வர்றேன் டீம்மா. ஆளுதான் வளர்ந்திருக்காளே தவிர கொஞ்சங்கூட மட்டு மரியாதையே தெரியலை, வாசலில் முணுமுணுத்தபடி அவள்மறைய...



என்னடாம்மா அத்தைக்கிட்டே போய் இப்படி பேசிட்டியே?

அட விடுங்கம்மா, உங்களுக்கு ஒண்ணும் தெரியாது. நீங்க எல்லாரையும் நல்லவங்களாவே பாக்குறீங்க? இப்போ இப்படி வாய் கிழியப் பேசறவங்க அன்னைக்கு அப்பா இறந்தப்போ அனாதையா நின்னோமே அப்போ ஏன் வரலை?

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லைன்னு ஒரு மொழி உண்டுடா, சரி அவங்களை விடு. அம்மா நான் கேட்குறேன் உன் கல்யாணத்தை இந்த வருடமே முடித்து விடலாம்னு இருக்கிறேன். உனக்கும் வயசாகுது என்னாலும் முன்னே மாதிரி முடியலை, நீயென்னடா சொல்றே?

இப்ப கல்யாணத்திற்கு என்னம்மா அவசரம்?

அம்மா உன்னை நம்பாம கேக்கறதா நினைக்காதே? உன் மனசிலே யாராவது இருந்தால் சொல்லும்மா, அவரையே உனக்குக் கல்யாணம் செய்து வைத்து விடுகிறேன். எனக்கு உன் சந்தோஷம்தான் முக்கியம்.

அம்மா இப்படி பேசியது அகல்யாவிற்கு, வியப்பாகவே இருந்தது. எத்தனை சாங்கியம் சடங்கு பார்ப்பவள் அம்மா இத்தனை பக்குவமா என்று?

## பெண்கள் சாப்பிட வேண்டிய பழம்!

ஆஸ்டியோபோரோசிஸ் என்ற எலும்பு மெலிவு நோய் பெண்களைத் தாக்குகிறது. குறிப்பாக நாற்பது வயதில் இருந்தாவது எலும்பு மெலிந்து போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்காக இவர்கள் கால்சியம் மாத்திரையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இவற்றிற்கு எளிய வழியாக தினமும் மூன்று புரூன் (Prune) பழங்களை சாப்பிட்டு வந்தால் போதுமாம். இதனால் எலும்பு தேய்மானம் இன்றி நன்கு அடர்த்தியாக இருக்கும் என்கிறது சமீபத்திய அமெரிக்க ஆய்வு ஒன்று. 12 மாதங்களிலேயே முதுகுவலி, முழங்கை வலியும் முற்றிலும் குணமாகி எலும்பு மண்டலம் ஆரோக்கியமாக இருக்கும். உலர்ந்த ஆப்பிள் துண்டு களையும் 100 கிராம் வீதம் பெண்கள் சாப்பிட்டு வர வேண்டும்.

தாயை அமர வைத்து அவள் மடியில் சரிந்தாள். தாயின் மடிக்குத்தான் எத்தனை மகிமை. மனதில் மலையளவு சுமையிருப்பினும் பஞ்சாய் கரைக்கும் உணர்வு அன்னையின் மடிக்குத்தானே இருக்கிறது.

அம்மா இத்தனை பக்குவமானது மனதிற்கு நிம்மதியளித்தாலும் அவள் நிலைமை சீராக இல்லாதபோது என்ன சொல்ல? நான் ஒருவரை மனதார விரும்புகிறேன். ஆனால் அவர் என்னைத்தான் விரும்புகிறாரோ என்று பொதுவாய் கூறி விட்டு மடியிலே புதைந்தாள்.

இங்கே....

சென்னையிலோ ஆதவனின் மனம் ஒரு நிலையில் இல்லை. அகல்யாவைக் கண்ட நாளில் இருந்தே தன்னுள் பூத்த காதல் பூவை வளர்ப்பவன், அவளின் பார்வை இசைந்தாலும், தன் எண்ணத்தைச் சொல்லிடத் தயக்கம். அகல்யாவின் மறுப்பை ஏற்கும் திறன் அவனிடம் இல்லையே?!

நிதிலாவின் பிறந்த நாள் விழாவை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு தன் மனதில் உள்ளவைகளை அவளிடம் கொட்டி விடலாம் என்றெண்ணிதான் அன்று அவளை அழைத்தான். அகல்யா அழகுப் பதுமையாய் அல்லவா இருந்தாள். அந்த இரண்டு விழிகளில் அவனை வாரிச் சுருட்டிக்கொண்டு ஆனால் இடைப்பட்ட நேரத்தில் என்ன நடந்திருக்கும். எத்தனை கற்பனைகள் செய்து வைத்திருந்தான். திரும்பிச்செல்லும் நேரம் தன் காதலைக் கூறி சம்மதம் தந்தபின், அந்த பட்டு கைகளில் முத்தமிட வேண்டும் எல்லாம் எதற்கும் இல்லாமல் ச்சே?!

அன்று நிதிலாவின் விவகாரம் முடிந்த பின் அகல்யாவைத் தேடி வந்தவனின் விழிகளில் பெரும் ஏமாற்றம். சுற்றிலும் தேடிவிட்டு, வாட்ச் மேனிடம் விசாரித்தால் அந்த அம்மா இப்போதான் போனாங்க என்றான்.

யார்கூட?

தனியாத்தான் சார்... ஆட்டோவில், அகல்யாவைப் போய்ப் பார்க்க எண்ணியவனை நந்துவும், பெரியவரும் பிடித்துக் கொள்ள, அவன் அங்கிருந்து கிளம்ப இரவு 10 மணியாகிவிட்டது. இதற்கு மேற்பட்டு அவளின் வீட்டிற்குப் போவது அத்தனை நன்றாயிராது என்றுணர்ந்து வீட்டிற்குப் போய் விட்டான். மறுநாள் காலையில் இருந்து செல்பேசிக்கு முயன்று கொண்டே இருந்தான் அழைப்பு



ஏற்கப்படவே இல்லையென்றதும் பயமாகிப் போய்விட்டது. இரவு என்றும் பாராமல் வீட்டிற்குப் போய் இருக்க வேண்டுமோ? என்ற நினைப்பில் உடனே வண்டியைக் கிளப்பி அகல்யாவின் வீடு நோக்கித் திரும்பினான்.

ஆனால், அங்கேயும் பெருத்த ஏமாற்றம், தட்டிய கதவிற்குப் பின்னால் வேறொரு இளம் பெண். கண்களில் மிச்சமிருந்த உறக்கத்துடன் இருந்தாள். மேடம் இங்கே அகல்யான்னு....?

என் தோழிதான் நீங்க?

நான் ஆதவன் அகல்யாவுடைய...

முதலாளி.. வாங்க ஸார், உட்காருங்க அவள் வழிவிட்டு அவன் அமர இடமளித்தாள்.

மேடம் அவங்க?

நேற்று ஏதோ விழாவுக்குப் போறதா சொன்னா. எனக்கு ஆஸ்பிட்டலில் நைட் டியூட்டிங்கிறதால நான் போயிட்டு காலையில்தான் வந்தேன். அவள் வீட்டிலே இல்லை, அம்மாவைப் பார்க்கணும் போல இருக்கு ஊருக்குப்போறேன்னு சின்னப் பேப்பரில் எழுதி வைச்சிட்டுப் போயிட்டா... ஏதும் பிரச்சனையா ?

இல்லே ஒரு முக்கியமான ஆபீஸ் பைல் சின்ன ஒர்க்தான் அகல்யா இருந்தா நல்லாயிருக்கும்ன்னு தோணிச்சு அதான். அப்படியென்ன திடீர்னு அவங்க அம்மாவுடைய உடம்புக்கு ஏதாச்சும்...

இல்லே ஸார்... இவ கொஞ்சம் அம்மா பைத்தியம். உடனே போயிட்டா. எனக்கு போன் பண்ணினா நான் உடனே உங்களை கூப்பிடச் சொல்றேன். ஏதாவது சாப்பிடுங்களேன்.

பரவாயில்லை...

நோ..நோ... கண்டிப்பா சாப்பிடணும். உள்ளே சென்று இரண்டு ஆரஞ்சு பழச்சாற்றை கண்ணாடித் தம்ளரில் நிரப்பிக் கொண்டு வந்தாள்.

அதை சுவைத்தபடியே, மேடம் எங்கே ஒர்க் பண்றீங்க?

நான் பிரியா நர்சிங் ஹோமில் ஸ்டாப் நர்ஸ்ஸாயிருக்கேன்.

ஸாரி நைட் டூட்டி முடிச்சிட்டு ரெஸ்ட் எடுத்திட்டு இருந்தவங்களை தொந்தரவு செய்திட்டேன். அவன் டம்ளரை டேபிளில் வைத்தபடி எழுந்தான்.

எதையும் தொந்தர்வா நினைக்க ,எனக்குத் தெரியாது சார்...

நர்ஸாச்சா...அன்பும் பொறுமையும் தானே நோயாளிக்கு பாதி மருந்து. அகல்யா வந்தவுடன் எனக்குப் போன் பண்ணச் சொல்லுங்க மிஸ்!

அபிநயா... என்றாள்.

வரேன்... விடைபெற்று கிளம்பியவனை வேறு கோணத்தில் பார்த்தாள். அகல்யாவின் சிறு பிரிவு கூட தாளாதது போல் பேசுகிறாரே என்று!

அதன்பின்னர் மேற்கொண்டு கழிந்த இரண்டு நாட்களும் ஆதவனைப் பாடாய்படுத்தின. நேரில் சென்று விசாரித்ததோடு மூன்று முறை போனில் அபிநயாவிடம் விசாரித்தாகிவிட்டது. இனி மேற்கொண்டு கூப்பிட்டால் அவளே தவறாக எண்ணக் கூடுமென்ற நினைப்பில் தவிப்போடு காத்திருந்தான். போய் வருவது பற்றி தோழியிடம் கூட சொல்லாமல் சென்றிருக்கிறாள் என்றால் காரணம் என்னவாக இருக்கும். ஒருவேளை நிதிலா என்னுடன் பேசிக்கொண்டு இருந்ததாலா, இல்லை அகல்யாவை நான் தனித்து விட்டுச் சென்றதாலா, பல்வேறு யோசனைகளுக்கு இடையில் திடீரென்று மூளையில் உரைத்தது.

ஒருவேளை நந்தகுமார் ஏதேனும் துன்புறுத்தி விட்டிருப்பானோ அதனால்தான் சொல்லாமல் கொள்ளாமல் சென்று விட்டாயா அகல்யா.. கடவுளே அது உண்மையென்றால் நீ எப்படியெல்லாம் துடித்திருப்பாய்! சே! நான்தான் மடத்தனம் செய்து விட்டேன். உன் பட்டு கைகளை சிறை பிடித்து வைத்துக்கொண்டு, கருவண்டு விழிகளில் என் இமைகளை இணைத்து என் அன்பை, நேசத்தை வெளிப்படுத்தி உன் முகம் சிவக்கும் அழகைப் பார்க்க வேண்டுமென்று துடித்தேனே! எங்கிருந்தாலும் சீக்கிரம் வந்து விடேன் கண்மணி என்று மனதிற்குள்ளேயே புலம்பினான் ஆதவன்.

## 7

**நான் ஒரு விநாடி கூட**
**கண் இமைப்பதில்லை...**
**அந்த இமைப்பொழுதில் என்**
**வாசலை நீ கடந்து விட்டால்....**



**கா**ற்றின் வெள்ளைத்தாளில் உன் விரலால் நீ வரைந்த ஓவியம் நட்சத்திரம்! வெண்ணிற மேகப் பெட்டிக்குள் ஆடையில்லாப் பெண்ணாய் அழகிய நிலவு! முத்தமிடத் துடித்தேன் கண்களில் காதல் குழைத்து வெயிலாய் மாறி சுட்டெரித்தான் பகலில் சூரியன்.

என்ன அகல்யா? நீ பாட்டுக்கு சொல்லாம கொள்ளாம ஊருக்குப் போயிட்டே! அப்படியென்ன அவசரம் அம்மாவுக்கு?!

நல்லாயிருக்காங்க அபி! என்னமோ திடீர்னு அம்மாவைப் பார்க்கணுமின்னு தோணுச்சி, அதான் உன்கிட்டே கூட சொல்லாம உடனே கிளம்பிட்டேன் சாரிடா....

இந்த சாரியை உங்க ஆதவன்கிட்டே சொல்லு அகல்யா. புரியாமல் பார்த்தாள்.

நீ கிளம்பிப்போன இரண்டு நாளும் என்னைவிட அவர்தான் துடிச்சிப் போயிட்டார். மூணு தடவைக்கு மேல போன் பண்ணி விசாரிச்சதோட நிக்காம நேரிலேயே வந்திட்டாரு?

அகல்யாவிற்குள் துணுக்குற்றது. அன்று சொல்லாமல் என்னைத் தனித்து விட்டு சென்றதைப் பற்றி பேசவா? எப்படியாகிலும் நந்துவால் தனக்கு ஏற்பட்ட வலிக்கு இவர்தானே காரணம்? இப்போதென்ன புதிதாக அக்கறை?

அபிநயா தோழியின் முகத்தையே உற்று நோக்கினாள். என்ன அகல்யா நான் பேசிகிட்டு இருக்கேன் நீ வேற எதையோ யோசிக்கிற மாதிரி தெரியுது?

இல்லை... ஏதாவது முக்கியமான வேலையா இருக்குமோ?

எனக்கென்னமோ வேலைக்காக உன்னைக் கூப்பிட்டா மாதிரி தெரியலை? நீ எப்போ திரும்பி வருவேன்னு தெரியாதுன்னு சொன்னதும் அவர் முகம் ரொம்பவே சுருங்கிப் போச்சு என்னடியம்மா விஷயம்?

நீ வேற அபி அதெல்லாம் ஒண்ணும் இல்லை.

தோழியிடம் மேற்கொண்டு பேசுவதைத் தவிர்க்க வேகமாய் குளியல் அறைக்குள் புகுந்து கொண்டாள் அகல்யா. அபிக்கும் இரவு ஷிப்ட் என்பதால் பகல் முழுக்க வீட்டில் தான் இருப்பாள். தான் இருக்கும் மனநிலையில் ஏதாவது உளறி வைத்து விட்டால் இங்கு இருப்பதற்கு பேசாமல் ஆபீஸிற்கே கிளம்பி விடலாம் என்று கிளம்பினாள்.

என்ன இது? இப்பத்தானே வந்தே? களைப்பு தீர ஒரு நாள் ரெஸ்ட் எடுத்திட்டு நாளைக்குப் போகலாமே?

நானென்ன நடந்தா வந்தேன். ட்ரெயினில்தானே! இட்ஸ் ஓகே...

உப்புமா பண்ணியிருக்கேன் சாப்பிட்டுட்டு போ; பீங்கான் தட்டில் வைக்கப்பட்ட இரண்டு கரண்டி உப்புமாவையும், ஒரு டம்ளர் தண்ணீரையும் அவசரமாய் பருகிவிட்டு ஓடினாள். மனதிற்குள் ஆயிரம் சமாதானங்கள் சொன்னாலும் முதலில் ஆதவனின் முகம் பார்த்தால் தேவலாம் போல இருந்தது.

அவள் ஒருவித பதட்டத்துடனே அலுவலகத்திற்குள் நுழைந் தாள். எதிர்ப்பட்ட உதய்யைப் பார்த்து மெல்ல புன்னகைத்தாள்.

என்ன மேடம் ஆளையும் காணோம்? அட்ரஸையும் காணோம்?

ஊருக்குப் போயிருந்தேன்... ஸார் இருக்காரா?

ம்...! ரூமில்தான் இருக்கார்.

அகல்யா உதய்யைத் தாண்டி நடந்தாள். அறைக்கதவை திறந்து உள்ளே நுழைந்ததும், கையிலிருந்த ரிசீவரை நழுவவிட்டான் ஆதவன். பின் சுதாரித்து உடனே லைனை கட் பண்ணிவிட்டான்.

வாங்க அகல்யா! ப்ளீஸ் பி சீட்!

தாங்க்ஸ்.. சில நிமிடங்கள் இருவருக்கும் பேச்சு வரவில்லை...

என்னாச்சு அகல்யா உடம்புக்கு ஏதாவது?

அம்மாவைப் பார்க்கணும் போல இருந்தது. அதான் உடனே? ஸாரி இன்பார்ம் பண்ண முடியலை?!

நீங்க வீட்டுக்கு வந்ததா அபி சொன்னா?

ஆமாம் அன்னைக்கு விருந்துக்கு வந்திட்டு உடனே கிளம்பிட்டீங்க. ஒரு வார்த்தை கூட சொல்லாம அதனால்தான்..

ஆக குற்ற உணர்வில்தான் தேடி வந்திருக்கிறான். அக்கறையில் இல்லை என்றதும், ஆதவனைக் கண்டதும் இளகிய மனம் இப்போது இறுகியது.

என்னுடன் வரப் பிடிக்கவில்லையென்றால் சொல்லி யிருக்கலாமே? இப்படி சொல்லாமல் போவதுதான் நாகரீகமா அகல்யா?

யாரும் அறியா இடத்தில் இன்னொரு பெண்ணைக் கண்டவுடன் என்னை அம்போ என்று விட்டவர் நாகரீகம் பற்றிப் பேசுவது வேடிக்கைதான்.



அனுமதி கேட்டுத்தானே போனேன்..

அங்கு எனக்கு ஏதாவது நேர்ந்திருந்தால், தனித்துப் பேசும் அளவிற்கு ஆள் உண்டென்றால் என்னையேன் அழைத்துப் போக வேண்டும்.

ஏதும் பிரச்சனையா?

ம்.... எனக்கு பயங்கரமான தலைவலி, சொல்லிவிட்டுப் போக நீங்களும் அச்சமயம் என் அருகில் இல்லையே?

அவள் குரலில் ஏளனம் கலந்திருந்தது.

அகல்யா.. நான் ஏதும் உங்களிடம் தவறாக நடந்து கொண்டேனா?

அதெல்லாம் இல்லை. நிஜமாகவே எனக்கு தலைவலிதான். அதோடு அம்மாவையும் பார்க்க வேண்டுமென்று தோன்றியதால் அவசரமாய் போக வேண்டியதாகப் போய்விட்டது.

உங்களுடைய தலைவலிக்கு காரணம் தெரிகிறது. ஆனால், அது நந்தகுமாரால் விளைந்ததா அல்லது நிதிலாவுடன் நான் சென்றதாலா என்றுதான் புரியவில்லை?!

நிதிலா உங்கள் நண்பரின் தங்கை, அவருடன் நீங்கள் பேசுவதால் எனக்கு ஏன் கோபம் வரவேண்டும்? அதுவும் நெடுநாள் பழகியவர் தனிமையில் இருக்க மூணாம் மனுஷியாய் நான் ஏன் ?

அவளை நோக்கி கையமர்த்தினான் ஆதவன், அகல்யா... அன்று விருந்தில் உங்களிடம் ஏதும் தவறாக நடந்து கொண்டானா?

அடுத்த இதழ்... அகல்யா



பிரபல நாவலாசிரியர்
**ஆர். மகேஸ்வரியின்**
முற்றிலும் வித்தியாசமான
எழுத்தோவியத்தில்
**என்னை மறந்ததேன் தென்றலே**

அழுத்தமான கேள்வியெழுப்பினான்.

வீணாக எதையும் கற்பனை செய்ய வேண்டாம். எனக்கு உடம்பு சரியில்லை, என் அறைக்குப் போகலாமா ஸார்.

அவள் சட்டென்று பேச்சை துண்டித்துவிட்டதால் அவனால் ஏதும் பேச முடியவில்லை, இறுகிய முகத்துடன் ரஞ்சன் ஸாரிஸ¬க்கு கொட்டேஷன் அனுப்பிடுங்க. அவங்க மெயில் அட்ரஸ் இந்த டைரியில் இருக்கு. அவுட் லைனா நிறுத்தின டிஸைன்ஸ்ஸை வரைஞ்சிடுங்க, நீங்க போகலாம் .

எஸ் ஸார்... அவளும் வேகமாய் வெளியேற ஆதவனின் மனம் கனத்தது. என் மனதில் உள்ளதை நான் உன்னிடம் சொல்லவே முடியாதா? இந்த உன் கோபம் எப்போது தீரும். பெருமூச்சுடன் அடுத்த வேலையைத் துவங்கினான்.

எந்தவொரு கம்பீரமான ஆண் மகனையும் காதல் கோழை யாக்கி விடுகிறதே! மனம் விரும்பியவளின் முகம் திருப்புதலை தாங்க முடியாமல் தவிக்கிறான் ஆண்மகன்.காதல் தாக்கமும், ஏக்கமும் பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும்தான். பெண்ணின் அன்பும் அரவணைப்பும் கிடைக்கும் எந்த ஆண்மகனும் குழந்தையாகிப் போகிறான். அவள் அருகாமைக்கு ஏங்குகிறான்.

வழக்கமான பெண் பார்க்கும் படலமாய் இல்லாமல் அழகான இரு குடும்பங்களின் சந்திப்பாய் இருந்தது. நிதிலா அர்ஜீனின் நிச்சயம் ஒரு பெரிய ஹோட்டலின் ஹாலில் நடந்தது. இரண்டு குடும்பங்களும் ஒருவரையொருவர் சந்தித்து மனம் விட்டுப் பேசிக்கொண்டனர்.

ஏய்! என்னவோ நீ ரொம்ப பயந்தியே! பார்த்தியா நம்ம இரண்டு பேமிலியுமீ கல்யாணத்துக்கு சம்மதிச்சிட்டாங்க...

பின்னே! என்னை மாதிரி அழகான பொண்ணை மருமகளா ஏத்துக்க யாருக்கு கசக்கும். அதிலும், இருந்திருந்து நம்ம பையனுக்குப்போய் இத்தனை அழகானப் பொண்ணான்னு?

ஏய்.... அவளின் காதைப் பிடித்து திருகினான். நிதிலாவின் தந்தை அதை பெருமிதத்தோடு கண்டார். மகனும் காதல் திருமணம் செய்து கொண்டான் என்று சொன்னானே தவிர ஒரு நாள் கூட அவனும் மருமகளும் அன்னியோன்யமாய் ஒருத்தரை ஒருத்தர் சீண்டிக் கொண்டு ஏன் அன்பான பார்வைகளை பரிமாறிக்கொண்டதைக் கூட அவர் பார்த்தது இல்லையே, அந்த விஷயத்தில் அவர் மருமகளைக் குறை கூறிட மாட்டார். தவறு



மொத்தமும் மகன் மேல்தான். நந்தகுமார் செய்த ஒரே நல்ல காரியம் அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கூட்டி வந்ததுதான். குத்துவிளக்கைப் போன்ற தங்கமான பெண். இவனிடம் சிக்கி சீரழிவதைக் காட்டிலும் இறப்பதே மேல் என்று இறைவன் எடுத்துக் கொண்டான்· போலும். இப்போது மகளின் வாழ்வு கட்டாயம் சிறக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே அவள் விரும்பியவனையே கல்யாணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டார். அர்ஜீனின் தந்தையின் கைகளைப் பற்றியபடியே, ரொம்ப நாளைக்குப் பிறகு என் மனது நிறைந்திருக்கிறது சம்பந்தி.

அய்யா நீங்க பெரிய இடம், அர்ஜீன் நிதிலாவைக் காதலிக் கிறான்னு சொன்னதும், நான் உடனே பயந்தேன். எங்களுக்கு இருக்கிறது ஒரே பிள்ளை, இந்தக் கல்யாணம் நடக்கலைன்னா அவன் என்ன ஆவானோன்னு நர்ன் கவலைப்பட்டேன். சொற்ப வருமானமா இருந்தாலும் என் மகனை நான் எந்தக் குறையும் இல்லாமத்தான் வளர்த்தேன். அவன் ஆசைப்பட்டதையும் முடிந்தவரையில் தந்தேன். இப்ப எனக்கும் கவலை விட்டது.

பணம் எனக்கு பல தலைமுறைக்கு இருக்கிறது, ஆனால் சராசரி மனிதர்களுக்கு கிடைக்கும் நிம்மதி கூட எங்களுக்கு இல்லை, எம்மகள் இத்தனை சந்தோஷம் அடைந்ததை நான் இன்றுதான் பார்க்கிறேன். இது எப்போதும் நிலைக்கும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஆதவன் அப்போது உள்ளே நுழைந்து விருந்துக்கு ஏற்பாடு பண்ணியிருக்கிறேன்என்று சொன்னான்.

வா ஆதவா, சம்பந்தி எனக்கு இரண்டு மகன்கள் இவன் ரொம்பவும் பொறுப்பானவன்.

தெரியும் அர்ஜீன் சொல்லியிருக்கான். இவர் முயற்சியால்தான் இந்த கல்யாணமே நிச்சயமாச்சின்னு!

தங்கமான பையன்.

அப்பா என்னைப் பாராட்டியது போதும் வாங்க சாப்பிட போகலாம்.

உணவு முடித்து திருமணத் தேதியும் குறித்துவிட்டு, அர்ஜீனின் குடும்பம் விடைபெற்று கிளம்பிட நிதிலா ஆதவனிடம் வந்து நன்றியுரைத்தாள்.

ஏய்! வாலு, இது என் தங்கைக்காக நான் செய்தது, இதுக்குப் போய் நன்றி சொல்கிறாயே?

சாரி அண்ணா ஆமா அகல்யாகிட்டே பேசினீங்களா.

எங்கே? அன்னைக்கு விழாவில் இருந்து கிளம்பி போனவள் இரண்டு நாளா ஆபீஸுக்கே வரலை. அவ வீட்லே போய் பார்த்தா அபின்னு அவளோட பிரண்ட் ஊருக்குப் போயிருக்கிறதா விவரம் சொன்னா..

அப்புறம்?

நான் என்ன கதையா சொல்றேன்.. மேடம் என் மேல பயங்கரமான கோபத்திலே இருக்காங்க.

அது ஏன்னு நான் சொல்லவா?

சொல்லேன்

அன்னைக்கு அவங்களை விட்டுட்டு என் கூட வந்திட்டீங்க இல்லை?

ஒரு சின்ன விஷயம் அதுக்கு, போயா இவ்வளவு கோபம். நல்ல பெண்களப்பா?

அண்ணா எதை வேண்டுமானாலும் நாங்கள் விட்டுத் தருவோம். மனதுக்கு பிடிச்ச ஆண்மகனோட யாராவது ஒரு பொண்ணு நெருக்கமா இருந்தா எங்களாலே தாங்கவே முடியாது.

என்ன லாஜீக்கோ?!

அகல்யாவே பரவாயில்லைண்ணா இதுவே. அர்ஜீன் கூட யாராவது ஒரு பொண்ணு பேசி இருந்தா அவனும் காலி அந்தப் பொண்ணும் காலி....

நிஜமாகவே அர்ஜீன் ரொம்பப் பாவந்தான்.

அதைவிடுங்க முதல்ல போய் அகல்யாவை சமாதானப் படுத்துங்க. நானும் வந்து பாக்குறேன்.

ஆதவன் அங்கிருந்து அகல்யாவை எப்படி இயல்பு நிலைக்கு திருப்பிக் கொண்டு வருவது என்ற நினைப்பிலேயே கிளம்பினான்.

## 8

எங்கிருந்தோ உன் குரல்
காற்றில் கவிதையாய்!
கானலாய் போன விழி நீரில்
தெளிவில்லாமல் உன் உருவம்
நம் காதலைப் போலவே!



அகல்யா ஒரு டென் மினிட்ஸ் என்னோட கேபினுக்கு வரமுடியுமா? என்று ஆதவன் சற்று நேரத்திற்கு முன்புதான் அழைத்திருந்தான். அன்றைய தின பேச்சிற்குப் பிறகு ஆதவன் அலுவலக விஷயத்தைத் தவிர வேறு எதையும் பேசவே இல்லை, அப்படியே பேசினாலும் இண்டர்காமில் மட்டுமே பேசியவன் இப்போது ஏன் நேரில் அழைக்க வேண்டும் என்று யோசனையோடு கிளம்பினாள். நான்கு தினங்களாய் அவனிடம் பேசாதிருந்தது கஷ்டமாக இருந்த போதும் ஆதவனின் மனதில் என்ன இருக்கிறது என்பதை அறியாமல் எப்படி இலகுவாய் பேச முடியும். ஒருவேளை அவள் எண்ணியது உண்மையானால், இவள் ஒதுங்க வேண்டியதுதானே முறை. ஏதேதோ எண்ணங்களோடு அவள் அனுமதி கேட்டு உள்ளே நுழைய அங்கு அவளிற்கு முன்னாலேயே நிதிலா வந்து இருப்பதைக் கண்டதும் சுரத்தில்லாமல் போனது அகமும், புறமும். நிதிலாவை இதுவரை அகல்யா அலுவலகத்தில் பார்த்தது இல்லை, வழக்கத்திற்கு மாறாக அவள் வந்திருப்பதும், ஆதவனின் முகத்தில் என்றுமில்லாமல் தோன்றிய மகிழ்வை காணவும் கலங்கினாள். மூவரும் சில விநாடிகள் மௌனத்தின் பிடியில் சிக்கி இருந்தனர். நிதிலாவே அதைக் கலைத்தாள்.

என்ன அகல்யா என் பிறந்தநாள் விழாவிற்கு வந்திட்டு சாப்பிடாமலேயே கிளம்பிட்டீங்க?

கொஞ்சம் தலைவலி அதனால்தான், நானில்லை என்றால் என்ன? விழா நல்லபடியாய் நடந்தது இல்லையா?

எல்லாம் ஆதவனின் தயவில்!

நிதிலா வேண்டுமென்றே சீண்டினாள்.

### முகத்தில் எண்ணெய் வழிகிறதா?

சிலருக்கு எப்பொழுதும், முகத்தில் எண்ணெய் வழிந்து கொண்டிருக்கும். அதைப் போக்க பச்சைப் பயிரை அப்படியே தோலுடன் அரைத்து மாவாக்கி வைத்துக் கொள்ளுங்கள். குளிக்கப் போவதற்கு முன் அந்த மாவை நீரில் குழைத்து முகத்தில் நன்றாகத் தடவி ஊற விடுங்கள். கால்மணி நேரத்திற்குப் பிறகு குளிக்கவும். தொடர்ந்து செய்து வந்தால் நாளடைவில் முகத்தில் எண்ணெய் வழிவது குறையும்.

ஸார்.. எதற்காக என்னைக் கூப்பிட்டீர்கள். வேலையிருக்கிறது சொன்னால் சீக்கிரம் போவேன்.

ஏன் ? போவதிலேயே குறியாய் இருக்கிறீர்கள்?

இலேசாய் தலைவலி?

ரொம்பவும் அதிகமோ என்ற நிதிலாவைப் பார்த்து...

இப்போதானே வந்து இருக்கு இனிமேல்தான் தெரியும் என்றாள் அகல்யா..

நிதிலா ஆதவனிடம் அகல்யாவின் தலைவலியே நான்தான் என்றாள் அடிக்குரலில்!

எவ்வளவு திறமையான, படித்த பெண்ணாக இருந்தாலும், தான் நேசிக்கும் ஆணை வேறு பெண் உரிமை கொண்டாடினால் பொறாமையும் கோபமும் வருவது இயல்புதானே, அந்த நிலையில்தான் இப்போது அகல்யாவும் இருந்தாள். அவர்களின் வேடிக்கையான பேச்சுகளை ரசிக்கும் மனநிலை அவளிடம் அப்போது இல்லை.

அகல்யா அடிக்கடி தலைவலின்னா முதல்ல செக் பண்ணியே ஆகணும். இவருக்கு கூட நிறைய ஸ்பெஷல் டாக்டர்ஸ் தெரியுமே?

உங்க அக்கறைக்கு நன்றி நான் வர்றேன் சார். நீங்க பேசி முடித்த பிறகு என்னைக் கூப்பிடுங்க!

நிதிலா உங்கிட்டே ஏதோ பேசணுமாம் ஆதவன் மெல்லிய குரலில் சொன்னான்.

அகல்யா எனக்கு கல்யாணம் நிச்சயம் ஆகியிருக்கு நீங்கள் கட்டாயம் வரவேண்டும் என்று பத்திரிக்கையை நீட்டினாள்.

நிதிலா நீட்டிய பத்திரிக்கையை கைகள் மெலிதாய் நடுங்கிட வாங்கியவள் அதில் நிதிலாவும், அர்ஜீன் என்று பெயரிடப்பட்ட இளைஞனும் புன்னகை முகங்களாய் இருக்க, அகல்யாவிற்கு பனிமழையில் நனைவது போல் உள்ளம் குளிர்ந்தது. பிரகாசமான முகத்துடன் நிதிலாவின் கைகளைப் பற்றி வாழ்த்துக்கள் நிதிலா என்றாள்.

இன்பேக்ட், எங்க கல்யாணம் நடக்கக் காரணமே ஆதவண்ணா தான். நானும் அர்ஜீனும் லவ்வர்ஸ், லவ் பண்ணிட்டோமே தவிர வீட்டில் சொல்ல இருவருக்குமே பயம், அவன் வீட்டுலே ஏகப்பட்ட நெருக்கடி வேற, நந்து அண்ணா ஒரே கூச்சல், ஆதவன் பேசியதும் தான் எல்லாம் சமாதானத்திற்கு வந்தார்கள். அன்று என் பிறந்தநாள் விழாவில் உங்களை தனியே விட்டுவிட்டு



சென்றது இந்த விஷயமாய் பேசத்தான். அதற்காக உங்களுக்கும் நன்றி சொல்லணும். இன்னும் நிறைய தோழிகளுக்கு பத்திரிக்கை வைக்கணும், நானே நேரிலே வந்து பர்சனலா இன்வைய்ட் பண்ணியிருக்கிறேன். எவ்வளவு தலைவலியிருந்தாலும், மாத்திரை போட்டுகிட்டு கட்டாயம் கல்யாணத்திற்கு வரணும்.

கண்டிப்பா...

நிதிலா இருவரிடமும் விடைபெற்று கிளம்பிட, அகல்யாவும் அவளோடயே நடந்தாள்.

சாரி நிதிலா நான் வேற ஏதோ நினைப்பிலே உங்களைத் தப்பா நினைச்சிட்டு!

வார்த்தைகள் வெளிவராமல் திணறினாள் அகல்யா..

இந்த கோபத்திற்கு காரணமும் காதல்தான்னு எனக்குத் தெரியும். பாம்பின் கால் பாம்பறியும் அகல்யா.. நீங்கள் அண்ணாவைப் பார்க்கும் பார்வையிலேயே நான் கண்டுபிடித்து விட்டேன். அவருக்கும் உங்க மேல இஷ்டம்தான். ஆனா சொல்ல பயம், நீங்க இல்லாத இரண்டு நாளில் ரொம்பவே தவிச்சுப் போயிட்டார். உங்களுக்கும் அதே தவிப்பு இருந்திருக்கும் இல்லையா?

அகல்யா புன்முறுவலோடு தலைகுனிய, நிதிலா காரில் ஏறி அமர்ந்து கொண்டு, உங்களுக்கு தலைவலி என்று யாருமே இல்லை ஆல் தி பெஸ்ட்.

அவள் கிளம்பிட இவளின் மனதில் உற்சாக ஊற்று பொங்கியது. உடனேயே போய் ஆதவனிடம் நிற்க வேண்டும் போல் மனம் துடித்தது. ஆனால், துடுக்காக நிறைய வார்த்தைகளைப் பேசிவிட்டாளே. இப்போது போய் இதமாய் பேசினால் தன்னைப்பற்றி என்ன நினைப்பார் எனும் நினைப்பில் மெதுவாய் தன் அறைக்குள் சென்று நுழைந்து கொண்டாள் அகல்யா.

சில நாட்கள் கண்ணாமூச்சு காட்டியபடி ஓடின, இருவரும் தத்தம் வேலைகளில ஈடுபட்டு இருந்தனர். அகல்யா, நிதிலாவின் திருமணத்திற்கென ஸ்பெஷலான புடவை ஒன்றை டிஸைன் செய்து இருந்தாள். அந்த டிஸைனைப் புடவையாய் மாற்றிடவே மெனக்கெட்டு கோயமுத்தூர் வரை சென்று வந்தான் ஆதவன். வேலை முடித்து கிளம்பும் சமயம் ஆதவனைக் காணாமல் இரண்டு நாட்களாக எந்த வேலையும் சரியாய் ஓடவில்லை, தான் தவறாக எண்ணியதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டி தன் அறையைப்

பூட்டிவிட்டு வெளியே வந்தவள், ஆதவனின் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

வேகமாய்க் கதவைத் திறந்தாள், புகை நாசியைத் தாக்கியது. உள்ளே நந்தகுமார், எடுத்து வைத்த கால்களை உடனேயே பின்னுக்கு இழுத்தாள்.

ஆதவன் இருப்பான்னு நினைச்சியா? நானும் உனக்கு ஒரு முதலாளிதான் உள்ளே வா! கர்ணகுரூரமாய் ஒலித்தது அவன் குரல், வா நான் ஒண்ணும் உன்னைக் கடிச்சுத் தின்னுட மாட்டேன்.

அதற்கு மேலும் வெளியே நின்றால், நன்றாய் இராது என்று கதவை அகலமாக திறந்து விட்டு உள்ளே நுழைந்தாள்....

ஸார்...

வேலையெல்லாம் ஒழுங்கா நடக்குதா?

எஸ் ஸார்...

அகல்யா... எனக்கு சுத்தி வளைச்சுப் பேச தெரியாது உன்னைப் பார்த்த நாள்ல இருந்தே நான் ரொம்பவும் டிஸ்டர்ப்டா இருக்கேன். நான் உன்னை நெருங்க நெருங்க நீ என்னை விட்டு விலகி விலகிப் போகிறாய், நீ எனக்கு வேணும் அகல்யா. சொல் உனக்கு என்ன வேணும், பணமா நகையா இல்லே வேற ஏதாவது?

ஸார் நான் உங்க ஸ்டாப், நீங்க என் பாஸ், இதைத் தவிர உங்களுக்கும், எனக்கும் எந்த வித ரிலேஷன் ஷிப்பும் இல்லை, அப்பிஷியலா இருந்தா பேசுங்க. நான் எப்போதும் அமைதியா இருக்க மாட்டேன்.

மிரட்டுறீயா? எனக்கு யார்கிட்டேயும் எதுக்காகவும் கெஞ்சிப் பழக்கம் இல்லை, சம்மதிச்சா உனக்கு எல்லா நல்லதும் உடனே கிடைக்கும்.

பேரம் பேசுறீங்களா? நீங்க தூக்கிப் போடறதை பொறுக்கி சாப்பிடற பொம்பிளை நான் இல்லை, அதுக்கு வேற ஆளை பாருங்க. பெண்களுக்கும் மனசு இருக்கு. அதைப் புரிஞ்சிகிட்டு நடக்கிற வழிய பாருங்க.. கோபமாய் பேசிவிட்டு திரும்பியவள் ஒரு கணம் நின்று, என்கிட்டே இந்த மாதிரி மிஸ்பிகேவ் பண்றது இதுவே கடைசியா இருக்கட்டும். இனிமேல் இப்படி நடந்தா அசிங்கமாயிடும் பேசிவிட்டு அவள் வெளியேறிட,

நந்தகுமார் தன் கையில் இருந்த சிகரெட்டை கோபமாய் தூக்கியெறிந்தான். உன்னை விட மாட்டேன்டி, என்னையா கேவலமாப் பேசுறே? நான் நினைச்சா உன்னை எப்படி கதற வைப்பேன் தெரியுமா?



போடி போ இதே இடத்திலே என் முன்னாடி உன்னை மண்டியிட்டு உன்னைக் கெஞ்ச வைக்கிறேன் பார், குரோதத்துடன் சிரித்தான் நந்தகுமார்.

கோபத்தில் அகல்யாவின் உடல் நடுங்கியது. எத்தனை திமிர் இவன் கூப்பிட்டால் உடனே போயிடணுமா, பணம் வேணுமா நகை வேணுமா என்று பேரம் பேசுகிறானே? ஏதோ துக்கத்தில் இப்படி ஆயிட்டான்னு நினைச்சா? ராஸ்கல் இவனோட வேலையே இதுதான் போல... போயும் போயும் இவன்தானா நண்பனா கிடைச்சான் ஆதவனுக்கு! இரண்டு முறை அவனுக்குப் பயந்து ஒதுங்கியதால், ரொம்பவும் சீப்பா நினைச்சிட்டான் போல! மானமுள்ளவனா இருந்தால் இனி என் பக்கம் வரவே மாட்டான். அப்படியும் அகல்யாவிற்கு ரொம்பவே ஆச்சிரியமாய் இருந்தது.

நானா இத்தனை கோபமாய் பேசியது. வியப்பாய் இருந்தது. தன் உடைமைக்கும், மானத்திற்கும் ஆபத்து என்றால் ஒரு சிறு பூனை கூட எதிர்க்குமாம்? அப்படி இருக்கையில் ஆறறிவு உள்ள மனிதன் எம்மாத்திரம் யோசித்தபடியே வீடு வந்து சேர்ந்தாள்.

## 9

முழுநிலவாய் நீ....
உனைத் தொடத் துடித்துக்
கொண்டிருக்கும்.. உன்
வெண்ணிற தேவதையாய் நான்...

சொன்னாற் போலவே நிதிலாவின் திருமண வைபவம் சிறப்பாய் நடைபெற்றது. அகல்யாவை எங்கும் நகர விடாமல் அருகிலேயே நிறுத்திக் கொண்டான் ஆதவன், அங்குமிங்கும் அலைந்து மற்ற வேலைகளைப் பார்த்துக் கொண்டாலும், பார்வை மட்டும் இவளைத் தொட்டுத் தொட்டுச் சென்றது. இரு குடும்பத்தினருக்கு மட்டும் இரவு விருந்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. வெளியாட்கள் யாருமில்லை. அகல்யாவும், ஆதவனும் மட்டுமே அழைக்கப்பட்டு இருந்தனர். உதய் குழந்தையைக் காரணம் காட்டி விலகிட அகல்யாவை அருகிலேயே இருங்க என்று கைகளைப் பற்றிக் கொண்டாள் நிதிலா....

உடல் கண்ணாடியாய்த் தெரியும்படி மெல்லிய பட்டுச்சேலை அதற்கேற்றாற் போல் சோளி, உறுத்தாத மெல்லிய நகைகள், தலைநிறைய மணம் வீசும் மல்லிகை குதூகலமாய் அங்குமிங்கும் அசைந்தன.

நிதிலா நீ இப்போ ரொம்ப அழகா இருக்கே, அர்ஜீன் பார்த்தா விழுந்திடுவார்.

போங்க அகல்யா நானே தன்னாலே பயந்து போய் இருக்கேன்.

ஏன்? அர்ஜீன் அத்தனை மோசமா

கூடப்பிறந்த தங்கையோட கல்யாணம் எடுத்துக் கட்டி செய்யலைன்னாலும், வந்து மணவறையில் ஒரு பொம்மை மாதிரியாவது வந்து நின்று இருக்கலாம். ஆனா யாருக்கோ கல்யாணம் மாதிரி எட்டிக் கூட பார்க்கலை, முன்பின் தெரியாதவங்க கூட ஒரு முறைக்காக விஷ் பண்றாங்க. ஆனா நந்து அண்ணா எட்டிக் கூடப் பார்க்கலை, அதே மனசுக்கு கஷ்டமாயிருக்கு!

விடு நிதிலா... சிலரோட குணம் அப்படி, உனக்குத்தான் அண்ணனுக்கு அண்ணனா ஆதவன் இருக்காரே...

நிஜம்தான் எத்தனை உயர்ந்த குணம் தெரியுமா, அகல்யா அவருக்கு, தங்கமான மனிதர், அவருடைய மனசுல உள்ள ஆசை கண்டிப்பா நிறைவேறும் அகல்யா, உங்களுக்கு இஷ்டம்தானே...

ம்......!

பின்னேயேன் தள்ளிப் போடறீங்க?

அவர்தானே முதலில் சொல்லணும்...

ஓஹோ...

அவர்கள் பேசியபடி இருக்கும் போதே அர்ஜீனின் அம்மா வந்து தயாராம்மா... என்றாள்.

ம்.. எப்பவோ ரெடி, அகல்யா குறும்புடன் சொல்ல, நிதிலா பெரியவளின் காலில் விழுந்து வணங்கினாள்.

என் ஆசி உனக்கு எப்பவுமே உண்டும்மா. உங்க வாழ்க்கை அமோகமா தொடர வாழ்த்துக்கள். இருவரும் சேர்ந்து அவளை கொண்டு சென்று அறைவாசலில் விட்டுவிட்டு வந்தவளை பெரியவர் அழைத்தார்.

நீயும் வந்து விழாவை நல்லபடியாய் நடத்தித் தந்ததற்கு நன்றி, மனசு நிறைவா இருந்தது. உனக்கெப்பம்மா கல்யாணம்?



அவள் வெட்கத்தோடு அருகில் நின்ற ஆதவனை மயக்கப் பார்வை பார்க்க...

பாரும்மா நேரமாயிடுச்சு நீ தனியா போக வேண்டாம் ஆதவன் உன்னைக் கூட்டிட்டுப் போய் விடுவான்.

வீட்டைக் கடந்து கார்டனில் நடந்தார்கள். பட்டு சேலையின் சரசரக்கும் ஒலி, மல்லிகையின் மணம் நாசியை வருடியது. ஆனால், ஆதவனோ ஏதும் பேசாமல் நடந்து வந்தான். மெல்லிய கொலுசொலி மட்டும் சங்கீதமாய் கேட்டது. முதன் முதலில் அவளை ரசிக்க வைத்ததே இந்த கொலுசொலிதானே திடீரென சப்தம் நின்றுவிட, திரும்பினான் ஆதவன், அகல்யா ஒற்றைக் காலைத் தூக்குவதும் புடவையை சீராக்குவதும் மீண்டும் காலைத் தூக்குவதுமாய் இருக்க, என்ன அகல்யா என்கூட வரமாட்டேன்னு ஒற்றைக் காலில் நிக்குறீங்க?

நீங்க வேற ? நானே கொலுசு புடவையில் மாட்டுதேன்னு கவலைப்படறேன். அவள் தடுமாற இவன் தோளைப் பற்றினாள், பார்த்து, புடவையை கொலுசின் பிடியில் இருந்து எடுத்துவிட்டவனின் விழிகள் சந்தோஷித்தன.

நிதிலாவின் பிறந்த நாளன்று அகல்யாவிற்கு தந்த கொலுசு அது. ஏதும் பேசத் தோன்றாமல் மெல்ல நடந்தான். அவளாலும் ஏதும் பேச இயலவில்லை, ஆனாலும் அடிக்கடி ஆழமாய் பார்த்த இருவரின் கண்களும் கதை பேசின.

நன்றி ஸார்... என்றாள்.

காரை ஸ்டார்ட் செய்து செலுத்தியபடியே புரியாமல் பார்த்தான்.

## வாய் கசக்கிறதா?

பித்தம் அதிகமானால் வாய் கசக்கும். எலுமிச்சைசாறு தேவையான அளவு எடுத்து அதில் கொஞ்சம் உப்பை போட்டுக் கரைத்து, அடி வண்டல் நிற்க இறுத்துக் கொள்ளவும். அந்தச் சாற்றில் இஞ்சியைத் தோல் சீவி சுத்தம் செய்து சிறு துண்டுகளாக நறுக்கிப் போட்டு ஊற வைத்து, காலை மாலை சில இஞ்சித் துண்டுகளையெடுத்து மென்று தின்னவும், வாய்க்கசப்பு மாறி விடும்.

நிதிலாவோட கல்யாணத்தை இத்தனை சிறப்பாய் எடுத்து நடத்தியதற்கு! அவளுக்கு ரொம்பவே சந்தோஷம்.

கல்யாணமே இனிப்புதான் அதிலும் காதல் கல்யாணம் எத்தனை இனிப்பு, அதை எல்லாம் அனுபவிக்க புண்ணியம் பண்ணனும் போல இருக்கு. நானும் எவ்வளவோ ட்ரை பண்றேன் ஆனா முடியலை.

நந்து ஸார் வரலைன்னு கவலை நித்திக்கு...!

கூடப்பிறந்த அண்ணன் பட்டும்படாம இப்படி விலகி இருந்தா யாருக்குத்தான் கவலை இல்லாம இருக்கும். நானும் எத்தனையோ தடவை சொல்லிட்டேன்.கேட்டால்தானே! நடவடிக்கைகள் தவறைத் திருத்தலாம் ஆனா குணத்தை மாற்ற முடியாது அகல்யா... தன் மகனுக்கு நல்ல வாழ்க்கை அமையலைன்னு கவலையிலே உடைஞ் சுப் போறார்.

என்ன மனுஷன் இவர்? பெற்ற தகப்பனின் பாசத்தைப் புரிஞ்சுக்கலை, கூடப்பிறந்த தங்கையின் அன்பை உணரலை? தான் நினைப்பதுதான் சரி, தான் செய்வதுதான் சரின்னு தனக்கென வாழ்றதுலே என்ன சந்தோஷம் கிடைச்சிடப் போகுது. இப்படிப்பட்ட ஒருத்தருக்கு நீங்க நண்பரா இருப்பதுதான் என்னால ஜீரணிக்கவே முடியலை.

இதெப்படி கமெண்டா, குட்டா?

ம்..பாராட்டு!

அகல்யா! ஒரு மனுஷன் நல்ல நிலையில் இருக்கும் போது கூட இருந்திட்டு அவன் கஷ்டப்படும் போது விலகுவது நட்பா. நந்து திருந்துவாங்கிற நம்பிக்கை எனக்கிருக்கு.

அதன்பிறகு வேறெதுவும் பேசவில்லை அகல்யா. நந்துவைப் பற்றி மேலும் பேசவே பிடிக்கவில்லை, அதற்குள் வீடும் வந்து விட இறங்கியவள் ஆதவனின் முகம் நோக்கினாள்.

இமைக்கத் துவங்கினால் கூட எங்கே எதிரில் இருப்பவரின் இன்முகம் மறைந்திடுமோ?! விழிகள் ஒன்றோடொன்று பேசின! கண்கள் கவிதைப் பாடின.

உனை நேரில் காணா நேரம் ஆயிரம் வார்த்தைகளை உச்சரிக்கும் இந்த உதடுகள் அருகில் இருக்கும் நேரம் அரை வார்த்தை பேசக் கூடத் தயங்குகிறது. அகலாத விழிகளால் வருகிறேன் என்று சமிக்ஞை செய்து வண்டியைக் கிளப்பினான். ஏக்கம் பொழிந்த பார்வை, தயங்கிய நடை, ஏனிது? நான் உன்னவள் இல்லையா? நான் கேட்டு ரசித்த அனைத்து வரிகளும் உன்னைப் பார்த்ததும் மெய்யாய் போனதாய் உணர்வு, உனைக் கடக்கும் சமயம் ஏதாவது பேச மனம் விரும்பும். ஆனால் விழிகளில் நுழைந்து இதயத்தை துளைக்கும் அந்தப் பார்வையில் சகலமும் மறந்துவிடுமே!

படுக்கையில் விழுந்தாள். ஆதவனின் அந்த பார்வைகள் மலர் தூவுவதைப் போல் இனித்தது.

ஆதவனுக்கும் அதே நினைவுகள்தான். அவளாகவே வந்து பேசினாள். நான் வாங்கித் தந்த கொலுசு வேறு. எத்தனையோ விஷயங்களை அழகாக பேசும் நான்! அகல்யாவிடம் என் காதலைச் சொல்லிட மட்டும் ஏன் தயங்குகிறேன். அவளின் கண்களைக் கண்டதுமே எல்லாமே மறந்து விடுகிறதே அகல்யா! உலகிலேயே நான் அதிகமாய் நேசிப்பதும் உன் கண்கள்தான், அதிகம் வெறுப்பதும் உன் கண்கள்தான். காரணம் தெரியுமா? உன் கண்கள் தூண்டிலாய் மாறி பிடித்து இழுக்கிறதே! அதே நேரம் என் கண்களை கடந்து அதில் காதலை தெரிவிக்கும் தைரியம் வராமல் ஒரு மயக்க நிலைக்கு செல்ல வைக்கிறதே! அதனால்தான்! இனியும் தள்ளிப்போடக் கூடாது! அப்போது உன் முகம் எத்தனை அழகாய் சிவக்கும் அந்த நினைப்பிலேயே உறங்கியும் போனான். பாவம் நாளையும் தன் எண்ணம் நிறைவேறப் போவதில்லை என்பதை உணராமல்!

வானம் இருள் போர்வையை விலக்கி வெளிச்ச உடையை அணிந்து உதிர்ந்த பூக்களான நட்சத்திரத்தை ஒதுக்கிவிட்டு, ஆசையாய் சூரியப்பூவைத் தூக்கி சூடிக் கொண்டாள்.

அகல்யா உள்ளே நுழையும் போது, ஆதவன் அவன் அறை அருகே நிற்பது கண்ணில் பட்டது.

குட்மார்னிங்..

என்னது வாசலிலேயே..

உங்களுக்காகத்தான்..

எனக்காகவா? ஏதாவது அவசர வேலையா?

அவசரம்தான் ஆனால் வேலையில் இல்லை வாங்க, உள்ளேபோய் பேசலாம். வழிவிட, அவனுடன் அறைக்குள் நுழைந்தாள். அதே கொலுசொலி..

நன்றி அகல்யா...

நன்றி எதற்கு?

நான் தந்த கொலுசை அணிந்ததற்கு! உங்களுக்கு ரொம்பவும் பொருத்தமாய் இருந்தது.

அவள் மௌனித்தாள்.

நிதிலா இருந்தவரையில் தான் தலைவலி இன்னும் தீரவில்லையா? பெண்களின் மௌனம் கூட அழகுதான் இல்லையா?

அகல்யா, நான் வெகு நாளாக என் மனதில் தேக்கி வைத்த எண்ணங்களை எப்படியாவது சொல்லிவிட வேண்டும் என்று நான் பலமுறை முயன்றதுண்டு. ஏனோ ஒவ்வொரு தருணமும்! ம்ப்ச்! அன்று விருந்து முடிந்தவுடன் என் விருப்பத்தை தெரிவிக்க இருந்தேன் ஆனால்...!

பழைய கசப்பு வேண்டாமே ஸார்.

இன்னமும் ஸார் தேவைதானா?

ஆதவ்! போதுமா?!

குட் அகல்யா.. அவன் ஏதோ பேசத் துடிக்க அதை கேட்க அவள் தவிக்க! ஆதவன் மேற்கொண்டு பேசிடத் துவங்கும் முன் டெலிபோன் அழைத்தது. அகல்யாவைப் பார்த்தபடியே ரிசீவரைக் காதிற்கு தந்தான்.

ஆனால் மறுமுனை செய்தி கேட்டு அவனின் புன்னகை மிளிர்ந்த முகம் சற்றே கருத்தது.

என்ன ஸார்? என்ன விஷயம்?

சில விவரங்களை கேட்டு பின் போனைக் கீழே வைத்தவன். உதய் ஆபீஸ் கிளம்பி வர்ற வழியிலே ஆக்ஸிடெண்ட்டாம் பிரியா நர்ஸிங் ஹோமில் இருக்காரரம் நான் உடனே போறேன்.

அவன் வேகமாய் கிளம்பிட, அகல்யாவும் உடனே கிளம்பினாள். ஆதவன் தன் காதற் பரிசாய் வாங்கிய மஞ்சள் ரோஜா இவர்களைக் கண்டு சிரித்தது?!

## 10

**உன் மௌனமான உதடுகளில் என்**
**உயிரைக் குடிக்கும் வார்த்தைகளை நீ**
**எப்படிக் கற்றுக் கொண்டாய்...**



உதய் படுக்கையில் தொய்வாய் இருந்தான். கைகால் மற்றும் தலையில் பெரிய கட்டு போடப்பட்டு வெண்மையாய் காட்சி அளித்தது. சீப் டாக்டருடன் அருகில் இருந்த நர்ஸ் பதட்டமாய் வந்த அகல்யாவை நெருங்கினாள். ஏய் அகல்யா நீ எங்கே?

இவர் எங்க ஆபீஸில் வேலை பாக்கிறவர் உதய் ! என்ன அபிநயா நான் பயப்பட ஏதும்?

தலையில் பெரிய அடி இல்லை, காலில்தான் சின்ன பிராக்ச்சர். கூடிய விரைவில் சரியாயிடும்ன்னு டாக்டர் சொன்னார்.

நன்றி கடவுளே என்று உதய்யின் அருகில் சென்றான் ஆதவன். இப்போ எப்படி இருக்கு உதய்..

பரவாயில்லை ஸார் அந்த நிலையிலும் சிரிக்க முயன்றான்.

நீங்க வேகமா கூட வண்டி ஓட்ட மாட்டீங்களே உதய் அப்புறம் எப்படி?

கட்டை வண்டி மாதிரிதான் மேடம் போனேன். என்ன செய்ய எதிர்க்க வந்தவன் ஜெட் ஏர்வேஸ் வேகத்தில் வந்திட்டான்.

அபிநயா இளமுறுவலுடன் கையில் ஊசியை எடுத்து வந்தாள்.

உதய் இது யார் தெரியுமா? நம்ம அகல்யாவுடைய நெருங்கிய தோழி, பேர் அபிநயா.

போச்சுடா! இந்த மேடம் பெருசா கட்டுப்போடும் போதே நினைச்சேன். ஏதோ விட்ட குறை தொட்ட குறைன்னு! கரெக்டா இருக்கு!

சிஸ்டர் நல்ல பெரிய ஊசியா போடுங்க. ஆக்ஸிடெண்ட் ஆயிடுச்சேன்னு அடிச்சு பிடிச்சு ஓடி வந்தா இவர் உட்கார்ந்திட்டு எல்லாரையும் கடிச்சிட்டு இருக்கார்.

### கோ தானம்

**கோ** தானத்தை புண்ணிய தினத்தில் செய்தால் நான்கு மடங்கு புண்ணியமும், புண்ணிய நதிக்கரையில் செய்தால் நூறு மடங்கு புண்ணியமும், விஷ்ணு க்ஷேத்திரத்தில் செய்தால் கோடி மடங்கு புண்ணியமும் ஏற்படும் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

அவர் ரொம்ப ஸ்ட்ராங் சார். இல்லைன்னா ஆக்ஸிடெண்ட் ஆன ரத்தத்தோட அவர் ஒரே ஆளா ஆட்டோவிலே வருவாரா?

இஸிட்?

உதய்க்கு எப்பவுமே தைரியம் அதிகம்தான்.

மேடம் ப்ளீஸ்! ஒரு சின்ன ஹெல்ப்! நிலாவுக்கு இன்னையோட ஸ்கூல் முடியுது அவளை...!

டோண்ட் வொர்ரி! நான் பார்த்துக்கறேன்.

சரி உதய் ரெஸ்ட் எடுங்க, சிஸ்டர் பத்திரமா நீங்கதான்...!

உதய்யை பத்திரமாகப் பார்த்துக் கொள்வதாய் அவள் உறுதியளிக்க சிநேகமாய் புன்னகைத்தபடியே...கிளம்பினார்கள்.

நிலாக்குட்டி சமர்த்தா சாப்பிட்டா நான் அப்பாகிட்டே கூட்டிட்டு போவேனாம். அபிநயா குழந்தைக்கு இட்லியை ஊட்டிக்கொண்டு இருந்தாள். ஏற்கனவே ஓரிருமுறை பரிச்சயம் இருப்பதால், நிலா அகல்யாவிடம் இயல்பாய் ஒட்டிக் கொண்டாள்.

தனக்கு அடிபட்டு இருப்பதாகவும் தன் சார்பில் அகல்யா வருவதாகவும் ஆஸ்பிட்டலில் இருந்து உதய் போன் செய்ய, ஸ்கூல் நிர்வாகமும் நிலாவை அனுப்பிவிட்டது. நிலாவின் வீட்டிற்குப் போய் அவளின் உடைகள் உதய்க்கு வேண்டியவை என எல்லாம் எடுத்தபின் வீட்டிற்குத் திரும்பினர். பகல்பொழுது அப்படியிப்படி சமாளித்தாகி விட்டது ஆனால் இரவு நிலா உதய்யை எண்ணி அழுதாள்.

அகல்யா நிலா ஏன் அழறா?

தெரியலை அபி! என்னால சமாதானப்படுத்தவே முடியலை.

அபிநயா மெதுவாய் குழந்தையைத் தூக்கினாள்.

நிலாக்குட்டிக்கு என்னாச்சு?!

அப்பா வேணும்.

பாருடா செல்லம் அப்பாவுக்கு உடம்புக்கு முடியலை, நீ சமர்த்தா சாப்பிட்டு தூங்கினா நாளைக்கு காலையிலே நான் அப்பாகிட்டே கூட்டிட்டு போவேன். உனக்கு பிடிக்கும்ன்னு காட்பரீஸ், ஐஸ்கிரீம் எல்லாம் வாங்கிட்டு வந்தேன்.

ஆன்ட்டி அப்பாவுக்கு உடம்புக்கு என்ன?

ஜஸ்ட் பீவர் தான் வேற ஒண்ணுமே இல்லை.

நிஜமா?

உண்மையா?



அதன் பின் குழந்தை சாப்பிட்டது. அபியும் நைட்டிக்கு மாறி உறங்க முனைய, நிலா நேராய் இரண்டு பெண்களுக்கும் நடுவில் படுத்துக் கொண்டது.

ஆன்ட்டி எனக்கு கதை சொல்லுறீங்களா?

ம்..

அகல்யா கதை கூற துவங்கவும் கேட்டபடியே குழந்தை உறங்கிப் போனாள். திடுமென்று குழந்தையின் அலறல் கேட்டு இருவரும் பதறியடித்துக் கொண்டு எழுந்தனர். என்னம்மா? என்னடா? ஆளாளுக்கு சமாதானப்படுத்த குழந்தை யாருக்கும் அடங்கவில்லை. அபிநயா குழந்தையை மார்போடு இறுக கட்டிக் கொண்டு, அதன் முதுகைத் தடவிக் கொடுத்து சமாதானப்படுத்தினாள். மெல்ல மெல்ல அதன் அழுகை ஓய்ந்தது. என்னடாம்மா ஏன் அழுதே? பயந்திட்டியா?

அப்பாவுக்கு நிஜமாகவே உடம்புக்கு சரியில்லையா? இப்படித்தான் ஒருநாள் அம்மாவும் உடம்பு சரியில்லைன்னு ஆஸ்பிட்டலில் இருக்கிறதா அப்பா சொன்னார். அப்புறம் அம்மா வரவேயில்லை, இப்போ என் ப்ரண்ட்ஸ், ஆயாம்மா எல்லாம் சொல்றாங்க, எங்கம்மா இறந்து சாமிகிட்டே போயிட்டாங்களாம். அப்பாவும் ஆஸ்பிட்டல்ல இருக்கிறாரா பயம் வந்திட்டது?!

தேம்பியபடி கேட்ட குழந்தையை நீவிக் கொடுத்தாள் அபிநயா, செல்லம் நிஜமா அப்பாவுக்கு ஜீரம்தான் சீக்கிரமா வீட்டுக்கு வந்திடுவார்.இப்போ மணி 2 ஆகுது, காலையிலே முதல் வேலையா நானே அப்பாகிட்டே கூட்டிட்டுப் போறேன் சரியா... நான் சொன்னா கேட்பே இல்லை, படுத்துக்க, பக்கத்தில் கிடத்தினாள், அது அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு உறங்கியது. ஆனால், இரு பெண்களும் உறக்கம் கலைந்தனர்.

டாடி..டாடி... எங்கோ தூரத்தில் குரல் கேட்பது போன்று கண்விழித்தான் உதய்.

முதலில் கண்களுக்கு மசமசப்பாய் தெரிந்த இரு உருவங்கள் பின் தெளிவாயின! நிலாவும்,அபிநயாவும்.

டாடி.....

நிலாக்குட்டி நீ எப்படிடா வந்தே

ஆன்ட்டிதான் கூட்டிட்டு வந்தாங்க.

குழந்தை அபிநயாவைக் கை காட்டியது.

இவளையேன் இங்கே கூட்டிட்டு வந்தீங்க சிஸ்டர். ரொம்பவும் தொந்தரவு செய்வாளே?!

நேற்றிலிருந்தே உங்கஎளைப் பார்க்கணும்ன்னு ஒரே அழுகை, குழந்தையை ஏமாத்தவும் மனசு வரலை, அவ ரொம்பவும் பயந்து போய் இருந்தா.

அது சரி இங்கே ஒரு இடத்திலே இருக்க மாட்டாளே?

நிலா ரொம்ப சமர்த்து, இல்லே நிலா ஆன்ட்டி சொன்னா கேட்பேயில்லை,

ஆமா.. டாடி எனக்கு இந்த ஆன்ட்டியை ரொம்பவே பிடிக்குது நிறைய கதையெல்லாம் சொன்னாங்க

இவளை இங்கே அழைத்து வர இன்னொரு காரணமும் இருக்கு உதய். எனக்கு பகல் டூட்டி, அகல்யாவும் காலையில ஆபீஸ் போயிடுவா. அதனால்தான் இங்கே கூட்டிட்டு வந்தேன். இங்கே நிறைய ஆளுங்க இருக்காங்க! இவளுக்கு சோர்வே தெரியாது.

உங்களுக்கு சிரமம்...

அதெல்லாம் இல்லை, அதற்குள் நிலா ஆஸ்பிட்டலை சுற்றிப்பார்க்க கிளம்பிட, கூடவே ஒரு ஆயாம்மாவை அனுப்பிவிட்டு உதய்க்கு கொண்டு வந்த டிபனை எடுத்து வைத்தாள். அவன் முகம் துடைத்து பல் தேய்க்க உதவி செய்து சாப்பாட்டை வாயில் திணித்தாள்.

நானே ஸ்பூனில் சாப்பிடறேனே!

ஏன் ? என் கையால் சாப்பிடக் கூடாதா?

அது வந்து!

உதய் இங்குள்ள எல்லா பேஷண்டுகளுக்குமே ஒரு நல்ல சகோதரியா, தாயா நடப்பதாலதானே என்னை சிஸ்டர்ன்னு கூப்பிடறாங்க. உங்க ஆபீஸ்லே சேர்ந்த நாளில் இருந்து அகல்யா உங்களைப்பற்றி சொல்லும் போதெல்லாம் எனக்கு ரொம்ப மகிழ்ச்சியா இருக்கும். இறந்து போன மனைவியை நினைச்சிட்டு இளமையைத் துறந்து நிலாவுக்காகவே வாழுற உங்க உள்ளமும், தனக்குள்ள ஆயிரம் கவலைகள் இருந்தாலும், அதையெல்லாம் மறைச்சிக்கிட்டு அடுத்தவங்களை சிரிக்க வைக்கிற உங்க பண்பும் எல்லாருக்கும் வராது.

அபிநயா! உஷாவும் நானும் ரொம்பவும் இன்பமான வாழ்வு வாழ்ந்தோம். அது குறுகிய காலமா இருந்தாலும், அவ இருந்த



இடத்திலே யாரையும் நினைக்க மனசு இடம் தரலை, என் மனசு கவலைப்படறது வெளியில் தெரிஞ்சா உடனே இன்னொரு கல்யாணத்தைப் பற்றி பேசற கும்பல்கிட்டே இருந்து தப்பிக்கவே நான் என்னை சந்தோஷமா காட்டிக்கிறேன். ஒவ்வொரு முறையும் நிலா அம்மாவை நினைச்சு அழுவதும், இரக்கமில்லா இரவுகளை வேதனையோடு கழிப்பதும் யாருக்கும் தெரியாது.

எனக்கு வயசான பெத்தவங்க உண்டு. நானும் என் அக்காவுமா இரண்டு பெண்கள் நல்லமுறையில் வளர்க்கப்பட்டு அக்காவுக்கு மாமாவையே கல்யாணமும் பண்ணி வைச்சாங்க. அவன்கிட்டே அவபட்ட வேதனை கொஞ்ச நஞ்சமில்லை, ஒரு குழந்தை இல்லைன்னு அக்காவைப் பாடாய் படுத்தினான். அவ உயிரோட இருக்கும் போதே என்னைப் பெண் கேட்டு வந்து அவ மனசை காயப்படுத்தினான்.

ஒரு நாள் அவனோட கொடுமை தாங்காமலேயே அவளும் போய் சேர்ந்திட்டா! அப்புறமும் அந்த பாவி அடங்கலை, மறுபடியும் என்னை பெண் கேட்டு வந்திட்டான். எனக்கு வந்ததே கோபம். போலீஸ் வரை போயிட்டேன்.அதுக்குப் பிறகு அந்த ஊரில் இருக்கவே பிடிக்கலை, கல்யாணம் பண்ணவும் பயம், மாமாவைப் பார்த்ததில் இருந்தே ஆண்களைப் பற்றின பொதுவான கோபம், வேகம் அதனால் நேராய் புறப்பட்டு சென்னை வந்திட்டேன். இங்கே பலதரப்பட்ட மனிதர்கள் இவர்களுடைய அன்பு எனக்கும் கிடைக்கும் போது எல்லா வலியும் மறந்து போயிடுது உதய். அகல்யா உங்களைப் பற்றி பேசப்பேச உங்களைப் பார்க்காமலேயே நல்ல அபிப்ராயம் ஏற்பட்ட்து. ஆண்களில் கூட இத்தனை நல்லவங்க சுயநலமில்லாதவங்க உண்டான்னு தோணிச்சு!

எல்லா விரல்களும் ஒரே மாதிரி இருக்கிறதில்லை அபிநயா?!

உதய் நிலா பெண் குழந்தை, என்னதான் அன்பா அக்கறையா நீங்க அவளை வளர்த்தாலும் குறிப்பிட்ட பருவம் வந்த பிறகு, தாய்மையில்லாத குறையை அவ உணருவா! நேற்று கூட குழந்தை தூக்கத்திலே ஒரே அழுகை, அம்மாவிற்கு ஆன மாதிரி அப்பாவுக்கும் ஏதாவது...?!

என்ன செய்ய அபிநயா? நிலாவுக்காக ஒரு கல்யாணம் பண்ணிக்கறேன்னு வைய்யுங்க, வர்ற பொண்ணு என் மனம் மாறுகிற வரையில் பொறுமையுடன் இருப்பாளா? என் மேல் ஏற்படுகிற கோபம் நிலா மேலே திரும்பிட்டா? அது எத்தனை

பெரிய கஷ்டமாகிப் போகும் தெரிஞ்சே என் குழந்தைக்கு அப்படியொரு கஷ்டத்தை நான் தரணுமா?

நீங்க பேசறது சரி ஆனா நிலாவின் மனசு ஒரு மூலையிலே தாய்மைக்கு ஏங்கிட்டு இருக்கு. அந்த தவிப்பை உணர்ந்து செயல்படலைன்னா அதுவே டிப்ரஷனா மாறிட வாய்ப்பிருக்கு. யோசிச்சு ஒரு நல்ல முடிவா எடுங்க.

அவள் நகர்ந்து செல்ல, குழம்பிய மனதோடு அபிநயாவையே பார்த்தான் உதய். அதே நேரம் அகல்யாவும், ஆதவனும் பழங்களோடு உள்ளே நுழைந்தார்கள்.

எப்படியிருக்கீங்க உதய்?

பெட்டர் ஸார்.

நிலாவைப் பார்த்தீங்களா?

ம்.. விளையாடப் போயிருக்கா?!

ஏன் .. ஒரு மாதிரி இருக்கீங்க? வழக்கமான உற்சாகத்தையே காணோமே?

அகல்யா என்னோட எதிர்காலத்தைப் பத்தின பயம் வந்திடுச்சு... திடீர்னு எனக்கே ஏதாவது ஒண்ணுன்னா, நிலாவுக்கு யார் இருக்காங்க?

உதய் ஏன் இப்படியெல்லாம பேசறீங்க?

ஸார் மனிதன் தடையில்லா வெறித்தனமா ஓடுறான். ஒவ்வொரு நிமிடம் அடிக்கிற எச்சரிக்கை மணிதான் அவனோட ஓட்டத்தை மட்டுப்படுத்தும் கருவியா இருக்கு.

இது சரியில்லை நாம வேற டாபிக் பற்றி பேசுவோம்! ஒரு சந்தோஷமான செய்தி சொல்லத்தான் நானும் அகல்யாவும் வந்தோம்.

என்ன விஷயம் ஸார்?

இந்த முறை நடந்த செலக்ஷனில் நம்ம டிசைன்ஸுக்கு நல்ல வரவேற்பு இருந்ததாலே ஒரு பார்டிக்கு ஏற்பாடு பண்ணியிருக்காங்க. அதுக்கு நானும் அகல்யாவும் கலந்துக்கப் போறோம். அதில் நமக்கு ஒரு விருது தர்றப் போறாங்க.

வாவ்.. நல்ல நியூஸ் ஸார் இது?

ஆனா உதய். நீங்களும் வந்தா நல்லாயிருக்கும் உங்களை இந்த நிலைமையிலே விட்டுட்டு!

அவரையும், நிலாவையும் பார்த்துக்க நான் இருக்கிறேன் கவலையே இல்லாம போயிட்டு வாங்க.



அந்த நம்பிக்கையில்தான் நானும் கிளம்பறேன் என்றான் ஆதவன்.

டாக்டர் என்ன சொல்றார் அபிநயா?

நாலு நாள்லே மெல்ல மெல்ல நடைப்பயிற்சி தரச் சொல்றார். இன்னும் பத்தே நாளில் உதய் ரன்னிங் ரேஸே ஓடலாம்.

பார்த்தீங்களா அகல்யா, சாரோட பாராட்டா இருந்தாலும் சரி, வெளி ஆட்களோட பாராட்டா இருந்தாலும் சரி உங்களுக்குத்தான் கிடைக்குது. உதய்யின் சோகமான முகபாவனையுடன் சொல்ல அவ்விடமே கலகலப்பானது.

சரி எப்போ கிளம்பறீங்க....?!

இன்று இரவு...

எங்கே பங்ஷன் நடக்குது.

பெங்களூரில்..அப்போ நாங்க கிளம்பறோம்.

இருவரும் புறப்பட்டனர் அதே நேரம் அலுவலகத்தில் அவர்களின் வரவிற்காய் நந்தகுமார் காத்திருந்தான்.

## 11

**மனதின் ரணங்களுக்கு இதமாக**
**உன் இதழ்களின் ஒத்தடங்கள்**
**தேவை... தருவாயா....?!**

வா... ஆதவா, உனக்காகத்தான் நானும் காத்து இருக்கிறேன்.

என்ன விஷயம் நந்து?

விஷயமா? ஏன் ஆதவா! இந்த கம்பெனியில் நானும் ஒரு பங்குதாரர் தானே?

அதிலென்ன நந்து உனக்கு சந்தேகம்.

பின்னே? ஆபீஸ்லே ஒரு பெரிய ஆபர் வந்திருக்கு அதைப்பற்றி என்கிட்டே ஒரு வார்த்தை கூட சொல்லலையே?

நந்து சொன்னாலும் புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் நீ இல்லையே? சொந்த தங்கையுடைய கல்யாணம் அதற்கே நீ வரலையே?

நான் இப்போ பர்சனலைப் பற்றிப் பேசலை, நானும் உன்கூட வரலாம் இல்லையா?

# காதல் என்பது...

'**கா**தலில் ஆண்கள்தான் ஏமாற்றுகிறார்கள்' என்று பெண்கள் குமுறிய காலம் மாறிவிட்டது. 'ஏமாற்றும் பெண்களும் இருக்கிறார்கள்' என்பதை இன்றைய இளைஞிகளே ஒப்புக் கொள்கிறார்கள். காதல் இன்று எப்படி இருக்கிறது. பெண்கள் காதலை எப்படி பார்க்கிறார்கள் என்பது பற்றி கல்லூரி மாணவிகள் சிலரது கருத்து...

★ இன்றைய காதல் 90 சதவீதம் பொழுதுபோக்காகவே இருக்கிறது.

★ பெண்களை எளிதில் மயக்கிவிடுவது ஆண்களின் வர்ணனை தான். "நீ ரொம்ப அழகா இருக்கே" என்று சொல்லிவிட்டால் பெண்ணிற்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கும். அப்படிச் சொல்லியவரை பெண் காதலராக தேர்வு செய்யாவிட்டாலும், பல நேரங்களில் அவர் சொல்லியதை தன் தோழிகளிடம் சொல்லி சந்தோஷப்பட்டுக் கொள்வார்கள் பெண்கள்.

★ பல ஆண்களைப் போன்று பெண்களும் பழகிவிட்டு பிரிந்து விடுவதை விரும்புகிறார்கள். அதற்கு முக்கியக் காரணம், பெண்கள் பெற்றோர் கண்காணிப்பைத் தாண்டி சென்னை போன்ற நகர்ப்புறங்களில் குடியேறி படிப்பதும், வேலை செய்வதும் தான். அவர்கள், தங்களை விரும்பி வரும் ஆண்களை பயன்படுத்திக் கொள்ளவே விரும்புகிறார்கள்.

★ காதலர் தினமென்றால் காதலருடன் ஜாலியாக பொழுதுபோக்கும் நாள் என்று எண்ணும் பெண்களும் ஏராளம். 'பப்' பார்ட்டிக்குச் சென்று நடனம் ஆடுவதை காதலர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். மேல்தட்டு மக்களின் பழக்கமான 'பப்' பார்ட்டி இன்றைய காதலர்களுக்கும் இனிக்கிறது.

★ ஆண்கள் இப்போது காதலைச் சொல்வதற்கு ரோஜா கொடுப்பதில்லை. எஸ்.எம்.எஸ்.களில் தான் இன்றைய காதல் வளர்கிறது. அத்துடன் தோழிகளிடம் விசாரித்து காதலிக்கு என்ன கலர் பிடிக்கும், என்ன உணவு பிடிக்கும், என்ன கிப்ட் பிடிக்கும் என்பதை தெரிந்து 'திடீர் சர்ப்ரைஸ்' கொடுத்து கவர்ந்து விடுவதை நிறைய ஆண்கள் தங்கள் பாணியாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.



★ பெண்கள் ஒரே நேரத்தில் ஒருவரை மட்டும் காதலிப்பதில்லை என்றும் கல்லூரி மாணவிகள் சொல்கிறார்கள். இது அதிர்ச்சியாக இருந்தாலும் அதுதான் உண்மை. தன்னைச் சுற்றும் ஆண்களில் நாலைந்து பேரை அவர்களும் கணக்கு பண்ணுகிறார்கள். அதில் பெஸ்ட்டாகத் தோன்றும் ஒருவரை நேசிக்கத் தொடங்குகிறார்கள். அவரிடம் வசதிக்குறைவு தெரிந்தால் இரண்டாம் நபரை தேர்வு செய்யும் வகையிலேயே பழக்கத்தில் வைத்திருப்பார்கள். இருந்தாலும் திருமணத்துடன் இந்த ஆண் நண்பர்களை கைகழுவி விடுகிறார்கள் பெண்கள்.

காதலும், பெண்களின் சிந்தனையும் இன்று ரொம்பத்தான் மாறியிருக்கிறது இல்லையா?!

வொய் நாட் உனக்கு விருப்பம் இருக்கும் பட்சத்தில் ! தாராளமாய் நீ வரலாம்.

அப்புறம் அகல்யாவும் வருகிறாள் இல்லையா?

அவங்கதானே டிஸைனர்.

சரி எனக்கு பெங்களூருக்கு பிளைட் டிக்கெட் ஏற்பாடு பண்ணு...

நந்து வெளியேற ஆதவன் திகைத்தான். என்னவாயிற்று இவனுக்கு! எப்போதும் அலுவலக வேலையில் அவன் தலையிட்டதே இல்லை, இப்போது அவனாக ஆர்வம் காட்டுவது ஒரு புறம் சந்தோஷம் என்றாலும், அவன் உண்மையான ஆர்வத்தில் கேட்பதைப் போல் தோணவில்லை ஆதவனுக்கு. தவிரவும் இரு நாட்கள் அகல்யாவுடன் இருக்கும் சந்தர்ப்பத்தில் தன் மனதின் ஏக்கங்களை அவளிடம் சொல்லிவிட வேண்டும் என்ற எண்ணத்திலும் மண் விழுந்து விட்டதே என்று கலங்கினான்.

அதே கவலைதான் அகல்யாவிற்கும், நந்தகுமார் அவர்களுடன் சேர்ந்து வருவது அவளுக்கு சுத்தமாய் பிடிக்கவில்லை, ஆனால், அதை நேரடியாய் ஆதவனிடம் சொல்லவும் இயலவில்லை. எனவே சற்றும் மனமின்றியே கிளம்பினார்கள். பெங்களூரில் இரு நாட்கள் தங்குவதற்கு ஹோட்டலில் ரூம் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆறு மணி நேரப் பயணம் என்றாலும் எவ்வித அலுப்பும் இன்றி இருந்தது.

அகல்யாவிற்கு என்று தனியறை ஒதுக்கப்பட்டு இருந்தது. ஆதவனும் நந்துவும் ஒரே அறையில் தங்கிக் கொண்டனர்.

யாரும் ஒருவருக்கொருவர் சரியாய் பேசிக் கொள்ளவே இல்லை. அகல்யா நத்தையாய் கூட்டிற்குள் சுருண்டாள். வெகு சிம்பிளாய் அலங்கரித்துக் கொண்டாள் அகல்யா. க்ரே கலரில் மெல்லிய ஜரிகை ஓடிய காட்டன் புடவை. அதே கலரில் ரவிக்கை ஒரு லாங் செயினோடு கழுத்தை ஒட்டினாற்போல் முத்துமணி. அதே செட்டாய் சின்னதோடும் தலையை முன்புறம் சீவி தாழ்வாய் கொண்டை போட்டாள். திருப்தியாய் இருந்தது.

வெளியே வர ஆதவன் காரிடாரில் நின்றிருந்தான் இலை பச்சை வண்ண முழுக்கை சட்டை, கருப்பு வண்ண பேண்ட் என்று சிம்பிளாய் இருந்த போதும் கம்பீரமும் ஆண்மையும் பளிச்சிட்டது.

அகில் யூ ஆர் க்யூட். டீச்சர் மாதிரி இருக்கு.

போங்க ஆதவ் உங்களுக்கு எப்பவுமே கிண்டல்தான்.

சரி போகலாமா? இருவரும் நடக்க, நந்துவுக்கு தலைவலியாம் அவன் வரலைன்னு சொல்லிட்டான்.

அதுக்கு ஏன் நம்ம கூட வரணுமாம்.

என்னவோ ஆர்வம்! ஆனா பாவம் வந்த இடத்தில் உடம்புக்கு முடியலை?

அதற்குள் ஹால் வந்துவிட அதற்குமேல் பேச நேரமில்லாமல் போனது. வந்திருந்தவர்கள் பேசி பாராட்டி விருது வழங்கி, விருந்தும் இனிதே முடிந்த பின் கிளம்ப ரொம்ப நேரம் தாமதமாகிவிட்டிருந்தது. இருவரும் களைப்புடன் அறைக்கு திரும்பினார்கள். ஒரு குளியல் போட்டால் தேவலாம் போல் இருந்தது. குளித்து முடித்து விட்டு காட்டன் நைட்டி அணிந்து கீழிறங்கினாள்.

மஞ்சள் நிற ஒளி அழகான கார்டன், சற்று நேரம் காலார நடந்தாள். ரசனையுடன் இருந்தது அவ்விடம். பூ வேலைப்பாடு கொண்டிருந்த நாற்காலியில் அமர்ந்தாள். ஆதவனை அழைத்திருக்கலாமோ என்று எழுந்த ஆவல் நந்துவை நினைத்ததும் உடனே அணைந்தது. அவனும் அவருடன் தானே இருக்கிறான். வேண்டாம் இன்று விழாவில் வந்த ரத்தன் ஸாரீஸ் உரிமையாளரின் மனைவி, ரதீலா கூட இவளிடம் தனிமையில் கேட்டாள்.

என்ன மேடம் எப்படி இத்தனை அழகாய் இடையை பராமரிப்பு பண்றீங்க? அவர் யாரு உங்க ஹஸ்பெண்டா செம மேச் இரண்டு பேருக்கும்!

இவள் ஒன்றும் பேசாமல் மௌனமாய் சிரித்தாள்..



ஓஹோ லவ்வா... கங்கிராட்ஸ்..... தனிமையில் அமர்ந்து கொண்டு அதையே எண்ணி எண்ணிச் சிரித்துக் கொண்டிருந்தாள். மஞ்சள் ஒளியில் சந்தன சிலையாய் தகதகத்தது அவளின் முகம். அவளுடைய கூந்தல் கற்றைகள் அந்த நிலவு முகத்தின் மேல் மோதி மோதி விளையாடின. இளஞ்சிவப்பான அதரங்களில் சிரிப்பு ஒளிர்ந்து அவை பளபளத்தன. ஆதவன் அவற்றையெல்லாம் ஒன்றுவிடாமல் ரசித்தபடி அருகில் வந்தான். நல்லவேளை அகில்! நீங்கள் மட்டும் சிரிக்காமல் இருந்திருந்தால், நான் தோட்டத்தில் அழகுக்காக வைக்கப்பட்ட சிலையென்று எண்ணியிருப்பேன்.

அவள் கலீரென்று நகைத்தாள்.

அப்பா மின்னல் வெட்டியது போல் இருக்கிறது உங்கள் சிரிப்பு....!

ஏதேது மதிப்பிற்குரிய ஆதவன் இன்று பெரிய கவிஞர் ஆகிவிட்டார் போல இருக்கிறதே!

தேவதைப் போல பெண்ணைக் கண்டுவிட்டாள் முட்டாள் கூட கவிஞன் ஆகிவிடுவானே.. அகல்யா மனதில் எத்தனையோ நாள் அரித்த விஷயங்களை இன்று உங்களிடம் சொல்லியே தீரப் போகிறேன்.

சபதம் மேற்கொள்வது போல் இருக்கிறது ஆதவ்!

சபதம் தான் ... அவள் கண்களை ஆழமாய்ப் பார்த்தான். அகில் நான் ... உங்களை அழகாய் நேசிக்கிறேன். இந்த ஒரு வார்த்தையை சொல்வதற்கு எத்தனையோ முறை முயற்சித்தும், முடியவில்லை, ஆனால்,இன்று இந்த மாதிரி ஒரு ரம்மியமான சூழ்நிலையில் சொல்ல வேண்டும் போல் இருந்தது.

இந்த ஒரு வார்த்தையை நீங்களும் எப்படா சொல்லுவீர்கள் என்று நான் தவியாய் தவித்துக் கொண்டிருந்தேன்.

நீ ஒப்புக் கொள்வாயோ என்ற பயம்தான்!

அது இத்தனை பெரிய நிர்வாகத்தை நடத்துபவர் இந்த சிறு பெண்ணிற்கு பயந்தீர்களா? நம்பத்தான் வேண்டுமா?

தொழிலில் இன்னது என்றால், உடனே சாதித்து காட்டியும் விடுவேன். ஆனால், உன் கண்விழிப் பார்வையைப் பார்த்தவுடனேயே நான் சொல்லாமலேயே விட்டுவிடுவேன்.

ஏன்.. ஆதவ் கண்களாலேயே எத்தனைக் குறிப்புகள் காட்டியிருப்பேன். ஒரு தரம் கூடவா புரியவில்லை

தாயே! இதெல்லாம் எனக்கு முன் அனுபவம் இல்லை,

காதலில் முன் அனுபவம் தேடினால் கலகம் உண்டாகுமே!

வேண்டாம் எனக்கு நீ மட்டும் போதும். தேடலில்தான் எப்போதுமே சுகம் அதிகம். அகில் நெருங்கி அருகில் வந்தான் ஆதவன். அவளின் கைகளைப் பற்றி தன்னுடன் வைத்துக் கொண்டான். பூவைப் போன்ற மெல்லிய தொடுதல், உச்சி முதல் உள்ளங்கால் வரை உடல் சிலிர்த்தது. அவள் கையை அப்படியே உதடுகள் அருகே கொண்டு போய் முத்தமிட்டான். மெல்ல கையை உறுவியபடி வெட்கப்பட்டு திரும்பிக் கொண்டாள் அகல்யா! ஏன் அகில் உனக்கு என் தவிப்பு புரியவில்லையா?

விடுங்க யாராவது பார்க்கப் போறாங்க?!

கண்டிப்பா எல்லை மீற மாட்டேன். என் மனைவி என்றான பிறகு உன்னிடம் முழுமையும் பெறுவேன் அகல்யா அதுவரையில் இந்த அணைப்பு மட்டுமே போதும்.

ஆறுதலாய், அன்பான அணைப்பு அதில் காதல் தெரிந்ததே தவிர காமத்தின் சாயல் துளியும் இல்லை, வெகுநேரம் அந்த அணைப்பின் கதகதப்பிலேயே இருக்கத் தூண்டியது அவளின் மனம். இந்த ஆலிங்கன நிலையைக் கண்ட நந்தகுமார், நெருப்பைக் கக்கும் கண்களுடன் ஜன்னல் ஓரம் நின்றிருந்தான். இவனை மனதில் நினைத்துக் கொண்டுதான் என்னை அலட்சியப்படுத்தினாயா? விடமாட்டேன் நான் விரும்பிய எதையும் யாருக்கும் விட்டுத் தந்ததில்லை, உன்னையும் அடைவேன் அடைந்தே தீருவேன் நந்தக்குமாரின் மனதில் கொடூர திட்டம் ஒன்று உருவானது.

## 12

**நீ இலைகளில் தேங்கிய நீர் அல்ல**
**தாமரை இலைத் தண்ணீர் போல்**
**ஒட்டாமல் இருக்க....!**
**உடலின் குருதியாய் அங்கம்**
**எல்லாம் பரவும் வற்றாத**
**ஜீவநதி.....நீ....!**

உதய்க்கு அன்று நடைப்பயிற்சி துவங்கியது. அறைக்குள்ளேயே சுவரைப் பிடித்தபடி சுற்றி வந்தவனை மாலைநேரம் ஆஸ்பிட்டல் தோட்டத்தில் உலாவ அழைத்துப் போனாள் அபிநயா.



வேண்டாம் அபி. நேத்து மாதிரி நான் ரூமிற்குள்ளேயே பிராக்டீஸ் பண்ணிக்கிறேன். உங்க வேலை நேரம் கெட வேண்டாம்.

என்னோட வேலை நேரம் முடிஞ்சிடுச்சு உதய். இப்போ நான் உங்க அட்டெண்டர். அவன் கைகளை தோள் மேல் போட்டபடி, இடுப்போடு கைகோர்த்து நடக்க வைத்தாள். இந்த மூன்று நாட்களும் இப்படித்தான் இரவு நேரங்களில் கூட அபிநயா வீட்டுக்குப் போவதில்லை, மூவருக்குமாய் சேர்த்து சமைத்து எடுத்து வந்துவிடுவாள். நிலாவிற்கு ஊட்டிவிட்டு சிறிய படுக்கையில் அவளைக் கிடத்திவிட்டு, இவனையும் சாப்பிட வைத்து மருந்து தந்து தூக்கம் வரும் வரையில் பொது விஷயங்களைப் பற்றி பேசி அவன் உறங்கும் நேரம் இவளும் உறங்கிப் போவாள்.

நிலாவிடம் அபி பழகும் விதம். அவளின் அன்பு, கருணை பணிவு குற்றம் குறையில்லா ஒரு பெண் உலகில் இருக்கிறாள் என்றால் அது அபிதான் என்று எழுதியே தருவான் உதய். அந்த அளவிற்கு அவன் மனதில் இடம் பிடித்து இருந்தாள் அவள். இந்த நடைப்பயிற்சி கூட அப்படித்தான். உஷாவிற்குப் பிறகு யாரையும் எண்ணிக் கூட பார்க்காத உதய் ஐந்து வருடங்களில் கிடைக்காத பெண்ணின் அருகாமை, அன்பு, அக்கறை, ஸ்பரிசம் எல்லாம் சேர்ந்து அவனைப் பாடாய்படுத்தின.

நிலாக்குட்டியும் சதா அபியுடன்தான் இருந்தது. குழந்தையும் அவள் என்ன அழகாய் ஈர்த்துவிட்டிருக்கிறாள். நிலாவை விட்டு அவளைப் பிரிப்பதும் அபியிடம் இருந்து நிலாவைப் பிரிப்பதும் இனி முடியுமா? அல்லது முடியாத காரியமா? என்று குழம்பிப் போனான் உதய். இந்த உன்னதமான அன்பு எனக்கும் என் குழந்தைக்கும் தொடர்ந்து கிடைக்குமா? ஆனால் அப்படித் தான் நினைப்பது தவறோ?

ஏதோ ஆளில்லாத கொடுமைக்கு உதவி செய்கிறாள். இந்த அளவிற்கு செய்ததே பூர்வ ஜென்ம பலம். அதையே மேற்கொண்டு எதிர்பார்த்தால் அது தவறு இல்லையே?! கூடவே இன்னொரு நினைப்பும், இதே அன்பு என் குழந்தைக்கு கிடைக்கும் என்று எதிர்பார்த்தது இயல்பு. ஆனாலும் எனக்கும் வேண்டும் என்றல்லவா நினைத்தேன். அப்படியானால், உஷாவிற்காக நான் கட்டிக்காத்த விரதம் கொஞ்சம் கொஞ்சமாய் கலைகிறதா. உஷாவின் இடத்தில் அபிநயாவை சுலபமாய் நினைக்க என்னால் எப்படி முடிந்தது. இது

உஷாவிற்கு நான் செய்யும் துரோகம் இல்லை. இந்த அளவிற்கா அபிநயா என் மனதில் இடம் பிடித்து விட்டாள்.

இது சாத்தியமா? நிச்சயம் அபியின் அழகிலோ, புற ஈடுபாட்டிலோ முடிவெடுக்கவில்லை, அபியின் பொறுமை, நேர்த்தி, அன்பு, கருணை இவையெல்லாம் அன்றும் உஷாவிடம் கண்டதுதானே! நடைப்பயிற்சியின் போது முதலில் அவளின் தோளைப் பற்ற கூச்சப்பட்ட போது அபிநயா சர்வசாதாரணமாய் அதை விலக்கினாள். இவர்கள் ஏற்கனவே வாழ்வில் இருந்து அடிப்பட்டவர்கள் ஆவதால் வெறும் இனக்கவர்ச்சியையும் தாண்டி, ஒரு பற்றுதல் உண்டானது.

அபிநயாவிற்குள்ளும் அதே துடிப்புதான். தனிமையே துணையாய் வாழ்ந்த நிலை மாறி என் உறவுகளும், உலகமுமே இந்த ஆஸ்பிட்டல் தான் என்று சலனமில்லாமல் இருந்த வாழ்வில், சிறு கல் எறிந்ததே நிலாவும், அகல்யாவும்தான். ஆபீஸ் பற்றி பேசும் சமயம் உதய்யின் குணம் பற்றி கூறிய போதே தன்னையும் மீறி அவன் மேல் ஒரு பிடிப்பு ஏற்பட்டு விட்டது. இப்போது நிலாவைப் பார்த்த நாளில் இருந்து அவளிடம் ஒட்டிய மனதை பிரிக்க முடியும் என்றே தோன்றவில்லை அபிநயாவிற்கு!

அதுவும் உதய்யிடம் பேசிப் பழகிய பிறகு, இவர்கள் இருவரையும் தன் உறவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற தவிப்பு தன்னால் பற்றிக் கொண்டது. இது நல்லதா கெட்டதா என்று புரியவில்லை. அகல்யா வந்தவுடன் பேசி நல்ல முடிவாய் எடுக்க வேண்டும் என்ற முடிவில் இருந்தாள் அபிநயா..

பெங்களூரில் இருந்து திரும்பிய அகல்யாவின் மனம் முழுக்க இனிய கற்பனைகளோடு! எழுந்திருக்கவே மனமில்லை, படுக்கையிலேயே விழுந்திருக்க வேண்டும் போல் ஒரு எண்ணம். காதல் ஒரு போதை, அதில் விழுந்தவர்கள் எந்நேரமும் கனவுலகிலேயே சஞ்சரிப்பது உண்மை. காதல் ஒரு மருந்து. எதையும் சாதிக்கவும், துக்கத்தில் தவிப்பவனை காக்கவும் உதவும். சாதிக்கவும்; சகதியில் வீழ்த்தி விடவும் காதல் ஒரு கருவி அல்லவா! விநாடிகளைக் கூட கடக்க சிரமப்படுகிறேன். என் ரசனைகள் அனைத்தும் உன்னில் காண்கிறேன். என் விரல்களை அணைத்த உன் விரல்கள் உறவாடியபோது மென்மையாய், பூப்போல என் விரல்களைப் பற்றி உன் உதடுகக்கு அருகில் நீ எடுத்துச் செல்ல, உன் மீசையின் குறுகுறுப்பு மனம் இனித்தது. இதென்ன உணர்வு



உன் தொடுதலில் இத்தனை இதமா? உனை சந்திக்க இயலாமல் தரை தாழ்ந்தன விழிகள். மொத்த சக்தியும் வடிந்து போனாற் போல் தளர்ந்தது உடல், வெட்கம் நெட்டித் தள்ள மனமின்றி பிரித்தேன் என் விரல்களை உன்னிடமிருந்து!

ஏக்கமாய் வேண்டும் என்பதைப் போல் உன் விரல் நீண்டுவர, போதுமென்ற கெஞ்சலில் பிரிந்தாய் மனமின்றி திரும்பித் திரும்பி பார்த்தபடியே!

என்ன அகல்யா? வாசற்கதவை இப்படி திறந்து போட்டுட்டு படுத்திருக்கே!

அபிநயா உள்ளே நுழைந்தபடியே கேட்டாள்.

கொஞ்சம் அலுப்பு அவ்வளவுதான். உதய் எப்படி இருக்காரு அபி?!

ம்.! அவருக்கென்ன? இப்போ மெல்ல மெல்ல நடக்கிறார். எத்தனை நல்ல மனிதர் இல்லே?

யாரு?

உதய்தான்? அகல்யா நான் உன்கிட்டே கொஞ்சம் மனசு விட்டுப் பேசணும். தயங்கியபடி ஆரம்பித்தாள் அபிநயா.

என்கிட்டே என்னடி தயக்கம்?!

தயக்கம் பேசுற ஆளிடம் இல்லை, பேசப்போற விஷயத்தின் மேலே!

அப்படியென்ன விஷயம் பேசப்போறே?

எப்படி ஆரம்பிக்கிறதுன்னு தெரியலை, ஆனா எனக்கும் உன்னை விட்டா நம்பிக்கையான ஆள் வேற யாரு இருக்காங்க?

அபி பேசப்பேச ஏதும் குறுக்கிடாமல் கேட்டபடி இருந்தாள் அகல்யா, உனக்கு என் வீட்டைப்பற்றி நல்லாத் தெரியும்.அக்கா மேல நான் எத்தனை பாசம் வைத்திருந்தேன். அவளுக்கு கல்யாணம் ஒரு அரக்கனோட நடந்தது. தன்னாலேயே அவ வாழ்க்கையை முடிச்சிகிட்டா. தாலிகட்டின மனைவியோட இழப்பை விடவும், படுக்கைக்கு ஆளில்லையேன்னு கொஞ்சம் கூட மனுஷத்தன்மையே இல்லாம என்னைப் பெண் கொடுக்கச் சொல்லி வந்தான் ராட்சஷன்.

அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே கல்யாணம் மேலேயும், ஆண்கள் மேலேயும் என்னையும் அறியாம ஒரு வெறுப்பு உண்டாச்சு.

இங்கே வந்து வெறும் சேவை நோக்கம் மட்டுமே கொண்ட என் மனசில் இப்போ இலேசா ஒரு சலனம் ஏற்பட்டிருக்கு?

அப்படியா? ஆச்சரியமாய் விழி விரித்தாள் தோழி.

இது தப்பா சரியான்னு எனக்குத் தெரியலை. சில நாட்களி லேயே இது சாத்தியமான்னும் புரியலை, ஆனா இவங்கதான் என் குடும்பம்ன்னு மனசில தோணுது. உனக்கே தெரியும். நான் வெறும் இனக்கவர்ச்சியில் மயங்குபவள் இல்லைன்னு!

எல்லாம் ஓ.கே. அபி நீ ஒரு விஷயத்தில் முடிவெடுத்தா அது சரியாத்தான் இருக்கும். சரி நீ சொல்ற அந்த ஆள் யாரு?

சில நிமிட தயக்கத்திற்குப் பின், உதய் என்றாள்.

அவரா?

ம்...அவரோட பேச்சு, குணம் நிலா எல்லாமே என்னை ஈர்த்து விட்டது அகல்யா. கண்டிப்பா நிலாவுக்கு ஒரு நல்ல அம்மாவா என்னாலே இருக்க முடியும். ஆனா மனைவியோட நினைவிலேயே வாழ விரும்புற உதய் என்னை ஏற்றுக் கொள்வாரான்னு தெரியலை.

உன்னை அடைய உதய் ரொம்பவும் கொடுத்து வைச்சிருக்கணும் அபி. நீ கவலையை விடு. நான், ஆதவன் மூலமா பேசறேன். நிச்சயம் உனக்கு நல்ல முடிவு கிடைக்கும்.

நன்றி அகல்யா, இன்னொரு சந்தேகம்.

என்னவோ?

நீயும்....ஆதவனும்.....

ம்..ஒருத்தரை ஒருத்தர் விரும்புறோம்.

அடிப்பாவி இதைப்பற்றி ஏன் என்கிட்டே சொல்லவே இல்லை,

இப்பத்தானே நாங்களே ஒருத்தருக்கு ஒருத்தர் சொல்லிட்டு இருக்கோம். ஆமா நீ எப்படி கெஸ் பண்ணினே?

நீ சொல்லாம கொள்ளாம ஊருக்குப் போனியே அன்னைக்கு அவருடைய நடவடிக்கைகளில் இருந்து கொஞ்சம் ஊகித்தேன். நீ இல்லேன்னதும் ரொம்பவே கவலைப்பட்டார். ஆபீஸ் முடிச்சிட்டு வந்து நீ எல்லாரைப் பத்தி பேசினாலும், ஆதவனைப் பற்றி பேசும் போது மட்டும் உன் குரல் குழையும். முகம் வெட்கம் கலந்து பிரகாசிக்கும்.

நல்ல டிடெக்டிவ்டீ நீ. பேசாம நர்ஸ் வேலையை ராஜினாமா பண்ணிட்டு துப்பறியும் நிறுவனம் தொடங்கிடு.



உங்க காதல் எப்படி துவங்கியது?

அதையேன் கேட்குறே? ஆபீஸ்லே முதல் நாளே அவருடைய முதல் பார்வையிலேயே ஒரு ஈர்ப்பு விழுந்திடுச்சு. ஒவ்வொரு முறையும் செய்கையாலயும் பார்வையாலயும் அந்த அன்பை மறைமுகமா வெளிப்படுத்திகிட்டே இருந்தார். ஆனா நேரடியா சொல்ல ஆரம்பிக்கும் சமயமெல்லாம் ஏதாவது ஒரு தடங்கல் இருந்தது. க்டைசியா இந்த ட்ரிப்பில்தான் தன் மனசில் உள்ளதை வெளிப்படையா சொன்னார். நானே நீ வந்ததும் இந்த சந்தோஷமான விஷயத்தை பகிர்ந்துக்கணும்ன்னு இருந்தேன். நாளைக்கே ஆபீஸ்லே இதைப்பற்றி அவர்கிட்டே பேசி உதய்யின் பதிலை கேட்கச் சொல்லிடறேன். தோழியின் நம்பிக்கை தொனிக்கும் வார்த்தையில் ஆனந்தமாய் குளிக்கச் சென்றாள் அபிநயா.

## 13

**என் நினைவுப் போர்வைக்குள்**
**நிதம் நிதம் முட்டி மோதும்**
**மூச்சுக் காற்று நீ...!**

ஆதவன் நான் உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும்?!

கல்யாணத்திற்கு முன்னாலேயே மேடம் கட்டளை எல்லாம் போடறீங்க?

கட்டளை இல்லை ரிக்வெஸ்ட் அபிக்கு உதய் மேல ஒரு அபிப்ராயம் இருக்கு. ஆனா உதய்கிட்டே நேர்ல சொல்ல தயக்கம். அதனால் நீங்கதான் அவர்கிட்டே பக்குவமா பேசணும்.

வரவர நான் புரோக்கர் மாதிரி ஆயிட்டேன். முதல்ல நிதிலா. அப்புறம் நம்ம விஷயம். இப்போ அபிநயா, உதய், இப்படியே நடந்துகிட்டே போச்சுன்னா இவ்விடம் காதலை சொல்லப்படும்ன்னு ஒரு போர்டே போட்டுடலாம் போலயிருக்கு.

கிண்டலா! ஏதோ பொறுப்பான மனுஷனாச்சே, பேசி ஒரு நல்ல முடிவா சொல்லுவீங்கன்னு பார்த்தா?

கண்டிப்பா அபி, ரொம்ப நல்லவங்க, உதய்யும் வயசில் சின்னவன் தானே, நான் இன்னைக்கே பேசறேன்.

நன்றி! ஆதவன் இந்த பிஸினஸ் டல்லடிச்சாலும் கைவசம் நல்ல தொழில் இருக்கு. கவலையில்லை பொழைச்சிக்கலாம்.

அடி! கணவன் எவ்வழியோ மனைவி அவ்வழி! கண்ணை மூடிகிட்டு என் பின்னாலேயே வா!

மாட்டேன்! தெரியாம கீழே விழுந்து பல்லை உடைச்சிகிட்டா அப்புறம் என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டீங்களே?

நீ குடுகுடு கிழவியானாலும் நீதான் என் மனைவி!

இருவரும் இன்பமாய் சிரித்தார்கள்.

அகல்யா! உன் கம்ப்யூட்டரில் நீ வரைந்த கண், காது, உதடுகள் எல்லாமே என்னுடையது தானே?!

ஆஹா எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?

ஆதவன் காலரைத் தூக்கிவிட்ட படியே, அய்யா கண்ணில் இருந்து எதுவுமே தப்பாது.

அதெப்படி! ஆதவன் நான் அழகாய் வரைந்திருந்தால், உங்களுக்கு கண்டுபிடிக்க சிரமமேயில்லாமல் போயிற்று. எதையும் மிகைப்படுத்தி காட்டுவதுதானே ஓவியம்.

வாயைப் பார்! அவள் காதை வலிக்காமல் திருகினான்.

இப்படியெல்லாம் செய்தால் கல்யாணத்திற்கு ஒப்புக் கொள்ளவே மாட்டேன். அவள் பொய்க் கோபம் காட்டிட...

உன்னை எப்படி ஒப்புக்கொள்ள வைப்பதென்று எனக்குத் தெரியும். அவளை இழுத்து மடியில் கிடத்தி அதரங்களைப் பற்றினான் ஆதவன். வேகமாய் வந்தடைந்த முத்தம் உதடுகளால் உயிரை உறிஞ்சும் முத்தம். ஆண்மகனின் தொடுதலும், அன்பின் பரிசான முத்தமும் அத்தனை சுவையோ! சிலாகித்து விலகினாள்.

என்ன ஆதவன் இது ஆபீஸ்லேயே போய்....

நீயும்! உன் கண்முன்னே வருகிறேனா பாருங்கள்?

ஆதவன் அகல்யாவின் கைகளைப் பற்றிக் கொண்டான். அப்படி ஏதும் சொல்லாதே அகல்யா எத்தனையோ இழப்புகளை கடந்து வந்து விட்டேன். ஆனால் உன் இழப்பை தாங்கும் சக்தியில்லை என்னிடம்! தழுதழுத்த குரலில் ஆதவன் கூற,

என்னால் மட்டும் உங்களைப் பிரிந்து இருக்க இயலுமா ஆதவன். அவன் நெஞ்சில் புதைந்து கொண்டாள் அகல்யா.

ஹவ் டூ யூ பீல் உதய்?

பைன் சார். அபிநயா என்னை நல்லா கவனிச்சிக்கிறாங்க.

இஸிட், நானும் அகல்யாவும் மேரேஜ் பண்ணிக்க முடிவு செய்திருக்கோம் உதய்.



வாவ்! நான் ஆஸ்பிட்டல் வந்ததும் நல்ல நல்ல விஷயங்கள் எல்லாம் நடக்குதே!

நல்ல விஷயம் எங்களுக்கு மட்டுமல்ல உதய் உங்களுக்கும் தான்.

எனக்கா?

நான் நேரடியா விஷயத்திற்கே வர்றேன். நான் உங்க பாஸ்தான் ஆனா இதுவரையில் ஒரு நல்ல ப்ரண்டாத்தான் உங்களை ட்ரீட் பண்றேன் அது உண்மைதானே!

கண்டிப்பா ஸார். அதிலென்ன சந்தேகம்.

அந்த உரிமையில் உங்க சொந்த வாழ்க்கையில் தலையிடப் போறேன். அதாவது மூக்கை நுழைக்கப் போறேன்.

இதுக்குத்தான் மூக்கு பெருசா இருக்கணும் என்பது?

விளையாட்டு வேண்டாம் பி சீரியஸ்?

அப்போ ஏக்கு என்ன ஸார் ஆச்சு?

உதய்?

மூச்! சொல்லுங்க...

மறுமணத்தைப் பற்றி என்ன நினைக்கறீங்க?

விதவைகள் மறுமணம் வரவேற்கப்பட வேண்டிய விஷயம்

நான் கேட்டது உங்க மறுமணம். இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படி தனியாவே காலம் தள்ளப் போறீங்க.

-ஸார்...! உதய் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு குரலைத் தழைத்துப் பேசினான். எனக்கும் இந்த பத்து நாளா ஒரே குழப்பமாத்தான் இருக்கு.யார்க்கிட்டே பேசறதுன்னு இருந்தேன். நல்லவேளை நீங்கள் ஆரம்பிச்சிட்டீங்க?!

சொல்லுங்க...

ஸார்...நானும் உஷாவும் எவ்வளவு ஆழமாய் நேசிச்சோம். எத்தனை அன்னியோன்யமாய் வாழ்ந்தோங்கிறது உங்களுக்கே தெரியும். அவ போனபிறகு நிலா மட்டும்தான் என் எதிர்காலம் என்று நினைச்சேன்.ஆனா எனக்கு ஏதாவது ஆயிட்டா நிலாவோட நிலைமை?

ஏன் இப்படியெல்லாம் பேசறீங்க உதய்.

இப்போ நிலா அபிநயா கிட்டே நல்லா ஒட்டிக்கிட்டா. அவங்க குணமும், அன்பும், அருகாமையும் எனக்கு காயம்பட்ட மனசுக்கு ரொம்பவே ஆறுதலா இருந்தது. ஆனா இதையெப்படி

அவங்ககிட்டே கேட்பது என்று தெரியலை, நல்ல மனசோட உதவி செய்தவங்களை காயப்படுத்த முடியலை.

எனக்கு இன்னொரு நெருடலும் இருக்கு ஸார். இப்போ நான் அபிநயாவை இப்படி நெனைச்சால் அது உஷாவுக்கு செய்யற துரோகமாயிடுமோன்னும் தோணுது. நான் என்ன செய்யட்டும்.

உதய் நீயும், உஷாவும் உண்மையான காதல் மனமுள்ளவர்கள். காதல் நாம விரும்புறவங்களை வாழ்த்ததான் வைக்குமே தவிர அழிக்க நினைக்காது. நிலாவோட எதிர்காலத்திற்காகவும், உன்னோட வாழ்விற்காகவும் நீங்க எடுத்திருக்கிற இந்த முடிவை உஷா வாழ்த்துவாங்களே தவிர, வருத்தப்பட மாட்டாங்க. அதனால தேவையில்லாததை போட்டு குழப்பிக்க வேண்டாம்.

ஆனால் அபிநயா?

இன்பேக்ட்! அபிநயாவை மனசிலே வைச்சுத்தான் நான் உங்ககிட்டே பேசியதே. நீங்களும், அதே வேவ் லேனில் இருந்ததாலே என் வேலை சுலபமா முடிஞ்சிடுச்சு.

அபிநயா நிலாவோடு உள்ளே வந்தாள்.

அபி மேடம் உதய்யிடம் பேசிட்டேன். உங்களுக்கு தோணின அதே உணர்வு உதய்க்கும் தோணியிருக்கு சீக்கிரமே உங்க கல்யாண வேலையைத் துவங்கிட வேண்டியதுதான்.

அபிநயா! என் நிலைமையை நீங்க புரிஞ்சுப்பீங்கன்னு நம்பறேன். ஏற்கனவே மணமாகி உஷாவோட வாழ்ந்த வாழ்வை என்னாலே இன்னமும் மறக்க முடியலை, ஆனா கூடிய விரைவில் என் மனசு மாறும் அதுவரையில்!

நான் காத்திருப்பேன் உதய் என்னால நிலாவுக்கு ஒரு நல்ல அம்மாவா இருக்க முடியும் என்று உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது இல்லையா?

எனக்கிருக்கு. அபிநயா. அதனால்தான் நான்...! உங்க அழகோ இனக்கவர்ச்சியோ என்னை பாதிக்கலை, அன்பு, பரிவு, கருணை ஒவ்வொரு நொடியும் உங்க அருகாமைக்கு என்னையும், நிலாவையும் நீங்க ஏங்க வைச்சிட்டீங்க?!

நிலாக்குட்டி அபியை நம்ம வீட்டுக்கு கூட்டிட்டுப் போலாமா?

ஹை ஜாலி...

ஆனா அபி வர்றதா இருந்தா ஒரு கண்டிஷன்...



என்ன?

குழந்தை பயத்தோடு அகல கண்களை விரித்தது.

அபியை இனிமே நீ அம்மான்னு கூப்பிடணும்.

ஏற்கனவே நான் அவங்களை அம்மான்னுதான் கூப்பிட்டு கிட்டிருக்கேன்.

உண்மையா? என்றான் உதய்

அம்மான்னு நிலா கூப்பிட்ட அந்த வார்த்தைதான் என்னை சிந்திக்கவே வைத்தது. உங்களுடைய மனசில் என்ன இருக்குன்னு தெரியாமல் பிஞ்சு நெஞ்சில் ஆசையை விதைக்கக் கூடாது இல்லையா? அதனால்தான் அமைதி காத்தேன்.

திருமணத்திற்கு முன்பே மூன்று பேர் மனதிலும் எத்தனை ஒற்றுமை, கண்டிப்பாக உங்கள் மணவாழ்வு சிறப்படையும் வாழ்த்துக்கள் என்று உரைத்து விட்டு இந்த இனிய செய்தியை அகல்யாவிடம் சொல்ல புறப்பட்டான் ஆதவன்.

## 14

என் மனம் செதுக்கிய
உள்ளார்ந்த உணர்வுகளாய்!
சிற்பமென உனை செதுக்கிவிட்டேன்.

ஊரில் விசாலம்மாவுடன் கலந்துபேசிட முடிவு செய்து பெரியவரிடம் சென்றார்கள்.

எனக்கு பூரண சம்மதம் அதிக சந்தோஷம் ஆதவன், என் மகனுக்கு ஒரு நல்லது நடக்குதுன்னா தகப்பனா நான் பெருமைப்படணும் இல்லையா? நானே நேர்ல போய் அந்தம்மாவிடம் பேசி சம்மதம் வாங்கிடறேன்.

நன்றிப்பா!

நன்றியேன் ஆதவன் என் பிள்ளைக்கு நான் பெருமைப்படறேன்.

சரிப்பா... பெரியவரின் காலில் விழுந்து வணங்கினான் ஆதவன் அதே நேரம் நந்தகுமாரும் உள்ளே நுழைய,

வாடா, நந்து ஆதவன் ஒரு இனிப்பான விஷயம் கொண்டு வந்து இருக்கிறான் அவனுக்கு கல்யாணம் பொண்ணு யாருன்னு தெரியுமா?

சொன்னால்தானே தெரியும்.

அகல்யா! உங்க ஆபீஸ்லே வேலை செய்யற பெண்ணாம்.

நந்துவின் மனம் விநாடி சுருங்கி பின் கங்கிராட்ஸ் என்றதோடு நிறுத்திவிட்டான்.

எத்தனை நல்ல தோழன் நீ. உனக்கு திருமணம் என்று சொல்கிறேன்... அப்போ கூட கொஞ்சமும் அக்கறை இல்லாம போறான் பாரு?

அது அவனோட குணம்ப்பா. சொந்த தங்கையோட திருமணத்தையே பெருசா நினைக்காதவன் என் கல்யாணத்தை எப்படி நினைப்பான். விடுங்கப்பா?!

நான் இன்னும் இரண்டே நாளில் உன் கல்யாண ஏற்பாடுகளை கவனிக்கிறேன். நிதிலா இருந்திருந்தா ரொம்பவும் சந்தோஷப்பட்டு இருப்பா..

நித்தி எப்போ ஹனிமூன்ல இருந்து வர்றாளாம்ப்பா?

இன்னும் 10 நாள் ஆகும். கண்டிப்பாக உன் கல்யாணத்திற்கு இருப்பா ஆதவா!

என்னோட இரயில் டிக்கெட்டுக்கு புக் பண்ணிடேன்.

சரிப்பா ஆதவன் வெளியேறவும், நந்தகுமாரின் உடலும், மனமும் கொதித்தது.

ஆதவன் இவனின் பால்ய நண்பன்தான் என்றாலும் ஆரம்பம் முதலே, பள்ளியில் ஆகட்டும், வீட்டில் ஆகட்டும். அவனைப் பெருமையாகப் பேசிப்பேசியே பழகுவார்கள். அப்போதே அவனுக்கு ஆதவன் மேல கோபம்தான்.

நாளடைவில் உள்ளுக்குள் வன்மமாகவே மாறியது எப்படியோ தட்டுத்தடுமாறி பணம் கொண்டு படிப்பை முடித்து வெளியே வந்தால், தொழில் செய்ய ஆதவனையும் கூட்டாய் சேர்த்தால்தான் பணம் என்று சொல்லிவிட்டார் அப்பா.

இது தவிர அவன் மனைவி விஷயத்தில் கைகழுவ வேண்டிய நிலையில் இருந்த வீணாவை தானாய் முன்நின்று திருமணம் பேசி முடித்துவிட்டான் ஆதவன். வாழ்வின் ஒவ்வொரு முக்கிய கட்டத்திலும் நண்பனைப் போல் இருந்து, இக்கட்டில் இப்போதும் கூட அவன் அடைய நினைக்கும் அகல்யாவை போய் கல்யாணம் வரையில் போய் இருக்கிறானே! இவனை என்ன செய்தால் தகும். கோபமான மனம் உடனே இடித்துரைத்தது.



இப்போது அவன் முக்கியமல்ல அகல்யா, அவளின் அழகான உடல், தானே வலியப் போய் பேசியும் மறுத்தவள் இவனிடம் சேர்ந்து விட்டாள் என்றால், என்னை அவமானப்படுத்தத்தானே இவனுக்கு நான் இளப்பமா இவர்களுக்கெல்லாம் தகுந்த பாடம் கற்பிக்கிறேன் நான் என நினைத்துக்கொண்டான்.

அவன் எண்ணியபடியே நடக்கவும் ஒரு சந்தர்ப்பம் வந்தது.

அன்று ஆஸ்பிட்டலில் உதய் எபபோ டிஸ்சார்ஜ் ஆகிறார் அபிநயா..

இன்னும் இரண்டு மூன்று நாட்களாகும் என்று டாக்டர் சொன்னார்.

நம்ம இரண்டு பேருடைய முகூர்த்தமும் ஒரே நாளில்தானாம் பெரியவர் சொன்னார். அதுக்குள்ளே வந்தா சரி.

ஆதவன் ஸார்... அகல்யாவோட அம்மாகிட்டே பேசியாச்சா?

பெரியவர் போய் இறங்கி இருப்பார். அகல்யாவும் போனில் தகவல் சொல்லிவிட்டாளாம்.

அப்படியா?

அப்போ நான் கிளம்பறேன். அகல்யா மட்டும் ஆபீஸில் இருப்பா...

இன்னும் ஏன் ஸார் ஆபீஸில் போட்டு வதைக்கறீங்க? கல்யாணப்பொண்ணு ரெஸ்ட் எடுக்க வேண்டாமா?

உங்க தோழிக்கு என்னைப் பார்க்காம இருக்க முடியலையாம் சிரித்தபடியே சென்றான் ஆதவன்.

காரில் ஏறும் சமயம் செல்லில் இருந்து அழைப்பு வந்தது. ஆபீஸ் நெம்பர்.

ஹலோ....!

எங்க ஆதவன் இருக்கீங்க?

உன்னைப் பார்க்கத்தான் ஆபீஸ் வருகிறேன். ஆதவனுக்கு எப்போ டிஸ்சார்ஜ்ன்னு கேட்டுட்டு பில் ரெடி பண்ணிடச் சொன்னேன்.

அப்படியா? டைமாகுமா?

இன்னும் 20 நிமிடங்கள் உடனே என்னைப் பார்க்க வேண்டுமா கண்மணி! ஒரு முத்தம் கொடு உடனே பறந்து வந்து விடுகிறேன்.

வந்ததும் ஒண்ணு என்ன பத்துகூட தருகிறேன்.

குட், போனை வை, டைம் வேஸ்ட் பண்ணுவது எனக்குப் பிடிக்காது. லைனை கட் பண்ணியவனின் மொபைல் மறுபடி அலறியது.

ஹலோ....பெரியவர் பேசினார்.அகல்யாவோட அம்மாவைப் பார்த்து பேசினேன். அவங்க அந்தக்காலம் இல்லை கொஞ்சம் தயங்கறாங்க. அப்புறம் ஒப்புக்கிட்டாங்க. ஆனா உன்னை நேரில் பார்க்கணுமாம். அகல்யாவுக்கு தெரியாமல் உன்னிடம் ஏதோ பேசணுமாம்.

என்ன விஷயம் அப்பா ஏதும் பிரச்சனையா?

அதெல்லாம் இல்லைப்பா ஏதோ குடும்ப விவகாரம் வர்றியா? இரண்டு மணி நேரம் தானே காரிலேயே வந்திடேன். பேசி முடிச்சிட்டு அவங்களையும் கூட்டிட்டு வந்திடலாம். அகல்யாவுக்கு ஒரு சர்ப்பரைஸா இருக்கும் இல்லே.

சரிப்பா! என்றவன் காரை செலுத்தினான் ஊருக்கு செல்லும் முடிவுடன்! அம்மாவுடன் வந்து நின்றால் இவளும் ஆச்சரியப்படக்கூடும் தவிரவும் வருங்கால மாமியார் முக்கிய விஷயம் என்று சொல்லியும் உடனே போகாமல் அலட்சியப்படுத்துவது அத்தனை நன்றாக இராதே?! என்ற அவனின் எண்ணம். அவன் மனங்கவர்ந்த தேவதைக்கு எத்தனை பெரிய கஷ்டத்தைத் தரப் போகிறது என்பதை உணராமல் செய்தது!

நடப்பதை முன்பே உணர்ந்தால் ஒவ்வொருவரும் ஞானி ஆகிவிடுவார்களே?!

## 15

என்றுமே நீ நினைவில் அகலாமல்!
நிஜத்தில் அகலமாய்!
இதயம் என்னும் மரப்பேழைக்குள்
நான் பாதுகாக்கும் முத்து நீ...

அகல்யாவின் கண்களில் கனவுகள் ஓடின... அவளுக்கும் ஆதவனுக்கும் திருமணம் நடந்து விட்டதைப் போலவும், இவள் ஜாடையிலும், அவன் ஜாடையிலும் குழந்தைகள் பிறப்பதைப் போலவும் கனவு வந்தது.

அறைக்கதவு திறக்கப்பட்ட ஓசை அவளைக் கலைத்தது, புன்னகைக்க முயன்றவளின் முகம் சிரிப்பை விழுங்கியது? இரத்த



சிவப்பான கண்களுடன் அங்கே நின்றிருந்தது நந்தகுமார். அவனது கையில் சிகரெட்டும் இன்னொரு கையில் மதுபாட்டிலும் இருந்தது. அகல்யாவைப் பார்த்து அசிங்கமாய் இளித்தான்.

என்ன அகல்யா என்னை எதிர்பார்க்கவில்லையா? பயப்படாதே கல்யாணமாமே கேள்விப்பட்டேன்... பேசியபடியே நாற்காலியில் அமர்ந்தான்.

ஆமாம்.. இப்போது இவள் அவனைத் தாண்டிதான் போக வேண்டும். திறந்திருந்த கதவு ஆறுதலாய் இருந்தது. ஆதவனும் இன்னும் பத்து நிமிடத்தில் வந்து விடப் போகிறான், அதுவரையில் பொறுமையாய் பேச்சு கொடுப்பதே நல்லது. தவிரவும் நண்பனுக்கு மனைவியாகப் போகிறவள் என்று இவனும் எல்லை மீற மாட்டான் என்று எண்ணினாள். ஆனால் நந்துவின் மீதான எந்த எதிர்பார்ப்பும் நன்மையை விளைவிக்காது என்ற எண்ணம் அவளுக்கு அப்போது வரவில்லை.

என்கிட்டே இல்லாத எது அகல்யா அவன்கிட்டே இருக்கு? பணம், அந்தஸ்து எல்லாவற்றிலும் உயர்ந்தவன் நான்.

அவர்கிட்டே நல்ல பண்புகள் உண்டு.

பண்பாம் பண்பு, அப்படி நான் உன்னிடம் என்ன கேட்டுவிட்டேன். ஒருமுறை மட்டும், பிறகுக்கு தெரியப்போகிறதா விடு. ஆனால், உன்னைப்பார்த்த நாள் முதல் என்னை இம்சிக்கிறாயே? அந்த இம்சை தாளாமல் அவனுக்கு மனைவியான பிறகு, தொட்டால் அது பெரிய பாவம் கண்மணி.

இப்போதும் நான் அவருக்கு மனைவிதான் மனதளவில்...

மனது இதைப்பற்றி என்றுமே நான் எண்ணியது இல்லை.

நீங்கள் மனிதனாய் இருந்தால்தானே...! ஒரு பெண்ணை விரும்பி மணந்து கொண்டு அவள் இறந்து சிலகாலத்திற்குள்ளேயே இப்படி பெண்பித்து பிடித்து அலைகிறீர்களே, உங்கள் காதல் எதில் சேர்த்தி?!

சரியாகச் சொன்னாய் டியர்! நமக்கு இலாபம் கிடைக்கும் விஷயங்களை மட்டும்தான் நினைக்கவோ, செய்யவோ வேண்டும். உன்னைப்போலத்தான் என் மனைவியும் எப்போது பார்த்தாலும் நை..நை..என்று சொல்லிக்கொண்டே இருந்தாள். அவள் நிலைமை என்னவானது பார்த்தாயா? ரொம்பத் தொல்லை பண்ணினால் கார் பிரேக் ஒயரை கட் பண்ணிவிட்டேன். இப்போது நீ எனக்கு கிடைக்கப்போகும் லாபம். இதற்காக எதையும் செய்ய நான் தயார்.

அடப்பாவி, நான் ஒன்றும் வியாபாரப் பொருள் அல்ல, லாபம் அடைய!

உன்னால் நான் அடையப் போகும் இலாபம் பணம் அல்ல சுகம்!

நந்தகுமார்...!

உஷ்...கத்தாதே... நான் உன்னை விடப் பெரியவன் இல்லையா? எத்தனை கஷ்டப்பட்டு இந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறேன். அதை மிஸ் பண்ணுவேனா!

சலனப்பட்ட மனதால் தீங்கு இழைக்காதே! அவர் உன்மேல் நல்ல அன்பு வைத்திருக்கிறார். அதை இழக்க முயலாதே எந்நேரமும் அவர் வந்து விடுவார். முதலில் இடத்தை காலி பண்ணு.

ஓஹோ...அதுதான் பயமா? நான்தான் அவனை வரவிடாமல் செய்து விட்டேனே!

அவன் கொக்கரிப்புடன் சிரிக்க, பாவி அவரை என்ன செய்தாய்?

கத்தாதே நான் ஒண்ணும் செய்யவில்லை அவனை! உன் அம்மாவை சந்திக்க ஊருக்குப் போகிறான்..

இந்த செய்தி அவளை மேலும் அதிர்ச்சி அடையச் செய்தது. எப்படியும் ஆதவன் வந்துவிடுவான் என்ற நினைப்பில் தான் அவள் பேச்சில் நேரம் கடத்தியதே ஆனால், இவன் வேறு மாதிரி அல்லவா பேசுகிறான்.

கடவுளே இவனிடமிருந்து தப்பிக்க வேண்டுமே! கடவுளே, மன தைரியத்தை மட்டும் எக்காரணம் கொண்டும் இழக்கக் கூடாது. இவனிடம் தன்னை இழக்கும் தருணம் வந்தால், தன்னையே மாய்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணினாள்.

டைம் வேஸ்ட் பண்ணாதே கண்ணு! கிடைச்ச சந்தர்ப்பத்தை பயனுள்ளதாக்கிக்கணும் வா!

மேஜை மேல் பாட்டில் முக்கால் பாகத்திற்கும் அதிகமாய் காலியாகி இருந்தது. கட்டாயம் மதுவின் ஆதிக்கம் அதிகம்தான். தைரியத்துடன் போராடினால் நிச்சயம் வெற்றியடைந்து விடலாம் என்னும் நம்பிக்கையில் அவள் யோசித்த போதே! தள்ளாடியபடியே அருகில் வந்தான் நந்தகுமார்.

இது உனக்கு நல்லதில்லை நந்தகுமார். மரியாதையாய் வழியை விடு. உனக்கும் ஒரு தங்கை இருக்கா, என்னையும் அந்த மாதிரி நினைச்சுக்க...



அவன் மேலும் கிட்டே வர, அருகிலிருந்த மதுபாட்டிலை இரண்டாய் உடைத்தாள். அதன் கூரான பகுதியை கையில் வைத்துக் கொண்டாள்.

அத்தனை திமிராடி! உனக்கு? எங்கே குத்து பார்க்கலாம். அவள் கையைப் பிடித்து இழுத்தான் பாட்டில் உடைந்து சுக்கு நூறாய் சிதற, பலம் கொண்ட மட்டும் அவனைத் தள்ளிவிட்டு கதவருகில் ஓடினாள்.

ஆபீஸ் கேட் பூட்டியிருக்க நீ எங்கேயும் போக முடியாது! அவளைப் பார்த்தபடியே வந்தவன் உடைந்த பொருளின் மீது கால்பட்டு சரியாய் கூரான கண்ணாடித் துண்டின் மேல் விழுந்தான். அவன் உடலில் ரத்தம் கசிந்தது அகல்யாவுக்கும் தலை சுற்றிட அப்படியே மயங்கிச் சரிந்தாள்.

அகல்யா கண்விழித்தபோது கண்களுக்கு முன்னே ஆதவன்தான் தெரிந்தான். எல்லாம் மறந்து அவன் மார்பில் ஒட்டிக் கொள்ள வேண்டுமென்ற ஆவலை அடக்கியபடி, ஆதவன் நீங்க?

முதல்ல ரெஸ்ட் எடு!

உனக்கு ஒண்ணுமில்லை! இதோ உதய், அபி உங்கம்மா கூட வந்திட்டாங்க கூப்பிடவா,

ஆனா..நந்தகுமார்.

அவனும் இதே ஆஸ்பிட்டலில்தான் இருக்கார். கண்ணாடி சில்லு ரொம்பவும் ஆழமா இறங்கியதால, இரத்தம் அதிகம் போய் இருக்கு. குடிச்சு குடிச்சு உடம்பு முழுவதும்... குணமாக நாளாகும் கோமாவில் இருக்கிறான்.

கடவுளே...?!

அவர் துணை உனக்கு எப்பவுமே உண்டு அகல்யாம்மா... ஆதரவாய் அவள் அருகில் அமர நெஞ்சில் சாய்ந்து விம்மினாள்.

ச்சு! ஏன் அழறே? அதான் நான் வந்திட்டேனே!

நீங்க எங்கே போனீங்க?

பெரியவரிடமிருந்து போன் வந்தது. உங்கம்மா ஏதோ என்னிடம் பேச விரும்புவதாய், அதுவும் நீ அறியாமல்?! சரி வருங்கால மாமியார் ஆயிற்றே? போகலாம். இல்லையென்றால், என் பெண்ணைத் தரமாட்டேன் என்று மறுத்துவிட்டால் என்ன செய்வது? அதனால் போய் பேசிவிட்டு, அவர்களையும் இங்கே அழைத்து வந்துவிடலாம். உனக்கும் ஒரு சர்ப்பரைஸாக இருக்குமே என்று எண்ணினேன்.

அப்புறம்...! அதனால்தான் சொல்லாமல் போனீர்களாக்கும், நீங்கள் வந்து விடுவீர்கள் என்ற நம்பிக்கையில் நான் இருந்தேன்.

அதான் வந்திட்டேனே! கண்ணம்மா!

அப்போ ஊருக்குப் போகலையா?

ம்...அரைகிலோ மீட்டர் தூரத்திற்கு போனபிறகு, உன் வீட்டு முழுமுகவரி கேட்டு பெறலாம் என்று பெரியவரின் எண்ணுக்கு தொடர்பு கொண்டேன் ஆனால், அவரோ உன் அம்மாவிடம் பேசி சம்மதம் பெற்று விட்டு பாதி வழி வந்து விட்டதாகவும் சொன்னார். எனக்கோ நெருடல், முதலில் பேசியது அவர் குரலேதான். சரி உன்னுடன் தொடர்பு கொள்ளலாம் என்றால் ஆபீஸ் போன் புல் எங்கேஜ்டு! உதய்யிடம் பேசினால்...

ஏற்கனவே நந்து உன்னிடம் முறைகேடாக நடந்தது பற்றியும் சொன்னான். ஒருவேளை என்னை வெளியேற்றிவிட்டு, உனக்கு ஏதும் தொல்லை தருகிறானோ என்று பயந்து அங்கே வந்தால் நீ மயங்கி சரிகிறாய்! அவன் இரத்த வெள்ளத்தில் பிதற்றுகிறான். நீதான் ஒருவேளை அவனைத் தாக்கினாயோ என்று நினைத்தேன். ஆனால் உனக்கும், நந்துவுக்கும் உள்ள இடைவெளி, அவன் விழுந்துகிடந்த நிலை என்று உணர்ந்து இரண்டு பேரையும் இங்கே கொண்டு வந்து சேர்த்தேன். போன் செய்ததும் நந்துவின் வேலை என்று புரிந்தது.

நான் ரொம்பவே பயந்திட்டேன் ஆதவன், நந்து இத்தனை மோசமா நடப்பான்னு, ஏதாவது நடந்திருந்தா? நடுங்கிய அவள் உடலை இறுகப் பற்றினான். அவளும் மேலும் அந்த அணைப்பில் ஒண்டிக் கொண்டாள்.

உள்ளே வரலாமா? கோரஸாய் குரல் கேட்டு அத்தனை பேரும் உள்ளே நுழைய, இருவரும் கலைந்தார்கள்.

என்னம்மா, இப்போ பரவாயில்லையா? அம்மா தலையை வருடி அக்கறையோடு கேட்க,

ஆதவன் ஸார் பக்கத்திலே இருந்தாலே மேடமிற்கு ஒண்ணும் வராது உதய் சொல்லிட மறுபடியும் சிரிப்பு அலை மோதியது. பெரியவர் வந்து அகல்யாவின் கைகளைப் பற்றிக் கொண்டார். என்னை மன்னிச்சிடும்மா. உன்னோட இந்த நிலைமைக்கு என் மகன்தான் காரணம்ன்னு நினைக்கும் போது எனக்கு அவமானமா இருக்கும்மா!



அய்யோ! என்னப்பா எத்தனை பெரியவர் நீங்க என்கிட்டே போய் மன்னிப்பெல்லாம் கேட்டுகிட்டு!

எனக்கு ஆதவன் ஒரு மகன்தாம்மா!

நந்து கண்விழிச்சி வரும்போது நிச்சயம் நல்லவனாத்தான் வருவான்.

எனக்கு நம்பிக்கையில்லைப்பா. அவனுக்கு எவ்வளவு நன்மை செய்து இருப்பே?

இத்தனை பெரிய தீங்கிழைக்க எப்படி முடிந்தது? அவர் ஆற்றாமையில் புலம்பிட?

உதய் வாய் திறந்தான். இந்த ரூம் ரொம்ப ராசி அகல்யா. நான் டிஸ்சார்ஜ் ஆன மறுநாளே நீ அட்மிட் ஆயிட்டே? இதிலே அபியோட உள்குத்து ஏதாவது இருக்குமா?

சும்மாயிருங்க? அபியின் தலை தட்டலில் உதய் பயந்து நடுங்க, மறுபடியும் சூழ்நிலை மாறியது.

அய்யா, நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும். சீக்கிரமே நல்ல நாள் பாருங்க. கல்யாணத்தை முடிச்சிடலாம் விசாலம்மாள் பேசிட,

ஒரு வார்த்தை பேசினாலும் நச்சுன்னு பேசுறீங்கம்மா? பாயிண்ட்டைப் பிடிச்சுட்டீங்க?

நாளைக்கே ஜோஸியரைப் பார்த்து நாள் குறிச்சிடலாம், என்ன சம்மதம்தானே! பெரியவர் கேட்க அனைவரும் தலையாட்டினார்கள்.

நிலாவும் அபிநயாவும் இணைந்து நின்றார்கள். ஆதவன் அகல்யாவை காதலாய்ப் பார்த்தான். முதல் நாள் பார்த்த அதே புதிரான பார்வையை வீசி இதழ்களைக் குவித்தாள். அதைத் தொட்டு விடத் துடித்த விரல்களை கஷ்டப்பட்டு கட்டுப்படுத்தினான் ஆதவன்.

காதல் தேவதைகள் அவர்களை அட்சதை தூவி ஆசீர்வதித்தார்கள். இருபது கோடி நிலவுகள் ஒருசேர புன்னகைத்தது போல் அகல்யாவின் முகம் பிரகாசித்தது.

முடிந்தது

**லதாசரவணன்**
lathasharn@gmail.com